# நாளைய நாயகன்



மறைமுதல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய நாயகன்

சிறுவர்(மலர்) நாடகங்கள்

**மறைமுதல்வன்**

கவிதாலயம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளைய நாயகன்**
சிறுவர்(மலர்) நாடகங்கள்

மறைமுதல்வன் (ஜீ. பி. வேதநாயகம்)

முதற் பதிப்பு : ஜூலை 2000

பக்கங்கள் : 163

வெளியீடு : கவிதாலயம் பதிப்பகம்.
102/2. தபாற்கந்தோர் வீதி.
திருகோணமலை.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

அச்சாக்கம் : ஏ கலர் பிரிண்ட்
712. புளூமென்டால் வீதி. கொழும்பு - 15.

விலை : 125.00 ரூபா

**Naalaiya Naayagan**
**Siruvar(malar) Naadagangal**

**Maraimuthalvan (G. P. Vethanayagam)**

**First Edition** : **July 2000**

**Pages** : **163**

**Published by** : **Kavithalayam Pathippagam,**
**102/2, Post Office Road,**
**Trincomalee.**

**Copyright** : **Author**

**Printed at** : **A Colour Print**
**712, Bloemendhal Road, Colombo - 15.**

**Price** : **Rs. 125.00**

# சமர்ப்பணம்





பாலோடு பைந்தமிழ் உணர்வையும்
ஊட்டி வளர்த்த அன்புருவான அன்னை
மதலேனா வேதநாயகம்,
நற்றமிழ் எழுத்தாளனாய் நான்
கால் பதிக்கக் காலாயமைந்த-
தமிழே தமதுயிர் மூச்செனப்
பெருமையுடன் வாழ்ந்த அருமைத் தந்தை
வித்துவான் நீ.மே.யோ. வேதநாயகம்
ஆகியோருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | 05 |
| | என்னுரை | 09 |
| | கலைஞர் பட்டியல் | 12 |
| 01. | பழமொழிகள் பொய்ப்பதில்லை | 13 |
| 02. | ஏழைக்கும் காலம் வரும் | 22 |
| 03. | துப்பறியும் சிங்கம் | 32 |
| 04. | எதிரொலி | 40 |
| 05. | நாளைய நாயகன் | 50 |
| 06. | ரோசக்காரன் | 59 |
| 07. | யாருக்கு வெற்றி? | 69 |
| 08. | பகையும் நட்பும் | 76 |
| 09. | நெஞ்சுக்கு நீதி | 85 |
| 10. | சத்திய சோதனை | 92 |
| 11. | தாயுள்ளம் | 101 |
| 12. | ஓர் அனுபவம் பாடமாகிறது | 111 |
| 13. | வீட்டுக்கு வீடு | 118 |
| 14. | பனி விலகியது | 127 |
| 15. | ஒரு சிறுவன் "ZOO" பார்க்கப் போகிறான் | 138 |
| 16. | தப்புத் தாளங்கள் | 149 |
| 17. | ஓர் உயிர் ஊசலாடுகிறது | 157 |




## அணிந்துரை

'நாளைய நாயகன்' என்னும் இந்த நூலின் ஆசிரியராகிய திரு. கி. ப. மறைமுதல்வனை அவரது பள்ளிப் பருவம் முதல் நான் அறிவேன். இவர் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளி; நாடகங்களை எழுதியும் அரங்கேற்றியும் நாடகங்களில் நடித்தும் சாதனை படைத்தவர்; வானொலி ஒலிபரப்பாளர். இத்தகைய பன்முகப்பட்ட கலைத்துறை அனுபவங் கொண்ட மறைமுதல்வனது முதலாவது சிறுவர் நாடகத் தொகுப்பாகிய இந்த நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சிறுவர்க்குரிய இலக்கியம் வளர்ந்தோருக்கான இலக்கியத்திலும் வித்தியாசமானது. இதை எல்லோரும் இலகுவில் படைத்துவிடல் முடியாது. சிறுவர்களது உள்ளப்பாங்கினை உணர்ந்து, அவர் களது நாட்டம், ரசனை என்பவற்றைப் புரிந்து, அறிவுத் தளத்தை அறிந்து அவற்றுக்கு ஏற்றவாறு படைக்கப்படவேண்டிய இலக்கியம், இது. சிறுவரிலக்கியப் படைப்பாளி, தாம் சிறுவர்களுக்கு எதை, எவ்வாறு, எதற்காகச் சொல்லப் போகிறார் என்பது பற்றிய தெளிவு உள்ளவராக இருத்தல் வேண்டும். அவர் உயர்ந்த சிந்தனைத் தளத்தில் நின்று திட்டமிட்டு, பின் சிறுவர்களது மட்டத்துக்கு இறங்கி வந்து சிறுவரோடு சிறுவராக நின்றுகொண்டு இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தைப் படைத்தல் வேண்டும். இது இலகுவில் கைவரும் காரியமல்ல.

மறைமுதல்வன் இந்த வகையில் இலக்கியம் படைத்து வெற்றி பெற்றிருக்கிறார் என்பதை இந்நூல் நமக்குக் காட்டுகிறது. இதிலும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் இது ஒரு நாடக நூல் என்பது. சிறுவ ரிலக்கியத்திலும் நாடகம், எழுத்தாளனது படைப்பாற்றலுக்கு ஒரு சவாலாக இருப்பது. அவன் நாடகத்தைப் பின்னும்போது, ஒவ் வொரு கணமும் அதில்வரும் ஒவ்வொரு கதாபாத்திரமுமாகத் தன்னை மாற்றிக்கொள்ளல் வேண்டும். அந்த அந்தப் பாத்திரத்தின் குணவியல்புகள் துலங்கும்படி, சொற்களைப் பொறுக்கியெடுத்து உரையாடலைத் தொடுத்தல் வேண்டும். நாடகம் எழுதும்போது எழுத்தாளன் அந்த உரையாடலைத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டேயிருக்கிறான். மறைமுதல்வனும் இவ்வாறு துளித் துளியாகச் செதுக்கிச் செதுக்கித்தான் 'நாளைய நாயக'னை உருவாக்கியிருக்கிறார் என்பது இந்த நூலைப் படிக்கும்போது நன்றாகப் புலனாகிறது.

வளர்ந்தவர்களுக்கு இருப்பது போல சிறுவர்களுக்கும் தனியான ஓர் உலகம் இருக்கிறது. வேடிக்கை, விளையாட்டு, அழுகை, சிரிப்பு, போட்டி, பொறாமை என்று பல்லினமான கோலங்கள் அங்கே உண்டு. இவற்றுக்கு அப்பால் சிறுவர்கள் அண்டிவாழுகின்ற வளர்ந் தோருடைய வாழ்வுப்போக்கும் சிறுவர்களைப் பாதிக்கின்றது. இவையெல்லாம் சிறுவர் உலகின் யதார்த்தங்கள். மறைமுதல் வனது நாடகங்கள் இந்த யதார்த்தங்களையே கருவாகக்கொண்டு புனையப்பட்டிருக்கின்றன.

இங்குள்ள நாடகங்களில் பெரும்பாலானவை கிராமியக் களத் திலே, கிராமப் பிள்ளைகளை முக்கிய பாத்திரங்களாகக் கொண்டு



புனையப்பட்டவை. மலையகத்துப் பிள்ளைகளையும் வடக்கு கிழக்குப் பிரதேசப் பிள்ளைகளையும் அவர்களுடைய வாழ்விடச் சூழலுக்குரிய மண்வாசனையுடன் இவற்றிலே காணலாம். அந்த அந்தப் பிரதேசத்துப் பேச்சுநடையும், அதன் பரிமளிப்பும் இந்நாட கங்களுக்கு அணிசெய்கின்றன.

இவை ஒலிபரப்பு நாடகங்கள், செவிப்புலன் ஊடாக நுகர்வதற் காகவே எழுதப்பட்டவை. ஆயினும், மேடைக்கு ஏற்றவகையில் ஆங்காங்கே சிற்சில மாற்றங்கள் செய்துகொண்டால், இவற்றுள் பெரும்பாலானவற்றை மேடைநாடகங்களாகவும் ஆக்கிக் கொள்ள லாம். மறைமுதல்வன் இவற்றுள் சிலவற்றைத் தொலைக்காட்சி நாடகங்களாக மாற்றியும் எழுத வேண்டும் என நான் விரும்புகிறேன்.

நமது பாடசாலைகளில் சிறுவர்கள் நடிப்பதற்குப் பொருத்தமான நாடகங்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. அந்தக் குறைபாடு இந்த நாடகங்கள் மூலம் ஓரளவு நீங்குகிறது. இவை சிறுவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற நாடகங்கள்! ஆதலால், இந்த நூலை ஆசிரியர்களும் மாணவர்களும் விரும்புவார்கள் என்று நம்புகிறேன்.

சிறுவர்கள் வேடிக்கை நாடகங்களையும், அதீத கற்பனை நாடகங் களையும் விரும்புவார்கள் என்பது உண்மையே. ஆயினும், சிறுவர் நாடகத்திலும் ஓர் அர்த்தம் இருத்தல் வேண்டும் என்ற நோக்கிற்கு அமைய ஆசிரியர் இவற்றை யதார்த்த நாடகங்களாகப் படைத் திருக்கிறார்.

சிப்பிக்கு உள்ளே முத்து இருப்பது போல இங்குள்ள நாடகம் ஒவ்வொன்றின் உள்ளும் சிறுவர்க்கு ஏற்ற அருங்கருத்து ஒவ் வொன்று புதைந்து கிடக்கின்றது. அந்தக் கருத்தினைத் தூக்கிக் காட்டும் ஒவ்வொரு திருக்குறளை நாடகங்களுக்கு மணிமுடியாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டியிருக்கிறார், ஆசிரியர்! இந்தக் குறள்களை சிறுவர்கள் இப்பொழுது மனனம் செய்துகொண்டால் போதும், பின்நாளில் அவற்றின் பொருளை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொள் ளலாம்.

இந்த நூலில் உள்ள நாடகங்களில் பெரும்பாலானவை, நான் இலங்கை வானொலியில் சிறுவர் மலர் நிகழ்ச்சி நடத்திக்கொண் டிருந்தபோது, அந்த நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பானவையாகும். இவற்றை இப்பொழுது படித்துப் பார்க்கையில், இவை ஒலிபரப்பான அந்தநாள் ஞாபகம் எனது மனத்தில் விரிகிறது. சிறுவர்கள் நாட கங்களிலே நடிப்பதில் காட்டும் ஆர்வமும், நாடகத்தின் சுட்டிசை யைக் கேட்கும்போதெல்லாம் அவர்கள் அடைகின்ற குதூகலமும், நிகழ்ச்சியின்போது அவர்களிடையே ஏற்படும் மனக்கிளர்வும் கலகலப்பும் - ஆகிய எல்லாம் இனிய நினைவுகளாக இப்பொழுது எனது மனத்தில் வந்து நிறைகின்றன!

'நாளைய நாயகன்' என்னும் இந்த நூலே இலங்கையில் தமிழிலே வெளியாகும் முதலாவது சிறுவர் நாடகநூல் என எண்ணுகிறேன். பயனுள்ள இந்த நூலைப் படைத்து அளித்ததன்மூலம் அன்பர் கிறகரி மறைமுதல்வன் நமது சிறுவர் இலக்கியத்துறைக்கு சிறப் பான ஒரு பணிபுரிந்திருக்கிறார். மறைமுதல்வனை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இவரது இலக்கியப்பணி தொடர்க! வளர்க!!

**வ. இராசையா.**

40, லில்லி அவெனியு,
கொழும்பு 06.



# என்னுரை

வானொலியில் சிறுவர் மலருடன் எனக்கான பரிச்சயம் 1957இல் ஆரம்பமானது. அப்போது சிறுவர் மலர் நிகழ்ச்சியைத் தயாரித் தளிக்கும் வானொலி மாமாவாக இருந்த திரு. குஞ்சிதபாதம் அவர்களால் குட்டி வளர்க்கப்பட்ட ஒரு குட்டி நடிகன் நான். அக் காலத்தில் நான் நடித்த பெரும்பாலான நாடகங்கள் இலக்கிய, புராண, வரலாற்றுக் கதைகளையோ மந்திரதந்திரக் கதை களையோ அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டிருந்தன. எனது 12வது வயதில் நான் முதலேற்ற பாத்திரம் ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லட்' என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பின்னர் 71 - 82 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 'வானொலி மாமா' வாக இருந்த எனது முன்னாள் தமிழாசிரியர் திரு வ. இராசையாவின் வேண்டுகோளுக்கிணங்க, 'சிறுவர் மலரு'க்கென சில நாடகங் களை எழுத நேரிட்டது. இதிலுள்ள நாடகங்களில் ஓரிரண்டு நீங்கலாக மற்றவையனைத்தும் அப்போது எழுதப்பட்டவையே.

அதற்கு முன்னரே பல வானொலி, மேடை நாடகங்களை எழுதிய அனுபவம் உள்ளவனாக இருந்தபோதிலும்கூட, சிறுவர்க்கான நாடகங்களை எழுதுவதில் எதிர்ப்படக்கூடிய சிரமங்களை அப் போதுதான் உணர முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடு விட்டுக் கூடு பாயாது நாடக எழுத்து சித்திப்பதில்லை. சிறுவர்களின் பகைப்புலனில், அவர்களது வாழ்வோடியைந்த சம்பவங்களையோ அவர்களது உளப்பிரச்சினைகளையோ மைய மாகக்கொண்டு அவர்களது குணஇயல்புகளோடு ஒன்றித்து நாடக வடிவில் அதை வெளிக்கொணரும்போது, அந்தப் பாய்ச்சலில் கூட்டை உடைத்துவிடாது குந்தியிருப்பது கொஞ்சம் கஷ்டம்தான்.

அதிர்ஷ்டவசமாக அப்போது நான் ஓர் ஆசிரியனாக எட்டியாந் தோட்டையில் பணியாற்றியமையானது, சிறுவர்களோடு பழகவும் அவர்களது உளமுரண்பாடுகளையும் வாழ்க்கைப் பின்னணியை யும் அவதானிக்கவும் அறிந்துகொள்ளவும் கூடியதாய் அமைந் தமையால் இயல்பு மீறாது எழுத முடிந்தது. இதிலுள்ள பெரும் பாலான நாடகங்கள் மலையகச் சிறுவரை மையமாகக் கொண் டமைந்தமைக்கான காரணமுமதுவே.

வாழ்வின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்ற அதேவேளையில் சிறுவர்களின் மனத்தில் நல்ல கருத்துக்களை வேரூன்றச் செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவது சிறுவர்க்கான இலக்கியம் படைப்போரின் நோக்காக இருக்கவேண்டுமெனும் எனது கருத்துடன் எவரும் மாறுபாடு கொள்ளமாட்டார்கள் என்றே எண்ணுகிறேன்.

நூலாக்கத்திற்காக இந்நாடகங்களை நான் மீண்டும் வாசிக்க நேர்ந்தபோது என்னிடம் அப்பாடசாலையில் கற்ற அந்த மலையகச் சிறுவருடன் மீண்டும் வாழ்ந்ததான அனுபவத்தைப் பெறமுடிந்தது.

எந்தக்காலத்திலும் சிறுவர்கள், நாடகங்களை வாசிப்பதிலும் நடித்துப் பார்ப்பதிலும் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பதை அனுபவத்தில் கண்டுணர்ந்துள்ளேன். ஆனால் அவர்களுக்கேற்ற சிறுவர் நாடக நூல்கள் மிக அரிதாகவே உள்ளன. இந்நாடகங் களில் பல வாசித்துச் சுவைப்பதற்கும் நடித்து மகிழ்வதற்கும் ஏற்றவையாகவே உள்ளன. அவ்வாறு இதிலுள்ள நாடகங்களை நடிக்க விரும்புவோர் எனக்கும் ஒரு வரி அறியத் தந்தால் மகிழ்வேன்.



இதிலுள்ளனவற்றில் முதல் நான்கு நாடகங்கள் யாழ்ப்பாண வழக்கிலும், 12 நாடகங்கள் மலையக பேச்சுவழக்கிலும், இறுதி யாக உள்ள ஒன்று இலக்கிய நடையிலும் எழுதப்பட்டுள்ளன.

நாடக எழுத்துத் துறையில் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித் ததுடன், இந்நூலுக்கான அணிந்துரையையும் சிறப்புடன் மனமுவந் தளித்த எனது முன்னைநாள் ஆசிரியரும் 'தகவம்' இலக்கியவட்ட அமைப்பாளருமான ஆசிரியர் திரு. வ. இராசையா அவர்களுக்கும், சிறுவர்க்கான இந்நூலை எழுத்துப் பிழைகளின்றிக் கொண்டு வரும் கவனத்தோடு கணனி எழுத்தமைப்புச் செய்து தந்த உதயகுமாருக்கும், 'லக்சு கிரா.ஃபிக்ஸ்' அச்சக ஊழியர்களுக்கும், இந்நூலை வெளிக்கொணர முன்னின்றுழைத்த நண்பர்கள் சிதம்பரப்பிள்ளை சிவகுமார், வி.என்.எஸ். உதயச்சந்திரன் ஆகியோருக்கும் என்றென்றும் நின்று வழுத்தும் என் நன்றிகள்.

**ஜீ. பி. வேதநாயகம்**
102/2, தபாற்கந்தோர் வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'சிறுவர் மலர்' நிகழ்ச்சியில் ஒலிபரப்பான நாடகங்களில் பங்குகொண்ட குட்டிக் கலைஞர்கள்:**

*பிரபாகரன் பாலசிங்கம்*
*ஸ்ரீதர் பிச்சையப்பா*
*ரவிசங்கர் சண்முகம்*
*ஸ்ரீதர் பரமசிவம்*
*நஸீம் ஹிக்மத்*
*நித்யகல்யாணி காராளபிள்ளை*
*பரமேஸ்வரி கருப்பையா*
*ரஞ்சினி பத்மநாதன்*
*நூர்ஜஹான் புஹாரி*
*கிருஷாந்தி சபாரட்ணம்*
*கலா கந்தசாமி*
*பவானி கந்தசாமி*
*கீதா கோவிந்தராஜன்*
*உதயகுமார் தங்கம்*
*தவயோக வேணியன்*
*மகாதேவன் ஐங்கரன்*
*விஜயசந்திரன் முத்தையா*
*சிவகுமாரன் விபுலானந்தா*
*சுப்பையா ஆறுமுகம்*
*விஜயசேகர் மணியம்*
*சுரேஷ்குமார் செபஸ்தியாம்பிள்ளை*
*செபஸ்தியன்*
*ராஜேஸ்வரன்*



# பழமொழிகள் பொய்ப்பதில்லை

***அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய***
***வல்லார்நட் பாய்ந்து கொளல்.*** *(குறள்: 795)*

பாத்திரங்கள்: வசீகரன்
ரவி
தாஸ்
சாந்தினி (ஆசிரியை)
மகிழ்
மங்கை (மகிழின் தாய்)
செல்லாச்சி (ரவியின் பாட்டி)

ரவி: மச்சான் வசி, வெளிக்கிடு இண்டைக்கு சுபாஸில போய் ஒரு வெட்டு வெட்டுவம்...

வசீ: நான் வரேல்லை... ரவி... என்னிட்டக் காசில்லைடா...

ரவி: காசு... பெரிய காசு... யூ டோண்ட் வொறி... மச்சான்... என்னிட்ட இருக்குது... அது காணும்... நீ ஏறு சைக்கிள்ள...

தாஸ்: (வந்தபடி) என்னடா ரெண்டு பேரும் என்னை விட்டிட்டு எங்கேடா வெளிக் கிட்டனியள்...

ரவி: ஆ... தாஸ்... நீயும் வந்திட்டியா... உன்னை அப்போத கிளாஸ்ல தேடினன்... காணேல்ல. பின்ன ஸ்கூலுக்கு நீ வரேல் லையாக்குமெண்டு நினைச்சன்...

தாஸ்: அதுசரி இப்ப எங்க வெளிக்கிடுறியள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி: வேற எங்க ஹோட்டலுக்குத்தான்ரா... போய் ரெண்டு ரோல்ஸ்சும் சாப்பிட்டு ஐஸ்கிறீமும் அடிச்சால் எப்பிடி இருக்கும்...

தாஸ்: என்னட்ட ஒரு அஞ்சுரூவாதான் மச்சான் இருக்கு... அதுவும் கொப்பி வாங்க வைச்சிருக்கிறன்.

ரவி: உன்ர காசு உன்னோட இருக்கட்டும்... இண்டைக்கு என்ர காசில அடி, வா... எடன் சைக்கிளை...

தாஸ்: டேய் வசீ, எங்கிட பிரெண்சுகளுக்குள்ள ரவியப்போல தாராளமாச் சிலவளிக்கக்கூடிய ஆள் ஒருத்தனுமில்லை... என்ன சொல்றாய்...

வசீ: அதெண்டால் மெய்தான்... அதிருக்க என்னெண்டு மச்சான் ரவி உனக்கு இவ்வளவு காசு கிடைக்குது... எங்கிட வீட்டில எண்டால் காசு கீசெண்டு கதைச்சால் காணும், அடிதான் விழும்...

ரவி: எனக்கு எப்ப காசு வேணுமெண்டாலும் உடன கிடைக்கும்... ஒண்டில் அத்தானிட்டக் கேப்பன்... இல்லையெண்டால் பெத்தாச்சி தருவா...

தாஸ்: நீ ஒரு லக்கியான ஆள்தான்... நீ பிரெண்டா வந்ததால ஏதோ எங்கிட பாடும் பறவாயில்லை...

ரவி: என்னடா சைக்கிள் மெதுவா ஓடுது... கெதியா உழக்கன்ரா...

வசீ: இந்தா பார் இப்ப அமத்திக் காட்டிறன்... அந்த பஸ் போகமுந்தி நாங்கள் நிப்பம் ரவுணில...

(இடையிசை)

மங்கை: என்னடி முழிசிக்கொண்டு நிக்கிறாய்... வாய் திறந்து சொல்லன்ரி... எங்கேடி காசு...

மகிழ்: (அழுதபடி) ம்... ம்... காசு... காசு... வந்து... ஸ்கூல்ல துலைஞ்சு போய்ற்றுது...

மங்கை: என்னடி என்னடி... துலைஞ்சு போய்ற்றுதோ... வாடி இஞ்சாலை... காசைத் துலைய விட்டுப்போட்டு நீ எங்கேடி வாய்பாத்துக் கொண்டிருந்தனி... உனக்கு இப்ப நாலு தந்த னெண்டால்தான் புத்தி வரும்... (அடிக்கிறாள்)



மகிழ்: அம்மா... என்ர அம்மா... அடியாதையணே... நான் இனித் துலைக்கமாட்டன்... கவனமாயிருப்பன்...

மங்கை: நான் நெருப்புக்குள்ள நிண்டு மாவை வறுத்து, அப்பத்த பலகாரத்த சுட்டு வித்து, அஞ்சு பத்துச் சதமாய் சேத்துத் தந்துவிட, முழுசாக் கொண்டு போய் இருவதையும் களவு குடுத்துப்போட்டு வந்து நிண்டு மாய்மாலக் கண்ணீர் வடிக் கிறியே... அடிச்சு முறிக்க வேணுமடி...

மகிழ்: என்ர அம்மா அடியாதயணை... என்ர அம்மோய்... அம்மா... அம்மா... அடியாதயணை... (அழுதல்)

கிழவி: (வந்தபடி) எடிபிள்ளை... மங்கை, உதென்ன உது? அவளை அடிச்சுக் கொல்லப் போறியே... விடு அவளை... நீ இஞ்சால வாடி பிள்ள மகிழ்...

மங்கை: பாரணை ஆச்சி உவள் செய்திருக்கிற வேலையை... ஏதோ புத்தகமோ கொப்பியோ வேணுமெண்டு கேட்டாளே எண்டு போட்டு, மா வாங்க வச்சிருந்த இருவது ரூவாயக் குடுத்து விட, துலைஞ்சு போச்செண்டு வந்து வாய் கூசாமல் சொல் றாளே... பின்ன இவளை என்ன செய்யிறது... சொல்லெணை பாப்பம்...

கிழவி: அதுக்காக தேப்பனைத் தின்னிப் பிள்ளைய அடிச்சுக் கொல் லப் போறியே... அதுபாவம் ஒரு அப்பிராணி... அவளென்ன செய்வாள்... எந்தப் பாவிப்பெடியோ களவெடுத்துப் போட் டுது... அவன் நல்லாயிருப்பானே... நாசமாத்தான் போவான்... நீ அழாத பிள்ள... மகிழ்...

மங்கை: உப்பஉப்ப பள்ளிக்கூடங்களில கள்ளப் பழக்கம் தான் கூடிக்கொண்டு போவுது...

கிழவி: ஓ... பிறிஞ்சிப்பல்மாருக்கு கள்ளப்பிள்ளையள் ஆர், நல்ல பிள்ளையள் ஆர் எண்டு கண்டுபிடிக்கவும் தெரியுதில்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டைக்கவன் ஜெயராசின்ரை பெடியன் களவெடுத்துப் போட்டானெண்டு போட்டு பிறிஞ்சிப்பல் நல்ல வெளுவல் போட்டிட்டாராம்... பிறகு பாத்தால் களவெடுத்தது வேற ஆரோ பெடியாம்... ஜெயராசு பிறிஞ்சிப்பலோட சண்டைக்கு போய்ற்றான்... நல்ல வேளை... நான் அதில நிண்டன். அவனை ஒரு மாதிரிச் சமாதானப்படுத்தி இழுத்துக்கொண்டு வந்திட்டன்...

மங்கை: (பெருமூச்சுடன்) ம்... ஆரோ செய்த பிழைக்கு ஆருக்கும் தண்டனை குடுக்கிறதே... நீ வாடி மகிழ் சாப்பிட...

கிழவி: நீ போ பிள்ளை... போய்ச் சாப்பிடு... கொம்மா இனிஅடிக்க மாட்டா... பாவம் பிள்ளை... நல்லாப் பயந்து போனாள்... நான் போட்டுப்பிறகு வாறன் மங்கை...

மங்கை: ஓம் ஆச்சி போயிட்டு வாருங்கோ...

(இடையிசை)

வசீ: என்னணை ஆச்சி, எங்கேண போய்ற்று வாறாய்...?

கிழவி: உங்கால பக்கத்து வீட்டைதான் ராசா போய்ற்று வாறன்... அவள் பாவி மங்கை, மேளைப் போட்டு அடி அடியெண்டு அடிச்சு, கொல்லு கொல்லெண்டு கொல்லப் பாத்தாள்... நான் போய் • விலக்குப் புடிச்சுப்போட்டு வாறன்...

வசீ: ஏனணை ஆச்சி மகிழுக்கு அடி விழுந்தது...?

கிழவி: அது பெடிச்சி, பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு போய் இருவது ரூவாக் காசைத் துலைச்சுப் போட்டாளாம்...

வசீ: இருவது ரூவாவோ... எப்பவாம்... துலைச்சவள்...

கிழவி: இண்டைக்குத்தானாம்...

வசீ: இண்டைக்கோ... அப்ப பள்ளிக்கூடத்தில டீச்சரிட்ட அவள் துலைஞ்சதா ஒண்டும் சொல்லேல்லையே...

கிழவி: அது பாவம் ஒரு வாய் பேசாச் சீவன்... அப்பிடியானது களிட்டத்தானே எல்லாரும் தட்டிச் சுத்திறான்கள்... கள்ளன்



காடையன்களை யெல்லாம் பிள்ளையளெண்டு பெத்து பள்ளிக்கூடத்துக்கும் அனுப்புதுகளே... உதுகள் அங்கபோய் என்னத்தப் படிக்கப் போகுதுகள்... நல்லதுகளையும் பழுதாக் கத்தான் உதுகள் பள்ளிக்கூடம் போறது... என்ர பிள்ளையா மட்டும் இருக்கவேணும்... காலை முறிச்சு அடுப்புக்க வைச்சுப் போடுவன்! ஓ!

வசீ: அது சரியணை ஆச்சி... ரவி வீட்டிலை நிக்கிறானோ...

கிழவி: ஆர்... பேரனே... அது தங்கமான பெடி... பள்ளிக்கூடம் விட்டால் நேர வீட்டுக்கு வந்திடும்... காவாலி கடைப்புளி யளோட சேந்து ஊரைச் சுத்திக் கொண்டு திரிய நானும் விடுறதில்லை... அவன்ர கொத்தானும் விடமாட்டார்... அது சரியடா தம்பி, கொம்மா எங்க?

வசீ: அம்மா கொல்லைக்க வேலையா நிக்கிறா... ஏனணை, அம்மாவை கூப்பிடறதே...?

கிழவி: ஒரு பத்திருவது ரூவா காசு மாறத்தான்... அந்தர ஆத்தி ரத்துக்கு தாறதுக்கு உங்கிட கொம்மாவைப்போல வேற ஆர் இஞ்ச இருக்கினம்... உனக்குச் சொன்னால் என்ன தம்பி... இப்ப செலவு வலு மோசம்... அவன்ர கொத்தான்தான் ஏதோ குடும்பத்தைக் கவனிக்கிறான்... அவன் கொண்டாறதும் பத்தாம் தேதியோட சரி... பிறகு சம்பளம் வரையும் இப்பிடித் தான் கடன, கிடன வாங்கி இழுத்தடிக்கிறனான்...

வசீ: அப்ப ரவிக்கு ஏதும் சாப்பாட்டுச் செலவுக்கெண்டு நீங்கள் காசு குடுக்கிறேல்லையோ?

கிழவி: அதென்னது கண்டறியாத ஒரு நூதனப்பழக்கம் இப்ப, பிள்ளையளிட கையில காசு குடுக்கிறதெண்றன்... வீட்டில நாங்கள் குடுக்கிற சாப்பாடு காணாதாமே... அவன்ர கொத் தானும் சரி, நானும் சரி ஏதும் தேவையெண்டால் ஒழிய மற்றப்படி சும்மா ஒரு சதமெண்டாலும் அவன்ர கையில குடுக்க மாட்டம்... அதுதான் அவன் கண்டதுக்கும் ஆசைப் படாத ஒரு ஒழுக்கமான பெடியா வளந்திருக்கிறான்... உன்னோட கூடப்படிக்கிற அவனைப்பற்றி நான் சொல்ல வேணுமே தம்பி, உனக்குத் தெரியும் தானே அவனைப்பற்றி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீ: ஆ... அந்தா அம்மா வாறா... நீங்க கதையுங்கோ... ஆச்சி.

(இடையிசை)

மகிழ்: (இரகசிய குரலில்) தாஸ், என்ன சாந்தினி டீச்சர் கோவமாய்ப் போறா... ஒபீசுக்கோ...

தாஸ்: தெரியேல்லை என்னெண்டு... வழக்கமா கோவப்படமாட்டா... இண்டைக்கு என்னமோ நடந்திருக்க வேணும்...

மகிழ்: ஆ... அந்தா... திரும்பிக் கோவத்தோட வாறா... என்னமோ பிரச்சினை போல...

(மாணவர் கசமுசப்பு ஓய்கிறது)

சாந்: இவ்வளவு நாளும் உங்களை நல்ல பிள்ளையளெண்டு நினைச்சன்... இப்பதான் தெரியுது... உங்களுக்குள்ள கள்ளப் பிள்ளையளும் இருக்கினம் எண்டு... அண்டைக்கொரு நாள் லிண்டாட காசு களவு போச்சுது... கடைசீல இண்டைக்கு என்ர காசையே களவெடுக்கிற அளவுக்கு வந்தாச்சுது...

மகிழ்: (மெதுவாக) அண்டைக்கு என்ர காசும் களவு போனது... நான் டீச்சரிட்டச் சொல்லேல்ல...

சாந்: அங்க ஒருத்தரும் கதைக்கத் தேவையில்லை... காசை எடுத்தாள் மரியாதையாக் கொண்டந்து தந்திட்டால் இந்த முறை மன்னிச்சு விட்டிடுவன்.. இல்லையெண்டால், சோதிச்சுப் பிறகு கண்டுபிடிச்சனெண்டால் பள்ளிக்கூடத்தால ஆளை விலக்க வேண்டித்தான் வரும்... சொல்லிப்போட்டன்...

ரவி: பாரு மச்சான் வசீ எங்கிட கிளாஸ்ல இப்பிடியும் கள்ளப் பயல்கள் இருக்கிறான்களே... அதுவும் டீச்சரின்ரை காசையே களவெடுக்கிறதெண்டால் பாரன்...

சாந்: உஸ்... ரவி அங்க என்ன கதை... எல்லாரும் வெளீல வந்து இஞ்சால நில்லுங்கோ... நான் சோதிக்கப்போறன்... ஒருத்தரும் ஒண்டையும் தொடப்படாது... ம்... ம்... கெதியா வாருங்கோ...

(மாணவர்கள் நடைஒலி)



(மாணவர்கள் இரைச்சலூடே)

மகிழ்: இந்தமுறை களவெடுத்த ஆள் எப்பிடியும் மாட்டத்தான் போறார்...

தாஸ்: உனக்கு விசர், களவெடுத்தவன் தன்ர பாக்குக்குள்ளயே காசை வைச்சிருக்கப் போறானே... எங்கையெண்டாலும் ஒளிச்சிருப்பான்...

மகிழ்: எனக்கு தங்கமதீலதான் சந்தேகம்... அவள்தான் என்ர காசையும் களவெடுத்திருக்க வேணும்...

சாந்: (தூர இருந்து) இதாற்ற பெட்டி...

ரவி: (பயத்துடன்) எ..என்ர பெட்டி மிஸ்...

சாந்: இதெப்பிடி உன்ர பெட்டீக்க வந்தது ரவி...

ரவி: என.. எனக்கு தெரியாது... மிஸ்... (பயம்) எனக்குத் தெரியாது...

சாந்: உனக்குத் தெரியாதெண்டால், அது தானாக கால் முளைச்சு உன்ர பெட்டீக்க நடந்து வந்ததோ...

ரவி: (அழுது) சத்தியமாக... நா.. நான் எடுக்கேல்லை மிஸ்...

சாந்: சரி நீ முதல்ல நட பிறின்சிபல்ட ஒபீசுக்கு... மற்ற எல்லாரும் சத்தம் போடாமல் தங்கிட தங்கிட இடத்தில போய் இருக்கலாம்... ரவி, பிறின்சிபலிட்ட நட...

மகிழ்: பாவம் ரவி, அவனைப் பாத்தால் களவெடுத்திருப்பான் போலை இல்லை... என்ன தாஸ்...

தாஸ்: அதுதான் எனக்கும் ஆச்சரியமா இருக்கு... அவன் அப்படிப் பட்ட ஆளுமில்ல... ஏதோ பிழை நடந்திருக்கவேணும்...

மகிழ்: பிறின்சிபல் கொதிச்சுக்கொண்டு இருந்தவர், நல்ல பூசைதான் விழப்போகுது ரவிக்கு...

ரவி: (தூர இருந்து) ஐயோ அடிக்காதீங்க... சேர்.. அடிக்காதீங்க... சேர்... நான் எடுக்கேல்லை... சேர்... நான் எடுக்கேல்லை... சேர்... (அழுதல்) ஐயோ! அடிக்காதீங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சோக இசை)

வசீ: ரவி! டீச்சர் சொன்ன மாதிரி உன்னைப் பள்ளிக்கூடத்தை விட்டு விலக்கிடுவினமோ, எண்டு நான் பயந்து போனன்... நல்லவேளை அப்பிடி நடக்கேல்லை...

ரவி: நான் செய்யாத ஒரு பிழைக்கு, அடிவாங்க வேண்டி வந்திட்டுதே எண்டதுதான் எனக்கு துக்கமாயிருக்குடா வசீ... ஆரோ களவெடுத்துப்போட்டு என்ர பாக்குக்குள்ள வச்சிட்டான்கள்... கடைசில நான்தான் கள்ளனாயிற்றன்...

வசீ: அப்ப நீ களவெடுக்கேல்லையா... மச்சான்...

ரவி: நான் களவெடுக்காட்டிலும் எனக்கு கிடைச்ச தண்டனை நியாயமானதுதான்... ஏனெண்டால் முந்தி ரெண்டு மூண்டு தரம் வகுப்பில நான் களவெடுத்திருக்கிறன்...

வசீ: உண்மையாவே... ஏன்ரா ரவி... அப்பிடிச் செய்தனி.

ரவி: ஒரு முஸ்பாத்திக்கு... மற்றப் பணக்காரப் பெடியளைப்போல பெரிசா பிறென்சுக்கு சிலவளிச்சுக் காட்டவேணுமெண்டு எனக்கும் ஆசை... ஆனால் வீட்டிலை காசு கேட்கப்போனால் உதைதான் விழும்... அதாலை வகுப்பிலை ஆரும் பெட்டையள் கனக்க காசு கொண்டுவந்தால் மெதுவா கிளப்பீருவன்... அதுகள் லேசில சொல்லாதுகள்... நானும் பிடிபடுறதில்லை... ஆனால் கடைசில ஆரோ களவெடுக்க நான்தான் மாட்டுப் பட்டன்ரா...

வசீ: இப்ப உன்னிட்ட நான் ஒரு உண்மையைச் சொல்லப்போறன் ரவி... கோவப்படாதை...

ரவி: நீ என்ன சொல்லப்போறாய்...

வசீ: டீச்சரின்ரை காசைக் களவெடுத்து உன்ர பாக்குக்குள்ள வைச்சது வேற ஆருமில்லை... நானேதான்...

ரவி: என்னடா வசீ சொல்றாய்... நீ... நீயா...

வசீ: ஓ! நான்தாண்டா... ரவி, நீ பத்துரூபா, இருவது ரூபா காசு கொண்டு வந்து சிலவளிப்பாய், கேட்டால் பெத்தாச்சி தந்தா, அத்தான் தந்தார் எண்டு சொல்லுவாய்... இதுகளையெல்லாம் உண்மையெண்டுதான் நானும் நம்பியிருந்தன்... அவள் மகிழுக்கு அடி விழுந்ததையும், உன்ர பெத்தாச்சி என்ர அம்மாட்ட கடன் வாங்க வாறதையும் பார்த்த பிறகு உன்ரை விஷயத்தில எனக்கு சந்தேகம் வந்திட்டுது... நீதான் வகுப்பில காசு களவெடுக்கிறாய் எண்டு தெரிஞ்சு போச்சு...



ரவி: நீ சொல்லச் சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கடா, வசீ...

வசீ: உன்னைத் திருத்த வேணுமெண்டதுக்காகத்தான் அப்படி ஒரு விஷப்பரீட்சையில நான் உன்னை மாட்டி விட்டிட்டன். நான் செய்தது பிழையெண்டால் என்னை மன்னிச்சிடு மச்சான்...

ரவி: நோ... யூ ஆர் எ றியல் பிரெண்ட். உண்மை நண்பன் எண்டால் அது நீதான்... உன்னை நண்பனா அடைஞ்சதுக்காக நான் பெருமைப்படுறன்... அதோட ஒண்டு சொல்றன்... நான் களவெடுத்த காசுகளை எப்படியாவது இந்த வருஷம் முடியிறதுக்கிடேலை சேத்து திருப்பிக் குடுக்கப்போறன்... எப்படி என்ர தீர்மானம்...

வசீ: உன்ர மனமாற்றம் உண்மையானதெண்டதைக் காட்டுது... உன்ர தீர்மானம்... உன்ர தீர்மானம் நிறைவேற நானும் என்னாலானதை செய்வன் மச்சான்...

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைக்கும் காலம் வரும்

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.** *(குறள்: 131)*

பாத்திரங்கள்: பாலன்
நல்லம்மா
சின்னத்தங்கம்
சாந்தன்
தாஸ்
ஆசிரியர்
வீட்டுக்காரர்

நல்ல: பாலன்... டேய் பாலன்... விடிஞ்செல்லே போச்சு... எழும்பன்ரா...

பால: (கொட்டாவி விட்டு) ஆ... வ்... ஓமணை... ராத்திரி பிந்திப் படுத்ததில விடிஞ்சது கூடத் தெரியாமல் கிடந்திட்டன்...

நல்ல: இந்தா மேனே... இந்தப்பனங்கட்டியோட தேத்தண்ணிய குடிச்சுப்போட்டு சுறுக்கா ஓடியோடிப் போய் உந்த அப்பங்களைக் குடுத்துப்போட்டு கடைல காசையும் வேண்டிக்கொண்டு வா...

பால: சரியணை... வந்து கணக்கும் செய்து முடிக்கவேணும்...

சின்ன: (வந்துகொண்டே) என்ன நல்லம்மா அப்பமெல்லாம் முடிஞ்சுதோ...

நல்ல: ஓ... சுட்டதெல்லாம் முடிஞ்சு போச்சுது...



இருந்துகொள் சின்னத்தங்கம், அஞ்சு நிமிசத்தில சுடச்சுட உனக்குத் தந்திடுறன்...

சின்ன: (பெருமூச்சுடன்) ம்... உன்ர பாடும் இப்பிடியாப் போச்சுதே...

நல்ல: என்ன செய்யிறது சின்னத்தங்கம்... எல்லாம் என்ர காலபலன்... அவரிருந்தால் நானும் ஏன் இப்பிடிக் கஷ்டப்படப் போறன்...

சின்ன: ஒரு நோய் நொடியெண்டு கிடவாமல் இப்பிடி இருந்தாப்போல சாவார் எண்டு ஆர் கண்டினம்...

நல்ல: (கலக்கத்துடன்) அதுதானே சின்னத்தங்கம்... இப்பிடியும் நடக்குமெண்டு நான் கனவிலையும் நினைச்சிருக்கேல்லையே... உந்தப் பொடியும் பெட்டையும் வளர்ந்து ஆளாகிற வரையும் எப்பிடித்தான் னொண்டிழுக்கப் போறனோ தெரியேல்லை...

சின்ன: நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை நல்லம்மா... தகப்பன்ர மூளை பிள்ளையளுக்கு இல்லாமலே போகப் போகுது... பாலன் கெட்டிக்காறன்... இன்னொரு ஏழெட்டு வரிசத்துக் குள்ள அவன் வளர்ந்து ஆளாயிருவான்... பிறகென்ன?

நல்ல: ம்... அவன் கெட்டிக்காறன் தான்... என்ர நம்பிக்கையும் அவன் நல்லா வருவான் எண்டதுதான்...

சின்ன: சரி சரி நேரமாச்சுது... நான் வாறன்... இந்தா காசைப்பிடி (போய்க்கொண்டே) பசியில அதுகள் துடிக்கப் போகுதுகள்...

பால: (வந்தபடி) அம்மோய் நேரஞ் செண்டு போச்சுது... பிந்திப் போனால் பிறகு மாஸ்டரிட்டத் தப்பேலாது... இந்தாணை காசைப்பிடி...

நல்ல: பின்னச் சாப்பிடாமலாடா போகப் போறாய்...

பால: ஓமணை நேரம் போச்செண்றன்... கரியெங்கேணை... இனிப் பல்லை விளக்கி முகங்கழுவி வெளிக்கிடத்தான் நேரம் சரியாயிருக்கும்...

நல்ல: பின்ன ரெண்டப்பத்தக் கட்டிக்கொண்டெண்டாலும் போவன்ரா...

பால: போணை... பொடியள் கண்டால் சிரிப்பான்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல: சாப்பிடாமல் போனால் என்னெண்டெடா படிக்கிறது...

பால: அதெல்லாம் படிக்கலாம்... சும்மா அலட்டாதையணை... நான் போய்ற்று வாறன்...

நல்ல: ம்... சாப்பிடக்கூட இல்லை... உந்த வயசில சாப்பிடக்கூட நேரமில்லாமல் என்ன படிப்போ...

(இடையிசை)

சாந்: டேய் தாஸ், உனக்கு நியூஸ் தெரியுமா?

தாஸ்: என்னடா புதுப்படம் நாளைக்கு வரப்போகுதாம் அதுதானே...

சாந்: அதில்லடா... எங்கிட பாலனுக்கெல்லே ஸ்கொலர்ஷிப் கிடைச்சிருக்குதாம்...

தாஸ்: ஆர் சொன்னது...

சாந்: இப்பதான் பிரின்சிபல் எங்கிட சிவா சேரிட்டச் சொல்லிக் கொண்டிருந்தேர்...

தாஸ்: அவன் சிவா சேறின்ர பந்தம்தானே... அதால சிவா சேர் கூட மார்க்ஸ் போட்டுவிட்டிருப்பேர்...

சாந்: போடா உனக்கொண்டுந் தெரியாதாம்... ஸ்கொலர்ஷிப் எக்ஸாம் பேப்பர் சிவா சேர் திருத்த மாட்டேர்... அத கொழும் புக்கோ வேற எங்கயோ அனுப்பித்தான் திருத்திறதாம்...

தாஸ்: உதொரு பெரிய வேலையே... நான் நினைச்சிருந்தனெண்டால் எடுபட்டிருப்பன்... ஆனால் எனக்கு விருப்பமில்லை...

சாந்: விருப்பமில்லையோ... ஏன்...

தாஸ்: அது பிச்சைக்காறக் காசு... அதில படிக்கிறது எங்களுக்கு மரியாதை இல்லை...

சாந்: உனக்கு வாய்தான் ஆ... அந்தா பாலன் வாறான்...

பால: (இளைத்து) நல்ல வேளை மணியடிகேல்லை... நான் பயந்து பயந்து ஓடியாறன்... மணியடிச்சிட்டுதோ எண்டு...

சாந்: இண்டைக்கு நீ பிந்தி வந்திருந்தாலும் மாஸ்டர் உனக்கு அடிச்சிருக்க மாட்டேர்...



பால: ஏன் அப்பிடிச் சொல்றாய்...

சாந்: நீ ஸ்கொலர்ஷிப்ல எல்லே எடுபட்டிருக்கிறாய்...

பால: போடா நீ சும்மா சொல்றாய்...

சாந்: உண்மையாகத்தான்... வேணுமெண்டால் சேறிட்ட போய்க் கேட்டுப்பாரன்...

பால: உதைப்போய் அம்மாட்டச் சொன்னால் எவ்வளவு சந்தோஷப்படுவா... நான் வாறன் சாந்தன்.

தாஸ்: ஆளுக்குப் புளுகு புடிபடேல்லை...

சாந்: உனக்கு கிடைச்சிருந்தால் நீயும் அப்பிடித்தான் இருப்பாய்...

தாஸ்: இவன் பாலனுக்கு இப்ப கெப்பர் கூடிப்போச்சுது... ஒரு நாளைக்கு அவருக்குச் செய்யிறன் பார் வேலை...

ஆசிரி: இந்த ஸ்கொலர்ஷிப் சோதனையில பாலன் திறமையாச் செய்து எடுபட்டிருக்கிறது இந்தப் பள்ளிக்கூடத்துக்கே ஒரு பெருமை. எனக்குத் தெரியும் பாலன் எடுபடுவான் எண்டு. பாலனைப் போல மற்றவையளும் ஊக்கமாப் படிச்சாத்தான் பிற்காலத்தில நல்ல நிலைக்கு வரலாம். நேற்று நீங்கள் எழுதின கட்டுரையளை எல்லாம் பாத்து முடிச்சிட்டன்... சில ஆக்களுக்கு கட்டுரைத் தலைப்பே விளங்கேல்லை... என் எதிர்காலக் கனவு' என்ற தலைப்பில் எழுதச்சொன்னால் என்னமோ எல்லாம் கிறுக்கி வச்சிருக்கினம்... நான் பாலன்ர கட்டரையை வாசிக்கிறன் கேளுங்க... நான் ஒரு வைத்திய னாக வரவேணுமென்பது என் நீண்ட நாளைய கனவு. வைத் தியத் தொழில் ஒரு உன்னதமான தொழில். மக்களுக்கு மகத்தான சேவையாற்ற..... (ஒலி துரச்சென்று தேய...)

(இடையிசை)

பால: ஐயா, வீட்டுக்காரர்...

வீட்டு: ஆரது?

பால: ஐயா உந்த மரங்களில வீணாப்போற பூ எல்லாத்தையும் நான் புடுங்கட்டே ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு: அது நாங்கள் வடிவுக்கு வளர்க்கிறம்... புடுங்கப்போறியே... போ... போ...

பால: ஐயா அப்பிடிச் சொல்லக்கூடாது...

வீட்டு: இதென்னடா கரைச்சலாக் கிடக்குது... சரி சரி பின்னப் புடுங்கு... கொப்புகளை முறிச்சுப் போடாமல் பாத்துப் புடுங்கு...

பால: மெத்தப் பெரிய உபகாரமையா...

வீட்டு: உதைப் புடுங்கிக் கொண்டு போய் நீ என்ன செய்யப் போறாய்...

பால: மாலை கட்டுவன் ஐயா...

வீட்டு: மாலை கட்டி...

பால: கோயிலுக்கு வாற ஆக்களுக்கு விப்பன் ஐயா...

வீட்டு: ஓகோ... வித்த காசில படம் பாக்கப்போறாய் போல...

பால: இலலை ஐயா... நான் படமே பாக்கிறேல்லை...

வீட்டு: அப்ப காசை எடுத்து ஐஸ்கிறீம் கடலை முறுக்கெண்டு வாங்குவியோ...

பால: இல்லை ஐயா... விக்கிற காசெல்லாத்தையும் பத்திரமாச் சேர்த்து வைச்சிருக்கிறன் ஐயா...

வீட்டு: சேர்த்து என்ன செய்யப்போறாய்...

பால: பிறகு நான் டொக்டருக்குப் படிக்கிற காலத்தில புத்தகங் களெல்லாம் வாங்கத் தேவைப்படும்தானே ஐயா...

வீட்டு: எட (சிரித்து) நீ சரியான ஆள்த்தான்...

பால: ஏனையா சிரிக்கிறியள்... நான் டொக்டராக ஏலாதே...

வீட்டு: ஏன் ஏலாது... உன்ர கொய்யாக்கு என்ன வேலை?

பால: என்ர ஐயா செத்துப்போனார் ஐயா... அம்மாதான் அப்பஞ்சுட்டு வித்து எங்களை வளர்க்கிறா. பாவமையா எங்கிட அம்மா... சரியான கஷ்டப்பட்டுத்தான் உழைக்கிறவ...

வீட்டு: ஏழையள் எப்பவும் ஏழையளாவே இருந்திடுறேல்லைத் தம்பி...



பால: ஓமையா... எங்கிட மாஸ்டரும் அப்பிடித்தான் சொல்லுவர்... ஆனபடியால்தான் நான் படிச்சு, டொக்டராகி அம்மாவை கஷ்டப்படாம வைச்சுக் காப்பாற்ற வேணுமெண்டு நினைச் சிருக்கிறன்...

வீட்டு: உன்னைப்போல எல்லாரும் நினைச்சால் வருங்காலத்தில எங்கிட நாடும் கஸ்டப்பட வேண்டி வராது... இந்தா தம்பி இந்தப் பத்து ரூபாவை வைச்சுக்கொள்...

பால: வேண்டாமையா... எனக்கு நீங்கள் பூத்தந்தால் போதும்...

வீட்டு: சரி... இனி இந்தத் தோட்டம் உனக்குத்தான் சொந்தம்... நீ விரும்பின நேரத்தில வந்து பூப்புடுங்கிக் கொண்டு போக லாம்...

பால: தாங்ஸ் சேர்...

(இடையிசை)

நல்ல: டேய் பாலன் மாவிடிச்சதில நெஞ்செல்லாம் நோகுதடா... நல்ல பிள்ளையெல்லே... சின்னத்தங்கம் வீட்டை போயொ ருக்கால் நான் கேட்டனெண்டு நோவெண்ணை கொஞ்சம் வாங்கியாவன்...

பால: போம்மா... அங்க போனால் தாஸ் பகிடி பண்ணுவான்...

நல்ல: என்னெண்டடா பகிடி பண்றவன்...

பால: அப்பக்காற பாலன்... அப்பக்காற பாலனெண்டு தான்...

நல்ல: அதிலை என்னடா... அப்பக்காறன் எண்டு சொன்னால் குறையே... நாங்களென்ன களவெடுத்து தின்னிறமே அல்லாட்டில் ஆரையும் ஏமாத்திக் கீமாத்திச் சீவிக்கிறமே... உழைச்சுத்தானே சீவிக்கிறம்... உழைப்பைப் பகிடி பண்ணி னால் அவையளுக்குத்தான் கூடாது... நீ போ ராசா...

பால: சரியெணை நீ சொல்றதால போறன்...

(இடையிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாஸ்: டாக்டராகப் போற அப்பக்காற பாலனே, வாரும் வாரும்... என்ன விசயம்...?

பால: அம்மா நோவெண்ணை வாங்கியரச் சொன்னவ...

தாஸ்: இருந்து கொள்... அம்மாட்டச் சொல்றன்... (போய்) அம்மா நோவெண்ணையாம்... பாலனுக்கு... எங்க இருக்குது றாக்கைக்கு மேலயே... (வந்து) இந்தா... கவனமாத் திருப்பிக் கொண்டு வா... உனக்கும் தேவைப்படுகுதெண்டு வைச்சுக் கொண்டிடாதை...

பால: நான் ஏன் வைச்சிருக்கப் போறன்... உடன கொண்டு வந்து தாறன்...

தாஸ்: ஆளின்ர நடப்பைப் பாருங்களன்...

சின்ன: (வந்தபடி) டேய் தாஸ், இங்க லாச்சிக்குள்ள பத்துரூபா வைச்சிருந்தன் கண்டினியே...

தாஸ்: நான் காணேல்லை... அம்மா...

சின்ன: இப்ப இருந்த காசு அதுக்குள்ள எப்பிடி காணாமல் போனது... கால் முளைச்சு நடந்து போயிற்றுதோ...

தாஸ்: இப்ப பாலன் வந்தவன் சிலவேளை அவன்தான்... நான் எண்ணை எடுக்க உள்ளை போனாப் பிறகு எடுத்திருப்பானோ தெரியேல்லை...

சின்ன: அறியாமல் அந்தப்பெடியனல்ல வீண்பழி போடக்கூடாது தம்பி...

தாஸ்: உனக்கொண்டும் தெரியாதம்மா... அண்டைக்கு வகுப்பில கூட சாந்தன்ர பேனையைக் களவெடுத்துப் பிடிபட்டவன்...

சின்ன: மெய்யாவே... ஏழை எளியதுகள் எண்டு பாத்தால் எல்லாம் கள்ளர் காடையளாத்தான் இருக்குது... இப்பவே போய் அவள் நல்லம்மாட்ட கேட்டுப் போட்டு வாறன்...

(இடையிசை)

நல்ல: டேய் உண்மையச் சொல்லு... நீ எடுக்கேல்லை எண்டால் பிறகெங்கால உனக்கிந்தக் காசு...



பால: நான் அது உழைச்சனான்...

நல்ல: பத்து ரூபாவுமோ...

பால: ஓம்...

நல்ல: பொய் சொல்லவும் பழகீற்றாய் என்ன? இரு உன்னை சாப்பாடு தண்ணியில்லாமல் பட்டினி போடுறன்... நான் வயித்தைக்கட்டி வாயைக்கட்டி சேர்க்கிறன்... நீ என்ன டாண்டால் களவெடுத்துச் சேர்க்கிறியோ... (அடித்தல்)

பால: நான் எடுக்கயில்ல உன்னாணை நான் எடுக்கயில்லை... (அழுதல்)

(இடையிசை)

தாஸ்: சாந்தன், அவர் பாலன் பிள்ளையர் இப்ப நல்லா வாங்கிக் கட்டியிருப்பேர்... நான் காசை நைசா எடுத்திட்டு ஆளை மாட்டி விட்டிட்டன்...

சாந்: குடிச்ச ஐஸ்கிறீம் சரியில்லப் போல வயித்தை என்னமோ செய்யுதடா தாஸ்...

தாஸ்: எனக்கும் அப்பிடித்தாண்டா... தலையச் சுத்திறமாதிரிக் கிடக்குது... தியேட்டரிலை சனத்துக்குள்ள நெரிபட்டதால யோவுந்தெரியேல்ல...

சாந்: நான் அப்பவே சொன்னன்... கட்லட்ஸ், றோல்ஸ் எண்டு எல்லாத்தையும் வாங்கித்திண்டு அதுக்கு மேலால ஐஸ் கிறீமும் குடிச்சால் என்னமும் செய்யுமெண்டு...

தாஸ்: டேய்... எனக்கு தலையச் சுத்துது... நான் விழப்போறன் போல கிடக்குது...

(கார் பிரேக் போடும் ஒலி)

வீட்டு: என்ன தம்பிமாரே காரில விழுந்து சாகப் போறியளே... சொஞ்சம் தப்பியிருந்தால் என்னையும் பொலிஸ் கோர்ட் எண்டு இழுத்தடிக்க வைச்சிருப்பியள்...

சாந்: ஐயா, இவன் என்னோட வந்தவன் மயங்கி விழுந்திட்டான்...

வீட்டு: அதுக்கென்ர கார்தானே கிடைச்சுது... சரி சரி எங்க வீடு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்: மருதடி றோட்டில...

வீட்டு: பின்ன ஏறு பின்னால... அவனையும் ஏத்திவிடு... கொண்டு போய் விடுறன்...

(கார் ஓடுகிறது. பிரேக்குடன் நிற்கிறது)

சின்ன: அதென்ன வாசல்ல கார் வந்து நிக்குது... ஐயையோ உதென்ன என்ர ராசா... டேய் தாஸ்...சாந்தன் என்னடா நடந்தது...

சாந்: நாங்கள் படம் பாத்திட்டு வந்தம் மாமி... வாற வழில தாஸ் மயக்கம் போட்டு விழுந்திட்டான்...

சின்ன: ஐயோ... என்ர பிள்ளைக்கு ஆற்ற கண் பட்டுதோ என்னமோ உடம்பெல்லாம் வேற நெருப்பாக கொதிக்குது...

வீட்டு: கொண்டு போய் படுக்க வையுங்க... (திடீரென) தம்பி, நீ இஞ்சையே இருக்கிறாய்...

பால: இல்லை ஐயா, ரெண்டு வீடு தள்ளி அங்கால... இவதான் என்ர அம்மா... (அழுது) நான் இவையள்ட வீட்டில களவெடுத்துப் போட்டனாம்... அதுக்கு மன்னிப்பு கேட்கச் சொல்லி (விம்மி) இஞ்ச கூட்டியந்திருக்கிறா...

வீட்டு: நீ... களவெடுத்ததெண்டோ...

பால: ஓமையா... நான் உங்கிட வீட்டில பூச்சேர்த்து மாலை கட்டி வித்துப் பத்து ரூவா சேத்து வச்சிருந்தன்... அதைத் தான் களவெடுத்த காசாம்... நான் உழைச்சதெண்டு சொல்ல நம்ப மாட்டினமாம்...

தாஸ்: (காய்ச்சலில் பிதற்றுதல்) இல்லையம்மா... இனி நான் களவெடுக்க மாட்டன்... களவெடுக்கமாட்டன்...

சின்ன: என்ன இவன் ஏதொவெல்லாம் புலம்பிறான்...

சாந்: தாஸ்தான் மாமி காசைக் களவெடுத்தவன்...

நல்ல: மெய்யாயே...

வீட்டு: என்னம்மா நீங்கள், இவ்வளவு வயசாகியும் உங்கிடை



பிள்ளையப் பற்றித் தெரியாமல் போயிருக்கிறியள்... ஆரோ எடுத்ததுக்கு இந்தப் பெடியனைப் போட்டு அடிச்சு மன்னிப்புக் கேக்கச் சொன்னால்... எங்கிட வீட்டில பூப்பிடுங்கி வித்துத் தான் அவன் காசு சேர்த்திருக்கிறான்... அப்பிடியான அவன்ர பூப்போல மனசைக் காயப்படுத்திப் போட்டியளே...

சின்ன: ஐயா இதெல்லாம் எனக்குத் தெரியாது... எல்லாம் என்ர பிழை... நான்தான் இப்ப பாலனிட்ட மன்னிப்பு கேக்க வேணும்...

நல்ல: என்ர ராசா, நீ சொல்லச் சொல்ல நான் நம்ப மாட்டன் எண்டிட்டனே... எப்பிடிப் போட்டு உன்னை அடிச்சுப்போட்டன், நான் ஒரு அரக்கி... உந்த அடிச்ச கையை கொள்ளியால தான் சுட வேணும்...

பால: அம்மா...

நல்ல: வாடா வீட்டை போவம்... (அழுது) காலமைல இருந்து என்ர பிள்ளை சாப்பிடக்கூட இல்லை... உனக்கிண்டைக்கு வட்டியும் முதலுமா அஞ்சு முட்டையப்பம் பொரிச்சுத் தந்தால் தான் என்ர மனம் ஆறும். ...

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.*** *(குறள்: 666)*

# துப்பறியும் சிங்கம்

பாத்திரங்கள்: சங்கர்
சேகர்
சுமதி
தாய்

சங்: என்னடா சேகர் கப்பல் கவிண்ட மாதிரி பெரிய யோசினையில இருக்கிறாய்... எக்சாம் வரப்போகுதே எண்ட கவலையே...

சேக: டேய் சங்கர்... எக்சாம் வரப்போகுதெண்டு நான் எப்படா கவலைப்பட்டனான்...

சங்: அதுசரி... படிக்கிறவன்களுக்கெல்லே அந்தக் கவலை எல்லாம்...

சேக: இந்தா சும்மா ஏத்தாதை என்னை... நான் சரியான சூட்டில இருக்கிறன்...

சங்: ஏன் உங்கிட வீட்டுப் பைப்பில தண்ணி வராமல் நிண்டிட்டுதே...

சேக: சங்கர், என்ர கவலை எனக்கு... உனக்கென்ன? நீ உங்கிட வீட்டுக்கு ஒரே பிள்ளை... செல்லப்பிள்ளை...

சங்: செல்லப்பிள்ளையும் வெல்லப்பிள்ளையும்... அட போடா... எங்கட வீட்டில எனக்கிருக்கிற கண்டிப்பு ஆருக்கும் இருக்காது... அதைவிடு... உன்ர கவலை என்ன? அதைச் சொல்லியழு முதல்ல...



சேக: எங்கிட வீட்டில ஒரு சாமான் காணாமல் போயிற்றுது... நீ பெரிய துப்பறியும் சிங்கமெல்லே கண்டுபிடி பாப்பம் அதென்னெண்டு...

சங்: ஒரு மிருகத்தின்ர பேரைச் சொல்லு...

சேக: என்னடா நான் வீட்டில காணாமல் போன பொருளைப்பற்றிக் கேக்கிறன்... நீ என்னெண்டால்...

சங்: அதுக்குத்தான் நீ கேட்டதுக்குப் பதிலைச் சொல்லு...

சேக: மிருகம்தானே... நரி...

சங்: ஒரு நடிகற்ற பேரைச் சொல்லு...

சேக: ம்... நம்பியார்...

சங்: நரி... நம்பியார்... நரி... நம்பியார்...

சேக: என்னடா ஏதும் மந்திரம் சொல்றியே...

சங்: ந... ந... நகை நட்டு ரெண்டில ஒண்டு...

சேக: கரெக்ட்... நீ முதல்ல சொன்னியே அதுதான்ரா நகை...

சங்: சே... ரெண்டாவது சொன்னது காணாமல் போயிருந்தால் லேசாக் கண்டுபிடிச்சிருப்பன்...

சேக: என்ன நட்டே... நட் காணாமல் போனால் ஆரும் இப்பிடியே இருப்பினம்... உனக்குத்தான் கொஞ்சம் நட் லூசாப் போயிற்றுது போல கிடக்கு...

சங்: பாம்பின் கால் பாம்பறியும்... லூசின் நட் லூஸ் அறியும்...

சேக: எப்பிடிடா கண்டு பிடிச்சனி...

சங்: அதுதான் ஐயாவோட கெட்டித்தனம்... எங்கிட வீட்டில எது காணாமல் போனாலும் நான்தான் கண்டுபிடிச்சுக் குடுக்கிறனான்...

சேக: அப்ப எங்கிட வீட்டில காணாமல் போன என்ர தங்கச்சீன்ர மோதிரத்தையும் கண்டு பிடிச்சுக்குடு பாப்பம்...

சங்: கண்டு பிடிச்சுக் குடுத்திட்டால்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக: நீ துப்பறியும் சிங்கம் தான்...

சங்: சரி வெளிக்கிடு, உங்கிட வீட்டை போவம்...

சேக: எங்கிட வீட்டுக்கா...

சங்: பின்ன உங்கிட வீட்டில துலைஞ்சதை இஞ்ச இருந்து கண்டு பிடிக்க ஏலுமே...

சேக: அதில ஒரு பிரச்சினை...?

சங்: என்ன...?

சேக: மோதிரம் துலைஞ்சது அப்பாக்குத் தெரியாது... அதால... நாங்கள் அதைத் தேடுற விஷயமும் அவருக்குத் தெரியக் கூடாது...

சங்: தெரிஞ்சால்...

சேக: தங்கச்சீன்ர தோலை உரிச்சுப் போடுவேர்...

சங்: அப்ப அவர் இல்லாத நேரமாப் போய்த் தேடுவம்...

சேக: இப்ப அப்பா இருக்க மாட்டேர்... ஒபீசுக்கு போயிருப்பேர்...

சங்: அப்ப வெளிக்கிடு...

(இடையிசை)

சங்: நான் கேக்கிற கேள்வியளுக்கு ஒண்டையும் ஒளிக்காமல் பதில் சொல்லவேணும்... விளங்குதே...

தாய்: இதென்னடா தம்பி சேகர்... இதென்ன... இதெல்லாம்...

சேக: நீங்கள் சும்மா இருங்கம்மா... துலைஞ்ச மோதிரத்தை கண்டுபிடிக்கிறதுக்கு கஷ்டப்பட்டுக் கூட்டியந்திருக்கிறன்... குழப்பாதீங்கோ...

சங்: துலைஞ்ச மோதிரம் என்ன மாதிரியானது? தங்கமோ பித்த ளையோ...

சேக: பித்தளையில்லை தங்கம்தான்... பித்தளையெண்டால் உன்னை யேன் இழுத்துக்கொண்டு வாறன்?



சங்: அதின்ர பெறுமதியென்ன?

தாய்: இண்டேக் கணக்குக்கு இரண்டாயிரம் வரும்...

சங்: எப்ப துலைஞ்சது?

சேக: நேற்று...

சங்: எத்தினை மணிக்கு?...

சேக: ஆருக்குத் தெரியும்? துலைஞ்சது நேரம் பாத்தே துலையும்...

சங்: ஆர் போட்டிருந்தது?

சேக: இவள்தான்...

சங்: இஞ்ச வாரும்... ஏன் அழுகிறீர்...?

சுமதி: (அழுதபடி) அப்பாக்குத் தெரிஞ்சால் அடிப்பேர்...

சங்: அழுதாப்போலை துலைஞ்சது வந்திடுமே? .. சரி சொல்லும் காணாமல் போனது உமக்கு எப்ப தெரியும்?

சுமதி: நேற்று காலமை எட்டு மணிமட்டில...

சங்: முகங்கழுவினாப் பிறகா...

சுமதி: ஓ...

சங்: முகங்கழுவேக்கை மோதிரத்தைக் கழட்டி வைக்கிறனீரா?

சுமதி: சவுக்காரம் போடேக்கை சிலநேரம் அது தானாக் கழண்டிடும்...

சங்: பைப்படியில தானே கழுவிறனியள்... வாங்க பைப்படிக்குப் போவம்... இதுதானா சவுக்காரம்...

சேக: ஏன்ரா சவுக்காரத்துக்கும் மோதிரம் துலையிறதுக்கும் என்னடா சம்பந்தம்...

சங்: அதுனக்கு விளங்காது... இதென்ன இதெல்லாம்...?

சேக: புளிஞ்ச தேங்காப்பூ...

சங்: இதேன் இங்க வந்தது... வீட்டிலை குப்பைத் தொட்டியில் லையே?

சேக: இருக்குது ஆனால் இவையள் அதுக்குள்ள கொட்டாயினம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமதி: நீர்தான் சாப்பாடெல்லாம் இதில கொட்டிறனீர்... மற்றவையள பிழைபிடிக்க முதல் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ள வேணும்...

சேக: நானே மோதிரத்தை துலைச்சனான்... அப்பா வரட்டும் சொல் லித்தாறன்...

சங்: நீங்கள் ரெண்டு பேரும் இப்பிடிச் சண்டை பிடிச்சால் என்னால இன்வெஸ்ரிகேஷனை ஒழுங்காச் செய்யேலாது...

தாய்: எல்லாரிலையும் பிழை இருக்கு... இனியாவது ஒழுங்காக் குப்பைக் கூடையில எல்லாரும் கொட்டவேணும்...

சங்: அன்ரி சொல்றதுதான் சரி... அதிருக்க... நேற்று எட்டு மணிக்கு ஆரெல்லாம் இங்க இருந்தவை...

சேக: எல்லாரும்தான்... அம்மா, அப்பா, நான், தங்கச்சி...

சங்: வேற ஆரும் அந்த நேரம் வாறவையே...

சேக: (யோசித்து) ம்... பக்கத்து வீட்டுப் பெட்டை ஒண்டு வாறது பேப்பர் கேட்டு...

சங்: உங்களுக்கு ஆரில சந்தேகம்...

சேக: எனக்கெண்டால் அந்தப் பெட்டேலதான் சந்தேகம்...

சுமதி: ஐயோ பாவமது... நல்ல பிள்ளை...

தாய்: நேற்றது பேப்பர் கேட்டும் வரேல்லை... காய்ச்சலாம் எண்டு சொல்லிச்சினம்...

சேக: களவெடுத்து பிடிபட்டிடுவமோ எண்டு பயத்தில காய்ச்சல் வந்திருக்கும்...

தாய்: உனக்கவளைப் பிடிக்கேல்லை எண்டாப்போல கண்டமாதிரிக் கதைக்கக்கூடாது... அதுகள் நல்ல சனங்கள்...

சங்: அங்கிள் எத்தினை மணிக்கு வேலைக்குப் போறவர்...

சேக: அவர் ஏழரைக்கெல்லாம் வீட்டைவிட்டு வெளிகிட்டுடுவேர்... ஏன் அவர் எடுத்திருக்கக் கூடுமெண்டு யோசிக்கிறியே...



சங்: உன்னில கூட எனக்குச் சந்தேகம் இருக்குது... நேற்று இன்ர வெலுக்கு நீ ஐஸ்கிறீம் வாங்கி குடிச்சனியேல்லே...

சேக: உனக்கும்தானே வாங்கித் தந்தனான்... வடிவாக் குடிச்சிட்டு இப்ப என்னையே மாட்டப் பாக்கிறியே...

சங்: அதுக்குனக்கு எங்கால காசு...

சேக: அது அப்பா தந்த பொக்கற் மணீல வாங்கினான்...

சங்: ஐசீ... எவ்வளவு காசு தாறவர் பொக்கற் மணீயா...

சேக: பத்து ரூவா...

சங்: கூடிப்போச்சு... குறைக்கச் சொல்லவேணும்...

சேக: நீ துப்பறிய வந்தனியோ இல்லாட்டில் எனக்கு அள்ளிவைக்க வந்தனியோ?

சங்: இதாற்ற வீட்டுக் கோழி...

சேக: எங்கிட வீட்டான் தான்...

சங்: கோழி விக்கிறனியளே...

தாய்: சா.... வீட்டுத் தேவைக்கு வளக்கிறதுதான்...

சங்: முட்டை போடுறதே...

சேக: அது முட்டையே போடாதடா...

சங்: ஏன்?

சேக: அது சேவலடா... சேவல் எங்கையும் முட்டை போடுமே...

சங்: அதெனக்குத் தெரியாது... சேவல் இறைச்சி நான் ஒருக்காலும் சாப்பிடேல்ல...

சேக: அதுக்காக...

சங்: இண்டைக்கு உங்கிட வீட்டில சாப்பிட்டு பாக்கப்போறன்...

சேக: நல்ல கதை...

சங்: உங்களுக்கு மோதிரம் வேணுமோ வேணாமோ...

சேக: வேணும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்: அதைத் தேடித் தந்தால் எனக்குக் கோழி காய்ச்சித் தர மாட்டியளோ...?

தாய்: தேடித் தராட்டியும் காய்ச்சித் தருவம் தம்பி, ஆனால்...?

சங்: ஆனால் என்ன அன்ரி..?

தாய்: அங்கிளுக்குத் தான் இஞ்ச கோழி உரிக்கத் தெரியும்...

சங்: நீங்கள் கத்தியக் கொண்டாங்கோ நான் உரிச்சுத்தாறன்... டேய் சேகர் பிடிடா கோழியை...

சேக: அது கோழியில்லேடா சேவல்...

சங்: சேவலோ கோழியோ கலை கலை... கலைச்சுப்பிடி...

சேக: பாவமடா...

சங்: கொண்டால் பாவம் திண்டால் போச்சு... போடு தூக்கில ஆளை...

சேக: நான் மாட்டன் இந்தா நீயே போடு...

சங்: தூக்குத்தண்டனை பெறும் சேவலே என்னை மன்னித்துவிடு...

சேக: (குரலை மாற்றி) தூக்குத் தண்டனை பெறுவதற்கு நான் என்ன குற்றம் செய்தேன் கொடியவனே...

சங்: என்ன சேவலா பேசுவது...

சேக: எந்தக்காலத்திலடா சேவல் பேசினது... பாவம்... அதுக்காக நான்தான் குரல் குடுத்தன்...

சங்: பின்னணி குடுக்கிறியே... இந்தக் கொலையின் பின்னணி என்ன தெரியுமா... ஒரு களவு...

சேக: என்னடா அலம்பிறாய்... ரெத்தத்தை பாத்த உடன மூளை கலங்கிப் போச்சே...

சங்: ஆரடா அலம்பினது... பார் வடிவாப் பார்... இரைப்பைக்குள்ள கல்லோட கிடந்து மினுங்குதே என்ன இது?

சேக: ஆ... மோதிரம்... அம்மா தங்கச்சி ஓடியாங்கோ மோதிரம் கிடைச்சிட்டுது...



சுமதி: ஓமணையம்மா... என்ர மோதிரம்தான்...

சங்: இப்பதான் தங்கச்சீன்ர முகத்தில சிரிப்பே வருகுது...

சேக: நீ கெட்டிக்காரன்தான்ரா... எப்பிடியடா கண்டு பிடிச்சனி?

சங்: கொட்டிக் கிடந்த தேங்காப்பூ.... கொழுத்திருந்த சேவல்... ரெண்டையும் மிக்ஸ்பண்ணி ஒரு ஊகம்... சரி சரி காய்ச்சுங்கோ சேவலைக் கெதியா... பசிக்குது...

சேக: உனக்கில்லாததா... நீ உண்மையில ஒரு துப்பறியும் சிங்கம் தான்ரா... (எல்லோரும் சிரிக்கின்றனர்)

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க**
**நன்றி பயவா வினை.** *(குறள்: 439)*

# எதிரொலி

பாத்திரங்கள்: ஜோன்
மோகன்
முரளி
மனோகரன் (ஆசிரியர்)
பாலசுந்தரம்
தாய்

(மாணவர்கள் இரைச்சல்)

மோக: ஜோன்... என்னடா நேத்தைக்கு ஸ்கூலுக்கு வராம நின்னிட்டே...

ஜோன்: நேத்தைக்கு ஸ்கூலுக்கு வந்திருந்தா என்னோட அபிமான நடிகரோட படத்தை பாக்க முடிஞ்சிருக்குமாடா முட்டாள்...

மோக: ஓகோ... அதுவா விஷயம்... நீ பெஸ்டே பெஸ்ட் ஷோவே எப்பிடி சரி பாத்திடுவே என்னடா...?

ஜோன்: பாக்காட்டி எனக்கு தூக்கமே வராதுடா... நேத்தைக்கு சரியான கிறவுட் மச்சான் பத்துமணிக்குப் போய் கியூவில நின்னிட்டன்... பன்னெண்டு மணிக்குத்தான் உள்ளுக்கெடுத்தான்... ஒரு மாதிரி இடிச்சு கிடிச்சு நுழைஞ்சிட்டன்...

மோக: எப்பிடி படம்...



ஜோன்: பெஸ்ற் படம்டா... நாலுபைற் இருக்கு... ஓரிடத்தில பெடியன் குதிரைல வர்றான் பாரு... தியேட்டர் முழுக்க கைதட்டல் தான்...

மோக: எனக்கும் பாக்க மிச்சம் ஆசையா இருக்குடா...

ஜோன்: ஆசையா இருந்தா போய் பாரேன்...

மோக: நோ மணி மச்சான்... அப்புறம் படம் பாக்க போனன்னு தெரிஞ்சா ஊட்டிலயும் அடிதான் விழும்...

ஜோன்: நீ சுத்தப் பயந்தாங்கோழிடா... எங்கூட்டில மட்டும் படம் பாக்க போனேன்னு தெரிஞ்சாக்க பிறைசா கொடுக்கப் போறாங்க...

மோக: சல்லிக்கு என்னடா செய்யிறே...

ஜோன்: ஸ்கூல்ல அதுக்கு கேட்டாங்க இதுக்கு கேட்டாங்கன்னு சொல்லி எப்படி சரி வாங்கிடுவேன்... பிரின்சிப்பலிட்டவா வந்து கேக்கப் போறாங்க...

மோக: தரல்லேன்னா..

ஜோன்: உண்ணாவிரதம்... சாப்பிடமாட்டேன்... ஸ்கூலுக்கு போவமாட்டேன்னு நின்னுக்குவேன். அப்பாவுக்கு தெரியாம அம்மா எடுத்து தந்துடும்...

மோக: நீ குடுத்து வைச்சவண்டா...

முரளி: (வந்தபடி) என்ன கலைவிழா பத்தியா பேசிக்கிட்டிருந்தீங்க...

ஜோன்: கலைவிழாவா... எப்படா?

மோக: நீ நேற்று ஸ்கூலுக்கு வரல்லியா... நானும் சொல்ல மறந்திட்டேன்...

ஜோன்: சரி... இப்பவாச்சும் சொல்லேன்...

முரளி: நான் சொல்றேனே... இந்த மாசம் முடிய நம்ம ஸ்கூல்ல கலைவிழா ஒண்ணு வைக்கப் போறாங்களாம்...

மோக: அதிலை நாலு நாடகம் போடணுமாம்...

ஜோன்: ஐஸா... அப்புறம்... அப்புறம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முர: போட்டில பெஸ்ரா வர்ர நாடகத்துக்கு பிறைசாம்... நடிக்கிற வங்களுக்கும் பிறைசிருக்காம்...

மோக: நம்மட கிளாஸ் தான் இந்த வாட்டி பெஸ்ட் அடிக்கும் நீ என்ன சொல்றே முரளி...

முர: அதெப்பிடி சொல்லேலும். நைன்த் ஸ்ரான்டர்ட்லயும் நல்ல ஆட்கள் இருக்காங்கதானே...

ஜோன்: நான் நடிச்சேன்னா அவுங்கெல்லாம் எந்த மூலைக்கு, என்ன மோகன் சொல்லெண்டா...

மோக: அதுன்னா நெசம்தான்... ஜோனோட அக்ட் பண்றதுக்கு இந்த ஸ்கூல்ல வேற எவன் இருக்கான்... சொல்லு பாப்பம்...

முர: நடிப்பைப் பத்தி எனக்கொண்ணுமே தெரியாதுடா...

ஜோன்: தெரியாட்டி வாய மூடிகிட்டு சும்மா இருக்கணும்... நைன்தில இருக்காணுங்க... ரென்ந்தில இருக்காங்கன்னு சும்மா சரி வாயப் போடக்கூடாது...

முர: சொறி... சொறிடா ஜோன். இனிமே நாடகத்தப் பத்தி உன்னோட கதைக்கல்ல சரியா...

ஜோன்: அப்பிடிவா வழிக்கு. போன வருஷம் நாடகத்தில என் நடிப்பெப்பிடி... கேட்டுப்பாரு மோகனை... இல்ல எங்கூட்டுக்கு வந்துபாரு பிறைஸ் தந்த கப்ப, இந்த சைஸ்...

முர: போன கலைவிழா ரைமில எனக்கு காய்ச்சல்டா... அதால வரமுடியாம போயிரிச்சு... ஆனா எல்லாம் சொன்னாங்க... உன்ட அக்டிங் பெஸ்ரின்னு...

ஜோன்: இந்த வரிசம் பாரு... எப்பிடி நடிக்கிறேன்னு ஒரு காலத்தில நான் படத்தில நடிக்கேல்ல என் பேரை மாத்திக் கூப்பிடு...

முர: இந்தமுறை நம்ப கிளாஸ் டிறாமாவ மனோகரன் சேர்தான் பழக்கப் போறாராம்...

ஜோன்: யாரு பழக்கினா எனக்கென்ன... அவரு புதிசாத் தானே வந்திருக்காரு... கொஞ்ச நாளில அவருக்கே நான் பழக்கு வண்டா... அக்டிங்...



மோக: சரி சரி வாங்க ரைமாச்சு... கிளாசுக்குப் போவோம்...

ஜோன்: நீங்க போங்கடா நான் அப்புறமா வர்றேன்...

(இடையிசை)

மனோ: நாடகத்தில நடிக்க விருப்பமெண்டு பேர் குடுத்த ஆட்கள் எல்லாரும் எழும்புங்கோ பாப்பம்... (தாமதித்து) ம்... சரி... என்ன முரளி உமக்கு நடிக்க விருப்பமில்லையோ...

முர: எனக்கு நடிக்க வராது சேர்...

மனோ: நடிக்க வராதோ... ஏன் அப்பிடிச் சொல்றீ... படிப்பில எல்லாம் முதலாவதா வாற உமக்கு... நடிப்பு மாத்திரம் ஏன் வரா தெண்டு நினைக்கிறீ...

மோக: அவங்கூட்டில படம் பாக்க கூட்டிக்கிட்டு போகமாட்டாங்க சேர்... அதனாலதான்...

மனோ: அதுக்கென்ன... படம் பாத்தால்தான் நடிப்பு வருமெண்டு சட்டமோ... ஆர் அப்பிடிச் சொன்னது...

மோக: அவங்கூட்டில ஏசுவாங்க சேர்...

மனோ: ஏன் நாடகத்தில நடிக்கிறது பிழையாமோ... பள்ளிக்கூடத் துக்கு நீங்கள் வாறது படிப்போட மாத்திரம் நிப்பாட் டுறதுக்கில்லை... படிக்கவும்தான் வேணும்... நாடகங்களில நடிக்கவும் தான் வேணும்... விளையாட்டுகளில பங்குபற்ற வும்தான் வேணும்...

முர: மேடையில ஏறி நடிக்கிறதெண்டா எனக்கு பயம் சேர்...

மனோ: அது பயப்பிடுறதுக்கு ஒண்டுமில்லை... நான் உம்மிட வீட்டிலை வந்து சொல்றன்... றிகேர்சலுக்கு ஒவ்வொரு நாளும் வந்திடவேணும்... என்ன...

ஜோன்: எங்க கிளாஸ் நாடகம்தான் சேர் பெஸ்ரடிக்கும்...

மனோ: பெஸ்ரா வருகுதோ... லாஸ்ரா வருகுதோ... அதைப்பற்றி ஒண்டுமில்லை... கலைவிழா எண்டால் அதில எங்கிட கிளாசும் பங்குபற்ற வேணும்... அதுதான் முக்கியம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோக: எத்தினை மணிக்கு சேர் றிகேர்சலுக்கு வரணும்...

மனோ: ஒவ்வொரு நாளும் நாலு மணிக்கு றிகேர்சல் வைப்பம்... பேர் குடுத்தாக்கள் எல்லாரும் ஒழுங்கா வரவேணும்... முதல் ரெண்டுநாள் வந்திட்டுப் பிறகு அங்க போகவேணும் இங்க போகவேணுமெண்டு சாட்டுச் சொல்லக்கூடாது... விளங்கிச் சுதோ...

ஜோன்: நாடகத்துக்கு உடுப்பெல்லாம் என்ன மாதிரி சேர்...

மனோ: நாடகமே இன்னும் பழகத் துவங்கேல்லை அதுக்குள்ள உடுப்பைப் பற்றி ஏன் கவலைப்படுறியள்... அதெல்லாம் பழகினாப்பிறகு நான் சொல்லுவன்தானே...

மோக: நாடகக் கதை என்ன சேர் சரித்திரமா... இல்ல சமூகமா?

மனோ: நாங்கள் பழகப்போறது ஒரு புராண நாடகம்... இரண்யன் கதை உங்களுக்கெல்லாம் தெரியும்... தானே... எல்லாரிலும் பெரியவன்... தன்னைத்தான் எல்லோரும் வணங்கவேண்டு மெண்டு சொல்லி பெரிய இறுமாப்போட இருந்த அவனை அவன்ர மகன் மூலமே கடவுள் தண்டிச்சு கர்வபங்கம் செய்த கதையைத்தான் நாங்கள் நடிக்கப்போறம்...

மோக: இரண்யனா ஜோனைப் போட்டீங்கன்னா ஒரு கலக்குக் கலக் கீருவான்... சார்...

மனோ: ஆரை எதுக்குப் போடவேணுமெண்டு பின்நேரம் தீர்மானம் பண்ணுவம்... எல்லாரும் ரைமுக்கு வந்திடவேணும்... என்ன? முரளி, சொன்னது ஞாபகமிருக்கு தானே...

முர: ஓம் சேர்...

(இடையிசை)

ஜோன்: (இரகசியக்குரலில்) என்னை விட்டா இரண்யனா நடிக்கிற துக்கு வேறயார் மச்சான் இருக்கான்... சொல்லு பாப்பம்...

மோக: சரியானபடி பாத்தா உன்னாலதான் அதை செய்யேலும்... ஆனா இந்த சேர் ஒரு ஜாதி ஆளாயில்லை இருக்காரு...



மனோ: (வந்தபடி) என்ன எல்லாரும் வந்தாச்சா... எங்க முரளி...

முர: இந்தா இருக்கிறன் சேர்...

மனோ: குட்... இந்தாரும் இதிலை பிரகலாதனுக்கு எழுதியிருக்கி றதை வாசியும் பாப்பம்...

முர: (வாசித்தல்) தந்தையே! அவன் எங்குமிருப்பவன், அவனில் லாத இடமென்று வேறொன்றுமில்லை... சாணிலும் உளன்... அணுவினைச் சதகூறிட்ட கோணிலும் உளன்... மாமேருக் குன்றிலுமுளன்... இந் நின்ற தூணிலும் உளன்... துரும்பிலும் உளன்... நீர் சொன்ன சொல்லிலுமுளன். இத்தன்மையைக் காணுவீர் விரைவில்...

மனோ: பிறகென்ன... நடிப்பு வராதெண்டு சொன்னீர்... எனக்குத் தெரியும் அப்பவே, உம்மாலை நடிக்கேலுமெண்டு. பிரகலா தனுக்கு குரலிலயும் அளவிலையும் நீர்தான் பொருத்தம்... இனி இரண்யனுக்கு ஆரைப் போடலாமெண்டு பாப்பம்... மோகன் வாசியும்... பாப்பம்...

மோக: (தடுமாறி நடுங்கியபடி) பே... பேடிப்பயலே... இத்தனை காலமும் எனக்...கஞ்சி இத் தூணுக்குள் மறைந்திருந்த நீ இன்று வ...வசமாக...மா..மாட்டிக்கொண்டு விட்டாய்...

மனோ: என்ன மோகன். இப்பிடிப்பேசினால் எப்பிடி? இரண்யன் வீரமாப் பேசவேணும்... நீரென்னெண்டால் நடுங்கிறீர்...

மோக: எனக்கு சின்ன றோலாத் தந்தா காணும் சார்...

மனோ: அப்பிடியே சரி... ஜோன் செய்யும் பாப்பம்...

ஜோன்: (மிகைநடிப்பாக) ஹா... நீ தானா அந்த ஹரி... (இழுவையாக) பேடிப்பயளே இத்தனை காளமும் எனக்கு அஞ்சி இத் தூணில் மறைந்திருந்த நீ இன்று வசமாக வசமாகச் சிக்கிக் கொண்டு விட்டாய்...

மனோ: என்ன ஜோன்... எல்லாரும் உம்மைப்பற்றிச் சொன்னதைக் கேட்டு நீர் நல்லா நடிப்பீராக்கும் எண்டு நான் நினைச்சன்... நீரென்னெண்டால் ஏனிப்பிடி தேவையில்லாமல் கையைக் காலை ஆட்டுறீர்? உச்சரிப்பும் சரியா இல்லை... இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி நாடகங்களில உச்சரிப்பைக் கவனிக்க வேணும்... படங்களப் பாத்து அக்டிங்கப் பற்றி பிழையா யோசிச்சு வச்சிருக்கிறீர் போலக் கிடக்கு... முதல்ல அதை மாத்த வேணும்... ஆரங்க ஒளிஞ்சுகொண்டு நிக்கிறது... பால சுந்தரமே... ஏன் பயப்பிடுறீர்... முன்னுக்கு வாரும்...

பால: நான் சும்மா பாக்க வந்தன் சேர்...

மனோ: பாக்கவோ... சரி பறவாயில்லை. இதை வாசியும் பாப்பம். நீர் ஒரு பெரிய அரசன். உம்மை விட்டால் வேற ஆரும் இல்லை எண்டு நினைச்சுக்கொண்டு செய்யும் பாப்பம்...

பால: (செருமி பின் வாசித்தல்) ஹா... நீதானா அந்த ஹரி... பேடிப்பயலே இத்தனை காலமும் எனக்கஞ்சித் தலை மறைவாக இத்தூணுக்குள் மறைந்திருந்த நீ, இன்று வசமாக மாட்டிக்கொண்டு விட்டாய்...

மனோ: குட் (பகிடியாக) நீரிண்டைக்கு என்னிட்ட வசமா மாட்டிக் கொண்டீர்... உம்மை நான் சும்மா விடப் போறேல்லை... நல்லா வேலை வாங்கப் போறன்... நீர்தான் இரண்யன்...

பால: சும்மா போங்க சார்... நான் நடிக்க வரேல்ல...

மனோ: நான் என்ன பகிடி விடுறனெண்டு நினைச்சீரே... அடிதான் வாங்குவீர்... சொல்லிப் போட்டன். ஒரு கிழமேக்கை எல்லாம் எழுதி நல்லாப் பாடமாக்க வேணும்... மோகனை ஹரியாப் போடலாமெண்டு யோசிக்கிறன்... கடைசிலை ஒரு சீன்லதான் வரவேண்டியிருக்கும்... வசனமும் அவ்வளவு இல்லை... என்ன சொல்றீர்...

மோக: அப்ப சரிசேர்... ஒருக்கான்னாலும் தலையைக் காட்டினாக்க எனக்கு காணும்...

மனோ: (சிரித்து) தலையக் காட்ட நான் விடமாட்டன் உம்மை... ஏனெண்டால் நீர் சிங்கத் தலையோட எல்லே வரவேணும்... பிறகும் உம்மிட தலையக் காட்டினீரெண்டால் கதை பிழைச் சுப் போயிரும்... (எல்லோரும் நகைக்கின்றனர்) ஜோனை மந்திரிக்குப் போடுவம்... என்ன ஜோன் விருப்பமில்லைப்



போலை கிடக்கு... நாடகத்திலை பெரிய றோல்தான் நடிக்க வேணுமெண்டு ஒவ்வொருத்தரும் நினைக்கக்கூடாது... சின்னப் பாத்திரத்தில வந்தாலும் அதைச் சரியாச் செய்யிறவன் தான் நல்ல நடிகன்...

(இடையிசை)

மோக: என்ன ஜோன்... சேரு நல்லா உன்னை எறக்கிவிட்டுட்டாரு இல்லியா...

ஜோன்: (கிண்டலாக) அவரு பெரிய நாடக ஆசிரியரு... நமக்கு படிச்சுத்தர வாறாரு...

மோக: பாலசுந்தரத்துக்கு என்னடா தெரியும்... அவனைப்போய் இரண்யனா போட்டிருக்காருடா...

ஜோன்: இருந்து பாரு... கலைவிழா அன்னிக்கு நான் காட்டுறேன் என் வேலைய...

மோக: என்னடா செய்யப்போறே...

ஜோன் ஒவ்வொரு நாளும் றிகேசலுக்கு ஒழுங்கா வருவன்... கடைசி நாத்து காய்ச்சல்னு இழுத்துப் போத்திக்கிட்டு படுத்துக் குவேன்... கடைசி நேரத்தில மந்திரிக்கு ஆளில்லாம நாடகம் குளோஸ் (சிரித்தல்)

மோக: நீ சரியான ஆள் தாண்டா...

(இடையிசை)

மனோ: என்ன எல்லாரும் மேக்கப் போட்டாச்சோ...

முர: ஜோன் இன்னும் வரேல்ல சேர்...

மனோ: அவன்ர வீட்டை ஆர் தேடிப்போனது...

பால: மோகன்தான் போனான் சார்... ஆ! அந்தா வர்றான்... என்னடா? ஜோன் வரல்லயா?

மோக: (இளைத்து) அவனுக்கு காச்சலாம்... சேர்... எந்திரிக்கவே முடியல்லியாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ: எனக்குத் தெரியும்... இப்பிடி ஏதும் நடக்குமெண்டு... சரி அதுக்கென்ன... மோகன் உனக்கு அவன்ரை வசனங்கள் பாடம்தானே...

மோக: ஓம் சேர்... ஆனால்...

மனோ: சரி வேற கதையில்லை... நீர்தான் மந்திரி... நீர்தான் ஹரி... ரெண்டும் நீர்தான்... முன்னாலை மந்திரி கடைசி சீன்ல உடுப்பை மாத்தியண்டு தூணுக்க வந்து நிண்டிட வேணும் என்ன...

மோக: சரி சேர்...

(இடையிசை)

ஜோன்: (அனுங்கலாக) அம்மா... அம்மா...

தாய்: என்னடா ராஜா என்னடா செய்யுது... ஏங்க, இப்பிடி கல்லுப் பிள்ளையாட்டம் குந்திக்கிட்டிருந்தா... பையனுக்கு பேசக்கூட முடியுதில்ல... தொண்டையும் கட்டிப் போயிரிச்சு... யாரிட்ட சரி கடனக்கிடன வாங்கி டாக்டரையாகிட்ட கூட்டிக்கிட்டு போலாங்க... எனக்கு பயமா இருக்குங்க...

மனோ: (தூர இருந்து) ஆர் வீட்டிலை...

தாய்: மாஸ்டருங்களா... வாங்கையா... உக்காருங்க...

மனோ: ஜோனுக்கு கடுமையான காய்ச்சலாம் எண்டு கேள்விப் பட்டன்... அதுதான் பாத்திட்டு போகலாமெண்டு வந்தன்...

தாய்: ஆமாங்கையா... முந்தாநாத்து ராத்திரி நாடகம் நடிச்சுபிட்டு மழையில நனைஞ்சு கிட்டு வந்து படுத்தவன் தாங்க... எந்திரிக்கவேயில்லீங்க... எங்கூட்டுக்காரருக்கும் வேலை போனதிலை கையில காசும் இல்லீங்களா அதுதான்... டாக்டருக்கிட்டவும் கூட்டிக்கிட்டு போவேலாம தலையில கைய வச்சுக்கிட்டு உக்கார்ந்திருக்காரு...

மனோ: நாடகத்தண்டைக்குத்தான் ஜோன் வரவேயில்லையே...

தாய்: என்னங்க மாஸ்டரு சொல்றீங்க...



மனோ: வாருங்களன் ஜோனிட்டையே கேட்டுப்பாத்திடுவம்...

தாய்: என்னடா ஜோனு... மாஸ்டரு நீ நாடகமே நடிக்க வரல்லங் கிறாரே...

ஜோன்: (அடைத்த குரலில்) ஆமாம்மா... நாடகம் நடிக்கப் போறேன்னு உங்கிட்ட நான் பொய்தான் சொன்னேன்...

தாய்: அப்ப எங்கடா போனே...

ஜோன்: அண்ணைக்கு நான் மோகன்கிட்ட எனக்கு காய்ச்சல்ன்னு சொல்லியனுப்பிட்டு படம்தான் பாக்கப் போனேன்... படம் பாத்திட்டு வர்றப்போதான் மழையில அம்பிட்டுகிட்டேன்...

தாய்: அடப்பாவிப்பய மவனே, நீ உருப்படுவியாடா... இம்புட்டு நாளும் இப்பிடி எத்தினை பொய்ய சொன்னியோ...

ஜோன்: கடவுளாப்பாத்து எனக்கு நல்ல தண்டனை குடுத்திட்டா ரும்மா... யம்மா... யம்மா... ஒடம்பெல்லாம் வலிக்குதே...

மனோ: சரி சரி பேசிக்கொண்டிருக்காமல் வெளிக்கிடும்... டொக்டரிட்டப் போகலாம்... உம்மிட வகுப்பு பிள்ளையளெல் லாம் காசு சேத்து தந்து விட்டிருக்கிறாங்கள்... நல்ல டொக்டரிட்டக் காட்டச் சொல்லி... ம்...ம்... கெதீல எழும்பி வெளிக்கிடும்.

ஜோன்: என்னை... என்னை மன்னிச்சிடுங்க சேர்... நான்... நான் ஒரு... (விம்முதல்)

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.** *(குறள்: 596)*

# நாளைய நாயகன்

பாத்திரங்கள்-

தாய்: அமலா
மகள்: புனிதா
மகன்: அருள்
கணவன்: லாசரஸ்
நண்பன்: ஜோன்
கடைக்காரர்: கந்தசாமி

(காற்றுடன் மழை பெய்யும் ஓசை)

அமலா: அப்பப்பா என்ன குளிர் என்ன குளிர்...

புனிதா: ஆமாம்மா எனக்கும் மிச்சங் குளிருது...

அருள்: ஏம்மா இந்த வீடு இப்பிடி ஒழுகுதே... வீட்டுக்காரர்கிட்ட சொன்னா திருத்தித் தரமாட்டாரா?

அமலா: நல்லாத்தான் திருத்தித் தருவாரு... வாடகையே ஒழுங்கா நம்பளால கட்ட முடியேல்ல... திருத்தித் தரச் சொல்லிக் கேட்டமுன்னா அம்பிட்டுத்தான்... அப்புறம் நடுத்தெருவிலதான் நாம நிக்கணும்...

புனிதா: மத்த மத்த வீடுகளிலையும் இப்பிடித் தானாம்மா ஒழுகும்?



அமலா: அவங்க வீடெல்லாம் நல்லாத்தானிருக்கும்... நம்ம தலையெழுத்து இப்பிடி...

புனிதா: ஏம்மா அப்படி...

அருள்: நாம ஏழைங்க. இல்லையா அம்மா...?

அமலா: யாருடா அப்படி சொன்னது...?

அருள்: எனக்கெல்லாம் தெரியும்மா... எங்க ஸ்கூல்ல கூட பணக்காரப் பசங்க என்கூட சேர மாட்டாங்க...

புனிதா: ஆமாம்மா... இந்த ராணி இருக்காளே அவளுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது... அவ பெரிய பணக்காரீன்னு எல்லாரும் சொல்லுவா... காரில தாம்மா வருவா...

அமலா: நமக்கும் காலம் வந்தா நாம்பளும் காரில போவலாம்டி...

புனிதா: எப்பம்மா நமக்கு காலம் வரும்...?

அருள்: நான் பெரியவனா வளர்ந்து சம்பாரிக்க ஆரம்பிச்சதும்... இல்லையா அம்மா...

அமலா: ஆமாடா என் ராஜா... நீதாண்டா நாளைக்கு இந்த உலகத்தை ஆளப்போறே... கடவுளே என் புள்ளைங்களுக்கு நல்ல அறிவைக் குடுத்திருக்கே... அதுக்கு நான் உனக்கு நன்றி சொல்லுறேன்...

புனி: ஏம்மா அழுவுறே... நீ அழுதா அப்புறம் நானும் அழுவேன்... அழாதைம்மா...

அருள்: ஆமாம்மா நீ எதுக்கு அழணும்... நாங்க இல்லையா...

அமலா: ஆமாடா நீங்க இருக்கிறப்போ எனக்கென்னடா குறை...

அருள்: ஏம்மா, அப்பாவும் சம்பாரிக்கிறார் தானே...?

அமலா: ஆமாடா, பாவம் அவரு இந்த ராத்திரி நேரத்தில வாச்சர் வேலை பாத்து உழைக்கத்தான் செய்யறாரு...

அருள்: அப்ப ஏம்மா நாம கஷ்டப்படுறோம்...?

அமலா: அது அந்தக் கடவுளைத்தான் கேட்கணும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்: இந்த மழையிலயும் குளிரலயும் வேலை செய்யிறதாலதான் அப்பா குடிக்கிறாரு இல்லியா அம்மா...

அமலா: என்னடா நீ என்னென்னமோ எல்லாம் பேசறே...

அருள்: எனக்கு எல்லாம் தெரியும்மா... குளிருக்கு போட்டுக்க அப்பாகிட்ட ஒரு கோட்டு மட்டும் இருந்திச்சின்னா அப்பா குடிக்கவே மாட்டாரு...

புனிதா: ஆமாம்மா... அண்ணா சொல்றது நெசந்தான்... எங்க ராணி யோட அப்பாகிட்டவும் கோட்டிருக்குது... ஆனபடியாத்தான் அவரு குடிக்கிறதில்லைப் போல...

அமலா: கடவுளே... என்னைக்குத்தான் எங்களுக்கு விடிவு காலம் பொறக்கப்போவுதோ...

(இடையிசை)

(குடிவெறியுடன் லாசரஸ் வருகிறான்)

லாச: டியே... எங்கேடி போய்த் தொலைஞ்சே...

அமலா: எங்கயும் தொலையல்ல... இங்கதான், உங்க கண்ணு முன்னாடிதான் குந்திக்கிட்டிருக்கேன்...

லாச: இருக்கியா... நான் ஏதோ கல்லு செலையாக்குமுனு நினைச்சேன்...

அமலா: ஆமா, உங்க கூத்தைப் பாத்துப் பாத்து என் மனசு கல்லாத்தான் போயிடிச்சி...

லாச: என்னடி திமிராப் பேசறே...

அமலா: ஏங்க இப்பிடியெல்லாம் குடிச்சு அநியாயமா காசையும் கரியாக்கி உடம்பையும் கெடுத்துக்கிறீங்க..?

லாச: நான் உழைக்கிறன். நான் குடிக்கிறேன்... நீ யாரடி கேட்கிறது...?

அமலா: நான் கேக்கல்ல ஒண்ணும்... உங்க பிள்ளைங்க கேக்கி றாங்க... கொஞ்சமாவது எங்க கஷ்டத்தை நினைச்சுப் பாத்தீங்கன்னா இப்பிடிக் குடிப்பீங்களா?



லாச: கஷ்டத்தை மறக்கிறதுக்காகத் தாண்டி குடிக்கிறேன்...

அமலா: குடிச்சாப்போல நம்ம கஷ்டம் மறைஞ்சிடுமா? குளிருக்கு போர்த்துக்கக்கூட ஒரு போர்வையில்லாம அதுக குளிரில நடுங்கிறத பாக்கிறப்போ பெத்த மனசு துடியாய்த் துடிக்குதுங்க...

லாச: உனக்குப் போர்வை ஒன்னு வேணும் அவ்வளவுதானே... பாத்துக்கிட்டே இரு இந்த மாசம் முடியட்டும். சம்பளம் போட்ட உடன போர்வையோட வர்றனா இல்லையான்னு...

அமலா: போர்வையோட வர்றீங்களோ போதையோட வர்றீங்களோ யாரு கண்டா?

லாச: என்னடி நாக்கு மிச்சம் நீளுது... சரி சரி சாப்பிட என்னடி இருக்கு...

அமலா: கருவாடும் காரவடையும் சுட்டு வைச்சிருக்கேன்...

லாச: மெய்யாவா... ஆகா... வாயூறுதுடி... கொண்டா கொண்டா...

அமல்: என் நாக்கு நீளுதின்னீங்களே... உங்க நாக்கு எவ்வளவு நீளுதுன்னு பாக்க ஆசையாயிருந்திச்சு... அதுதான்க ஒரு பொய்ய சொல்லிப் பாத்தேன்...

லாச: அடி பாவி, ஏமாத்திட்டியே...

அமலா: இப்படிக் குடிச்சுக் குடிச்சு உங்களையே நீங்க ஏமாத் திக்கிறீங்களே... அதை விடவா பெரிசா நான் ஏமாத் திட்டேன்...

லாச: ம்... மூச்சு... எனக்கு பெரிசா அட்வைசு பண்ண வந்தீன்னா அப்புறம் எல்லாம் குளோஸ் ஆமா...

(இடையிசை)

(கடை இரைச்சல்கள்)

கந்: வாங்கம்மா... என்ன சாரியா... டேய் அந்த வூலி நைலெக்ஸ் களில எடுத்து போடு அம்மா பாக்கட்டும்... உள்ள போய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கம்மா... யாரது அங்க நின்னுகிட்டு? லாசரஸா... என்னப்பா.... என்ன வேணும்?

லாச: முதலாளி, அந்தா இருக்குதுங்களே... அந்த போர்வை என்ன வெலைங்க வரும்...

கந்: இதுவா, இது உனக்கு கட்டுபடியாகாது 90 ரூபா. வேணும்னா இந்தா இருக்குது 32 ரூபாவில ஒண்ணு. நல்லா குளிரு தாங்கும்...

லாச: ஏங்க முதலாளி போர்வைய இப்ப எடுத்துகிட்டு போய்ட்டு அப்புறமா இந்த மாச சம்பளம் போட்டதும் சல்லியக் கொண்ணந்து தந்திடட்டுங்களா?

கந்: கடனா? அந்த வியாபாரம் தான் நம்ம கிட்ட கிடையாதே... காசைக் கொண்ணந்து வை. சாமான் உன் கையில வரும்...

லாச: சரீங்க,, பத்தாந் தேதி சம்பளம் போடுவா... அது மட்டும் யாருக்கிட்டவும் போகவுட்டுடாதீங்க... கட்டாயமா நான் வந்து எடுப்பேங்க...

கந்: சரி பார்ப்போம்... நீ முதல்ல காசோட வாயேன்...

(பாடசாலை மாணவர்களின் கசமுச பேச்சுகள்)

ஜோன்: என்ன அருள், முன்னையெல்லாம் நீதான் ஸ்கூலுக்கு பெஸ்ட்டா வருவே... இப்ப கொஞ்ச நாளா என்னடான்னா மணியடிக்கிறப்போதான் ஓடியோடி வர்றே...

அருள்: ஜோன்... நான் சொல்றதை நீ யாருகிட்டவும் வெளீலவிடமாட்டியின்னா சொல்றேன்...

ஜோன்: புறமிஸ்ஸா நான் யாருகிட்டவும் சொல்ல மாட்டேன்டா...

அருள்: இந்த மாசம் நான் பஸ்ஸுக்கு சீசன் டிக்கட்டே எடுக்கல்லடா...

ஜோன்: அப்படீன்னா... உங்கூட்டில இருந்து இவ்வளவு தூரமும் நடந்து வர்றியா...

அருள்: ஆமாடா...



ஜோன்: தெனம் ஆறேழு மைலு நடந்து வர்றியாடா... எப்படீடா முடியுது...

அருள்: முத ரெண்டு நாளு கொஞ்சம் கஷ்டமாத்தாண்டா இருந்திச்சு... அப்புறம் பழகிப் போயிடிச்சுடா... இப்பெல்லாம் கஷ்டமாவே தெரியிறதில்லை...

ஜோன்: சீசன் எடுக்கிறதுன்னு அன்னைக்கு காசும் கொண்ணந்து வச்சிருந்தியேடா...

அருள்: ஆமாடா... ஆனா அப்புறம் வேற யோசனை ஒண்ணு வந்திருச்சு... காசை சேத்து எங்கப்பாவுக்கு ஒரு பிறசன்ட் வாங்கிக் குடுக்கலாம்னு தோணிச்சு...

ஜோன்: ஏண்டா உங்கப்பாவுக்கு பொறந்த நாள் வருதா...

அருள்: இல்லடா... சும்மா ஒரு கோட்டு... மழைக்குப் போட்டுக்கிறதுக்கு வாங்கிக் குடுக்கலாமின்னு யோசனை...

ஜோன்: கோட்டின்னா நிறைய காசு வேணுமே?

அருள்: எவ்வளவுடா வரும்... ஒரு 30 ருவா...?

ஜோன்: போடா பழசின்னாக் கூட அம்பதறுவதுன்னு சொல்லுவாங்க...

அருள்: நெசமாவாடா...?

ஜோன்: ஆமா... இப்ப உன் கையில எவ்வளவு சேர்ந்திருக்கு...?

அருள்: முப்பது ரூபா சேர்த்திட்டன்டா...

ஜோன்: முப்பதா,... சீசன் டிக்கட் சல்லி 12 ரூவாதானேடா... மிச்சக் காசு எப்படி ஆப்பிட்டுது...

அருள்: தினம் ரெண்டு வீட்டிலயாச்சும் தென்ன மரத்தில ஏறி தேங்கா பறிச்சுப் போடுவேன்... அப்படி கொஞ்ச கொஞ்சமா சேத்தேன்டா...

ஜோன்: நீ மரம் ஏறுற சங்கதி உங்கப்பனுக்குத் தெரியுமா...

அருள்: ம்ஹூம்... தெரிஞ்சாத்தான் தோலை உரிச்சுப்புடுவாரே...

ஜோன்: மணியடிச்சிரிச்சு.... வா கிளாஸ் உள்ளே போவோம்...

(இடையிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கடை இரைச்சல்)

கந்த: என்ன தம்பி, என்ன பாக்குறே... சறத்துணியா இல்ல ஷேர்ட்டா... பொலியெஸ்டர் துணியில போட்டா ஷோக்கா இருக்கும்... வேணுமா...

அருள்: இல்லீங்க... ஷேர்ட் ஒண்ணும் வேணாம்... வெலைகுறைஞ் சதா நல்ல தடிச்ச போர்வை ஏதும் இருக்குங்களா...

கந்த: தடிச்ச போர்வையா... வெலை குறைஞ்சதா... 50, 60 க்கு வேணும்னா இருக்கு... நீ கேட்கிற மாதிரி இல்லியே...

அருள்: அந்தா அந்த செவப்புப் போர்வை என்ன வெலைங்க...?

கந்த: இதா, இதை ஒராளு சொல்லி வைச்சிட்டுப் போயிருக்காரு... அவருக்காக எடுத்து வைச்சிருக்கேன்...

அருள்: இது மாதிரி வேற இல்லீங்களா...

கந்த: ம்ஹூம்... இதுதான் வந்த ஸ்டொக்ல கடைசி...

அருள்: அப்படியா... அந்தாளு எப்பங்க வந்து எடுக்கிறம்னாரு...?

கந்த: இன்னைக்கு என்ன தேதி... பத்தா... அட இன்னைக்கு வந்து எடுக்கிறேன்னு தானே சொன்னான்... மணி ஆறா யிடிச்சு... இனி எங்க வரப்போறான்... குடிகாரப்பய பேச்சைக் கேட்டு... சரி சரி தம்பி இதை நீயே எடுத்துக்க...

அருள்: எவ்வளவுக்கு...

கந்த: 35 ரூபா விக்கிறது... உன் முகத்துக்காக ஒரு ரெண்டு ரூபாவைக் குறைச்சுக்கிறேன்.

அருள்: 32 ரூபாவாத் தாங்க முதலாளி... எங்கிட்ட அம்புட்டுதான் இருக்கு...

கந்த: சரி சரி காசை வை,.. டேய் அந்த போர்வையைப் பார்சல் பண்ணு.

(இடையிசை)



(வெறியில் லாசரஸ் தன்பாட்டில் கதைத்தபடி வரல்)

லாச: குளிரு... அதுக்கொரு போர்வை போத்துகிட்டா மட்டும் குளிரு போயிடுமா... சூடா வைச்சுக்கணும்னா போடணும்... நல்லா போடணும்... போர்வை வாங்கிற சல்லியில ரெண்டு போத்தல் வாங்கி விட்டா எல்லாம் சரி...

(இடையிசை)

(மழை பெய்யும் ஓசை)

அமலா: ஏண்டா அருள், மணி எட்டுக்கு மேல போயிடிச்சி இன்னும் உங்கப்பாவைக் காணல்ல...

அருள்: மழை வேற பெரிசாப் பெய்யுதும்மா...

(கதவு தட்டப்படும் ஒலி)

அருள்: அப்பாதான் வந்திட்டாரு போல...

புனி: ஆமாம்மா,, அப்பாவை யாரோ ரெண்டு பேரு புடிச்சிகிட்டு வேற நிக்கிறாங்க...

அமலா: ஐயையோ என்னங்க இது... அருள் அந்தத் துவாயை எடுத்துகிட்டு வாடா...

அருள்: விடுங்கம்மா... நான் அப்பா தலையத் தொடைச்சு விடு றேன்...

அமல: ஏங்க, ஏன் இப்பிடி உங்க உடம்பு நடுங்குது...?

லாச: ஜூரம் ஜூரம்... மழையில நனைஞ்சனா... ஜூரம் வந்திடிச்சு... போர்வை வாங்க வச்சிருந்த காசில போத்தலை வாங்கி னேன்... இப்ப காய்ச்சலுக்குப் போத்துக்கக்கூட....

அருள்: போர்வை இருக்குப்பா...

அமலா: என்னடா சொல்றே...

அருள்: ஆமாம்மா, அப்பாவுக்குன்னு சொல்லி நான் போர்வை ஒண்ணு வாங்கிகிட்டு வந்திருக்கேன்... இந்தா இருக்கு... போத்துக்குங்கப்பா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாச: அதே போர்வை... ஆமா அதே போர்வை...

அருள்: அப்பா குளிரு தாங்க ஏலாம தானேப்பா இம்மட்டு நாளா நீங்க குடிச்சீங்க... இனிக்குடிக்க மாட்டீங்க இல்லையாப்பா...

(அழுகையுடன்)

லாச: மவனே... நீ எனக்கு போர்வை வாங்கினியாடா... உனக்கு நான் வாங்கித் தர வேண்டியிருக்க, நீ எனக்கு வாங்கியந் தியாடா...? அமலா பாத்தியா உன் மவனை... எனக்கு வெக்கமா இருக்குடி... என்னை நெனைச்சா எனக்கே வெக்கமா இருக்குடி...

புனி: ஏம்பா, இனி நீ குடிக்க மாட்டியே...

லாச: குடியா, அதை இனி நெனைச்சுப் பாப்பனா? என்ட மவன் என் கண்ணைத் தொறந்திட்டான்... இனி என்னைக்குமே குடிக்க மாட்டேன்... சத்தியமா குடிக்க மாட்டேன்...

அமலா: (பெருமூச்சுடன்) கடவுள் கண்ணைத்திறந்திட்டாரு... நீங்க பேசாம கண்ணை மூடிக்கிட்டு படுங்க...

புனிதா: அண்ணா தந்த போர்வையால நல்லா போர்த்திக்கிட்டு படுங்கப்பா...

(முடிவிசை)



***துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி***
***இன்பம் பயக்கும் வினை.*** *(குறள்: 669)*

# ரோசக்காரன்

பாத்திரங்கள்:

முனியாண்டி - மலையகத்துச் சிறுவன்.
வேலு - முனியாண்டிக்குத் தந்தை, நோயாளி.
ராமக்கா - முனியாண்டிக்குத் தாய்.
மாதவன் - முனியாண்டியின் நண்பன்.
கந்தையா - முதலாளி.
வள்ளியம்மா - ராமக்காவின் அயல்வீட்டுக்காரி.
பள்ளி ஆசிரியை
கொத்தன் (பாஸ்)

வேலு: ஏ ராமக்கா, வாசல்ல யாரோ கூப்பிடு றாப் போலயிருக்கு... போய் யாருன்னு ஒருக்கா பாத்திட்டு வாயேன்.

ராம: நீங்க படுத்துக்குங்க... நான் போய் பாத்திட்டு வர்றேன்... (சென்று திரும்பி வந்து) கந்தையா முதலாளி வந்திருக் காருங்க.

வேலு: (பரபரப்பாக) வாங்க... முதலாளி... ராமக்கா அந்த ஸ்டூல எடுத்துப் போடு... ஐயா குந்திக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்: இங்க பாரு வேலு... நான் குந்தியிருந்து குசலம் விசாரிக்க இங்க வரேல்ல... என் பணத்துக்கு நீ என்ன சொல்றே... அதை முதல்ல சொல்லு.

வேலு: ஐயா கோவிச்சுக்கப்படாது... கையில வச்சுக்கிட்டா நான் இல்லேங்கிறன்.

கந்: ஆமா நானும் எத்தினை வாட்டிதான் நடையா அலையறது... இல்லை கேக்கிறன்... மனுஷன்னா குடுத்த வாக்கைக் காப்பாத்தத் தெரியணும்.

வேலு: பொறுத்ததோட பொறுத்ததா இன்னும் கொஞ்ச நாள் பொறுத் துக்குங்க ஐயா... ஏதோ நம்ம பொல்லாத காலம், என்னைப் படுக்கைல தள்ளிடிச்சு.

கந்: உனக்குப் பொல்லாத காலம். எனக்குப் போதாத காலம்... சே சே... போயும் போயும் உனக்கெல்லாம் இரக்கப்பட்டு பணந்தந்தேன் பாரு... என் புத்தியச் சொல்லணும்...

வேலு: அப்பிடியெல்லாம் சொல்லாதீங்க ஐயா... உங்க புண்ணி யத்தில தான் எங்க வீட்டில அடுப்பே புகையிது...

கந்: புகையும் புகையும்... உங்க வீட்டில அடுப்புப் புகையுது... என் வயித்தில நெருப்பில்ல புகையுது. இந்தக்கட்டில விட்டு நீ எப்ப எழுந்திருக்கிறது... என் கடனை எப்ப அடைக்கிறது... ஒருவேளை எழுந்திருக்காமலே நீ போயிட்டா...

ராம: (கோபத்துடன்) சும்மா ஏன் முதலாளி தேவையில்லாத கதை பேசறீங்க... ஒரு நூறு ரூபாவைக் குடுத்திட்டு அவரு உசிரையே வெலை பேசுறீங்களே... இது உங்களுக்கே நல்லா இருக்கா...

கந்: அட ஒனக்குக்கூடப் பேசத்தெரியுதே... பட்ட கடனை அடைக்க வக்கில்ல... வாயில மட்டும் குறைச்சலில்ல....

ராம: ஏன் முதலாளி ஏழைங்கன்னா அவங்களுக்கு மட்டும் மானம் மரியாதை இருக்கக்கூடாதுங்களா...

வேலு: ஏய் ராமக்கா.....



ராம: நீங்க சும்மா இருங்க கொஞ்சம்... இந்தாங்க ஐயா நீங்க தந்த கடனுக்கு இத அடமானமா வச்சுக்குங்க... இது இப்ப 100 இல்ல 500 பெறும்.

வேலு: என்ன ராமக்கா நீ... கழுத்திலே இருந்த தாலியைக் கொடுக்கறயா?

ராம: உங்க உசிரவிட அது ஒண்ணும் பெரிசில்லீங்க... கொஞ்சம் போனா இவரு பேசிப்பேசியே உங்களைக் கொன்னுப் புடுவாருபோல இருக்கு.

கந்: இங்க பார் வேலு... இந்த இழுவல் சமாச்சாரமெல்லாம் எனக்குப் பிடிக்காது... அதுதான் கொஞ்சம் கெடுபிடியா பேசிட்டேன்... ஆமா, உன் மகனை எங்க காணம்...

வேலு: அவன் எங்கயோ... யாருகிட்டயோ படிச்சுகிட்டு வரப்போயிட் டாங்க.

கந்: படிக்கிறதுக்கா (சிரித்து) இந்தக்காலத்தில இவனெல்லாம் படிச்சு என்னத்தைச் செய்யப்போறான்?

ராம: ஏன் நம்ம புள்ளைங்க படிச்சா மூளைல ஏறாதுங்களா? மூளையக்கூடக் கடவுள் பணக்காரப் பசங்க தலேல தான் திணிச்சு வச்சிருக்காருங்களா?

கந்: அதுக்கில்ல... இப்பெல்லாம் படிப்புக்கு மதிப்புக் கிடையாது வேலு, பெரிய படிப்புப் படிச்சவங்கெல்லாம் வேலையில்லாம கஷ்டப்படுறாங்க... அப்பிடியிருக்கிறப்போ உன் மகனை வீணாப் படிக்கவைச்சு என்ன பண்ணப்போறியோ...

வேலு: நாம் தான் ஒண்ணும் படிக்கல்ல, அவனாவது ஒண்ணு ரெண்டைப் படிச்சுத் தெரிஞ்சுக்கட்டும்னு...

கந்: பெரிசா படிச்சுக் கிழிப்பான் போ... பேசாம என் கடைல ஆளை வேலைக்கு விட்டிடேன்... ஒரு நாலு வேலை தெரிஞ்ச மாதிரியும் ஆகும்... அஞ்சு காசு சம்பாதிச்ச மாதிரியும் ஆகும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம: ம்ஹூம்... அந்தக்கதை வேணாங்க... அவன் வேலைக்குப் போகவும் வேணாம்... அப்புறம் நம்மளைப்போல குனிஞ்சு குனிஞ்சு கும்பிடவும் வேணாம்...

கந்: ம்... ஏதோ உங்க நல்லதுக்குச் சொன்னேன்... நல்லா யோசிச்சு பாருங்க... சரி நான் வர்றேன்...

ராம: என்னங்க கன்னத்தில கைய வைச்சிட்டீங்க...? அந்த மனுசன் சொன்னமாதிரி செஞ்சிடலாம்ன்னு பாக்கிறீங்களா...?

கந்: ஆமா... ராமக்கா... அதுவும் ஒரு வழிக்கு நல்ல யோசனை யாத்தான் படுது...

ராம: உங்க புத்தியும் இப்பிடிப் போவுதே... அல்ப மனுஷன்... நம்ம நல்லதுக்கா சொல்றாரு... நம்ம புள்ளைங்களும் இப்படியே இருந்தாத்தான் அவுங்களுக்கு வாசி...

கந்: நம்ம குடும்ப நெலவரத்தைப்பத்தி யோசிக்கத்தான்...

ராம: அட சும்மா வுடுங்க... நீங்க என்ன சொன்னாலும் என் புள்ளையோட படிப்ப நிப்பாட்ட நான் சம்மதிக்க மாட்டேன்... ஆமா...

(இடையிசை)

(வகுப்பறைக் கூச்சல்கள்)

மாத: டேய் முனியாண்டி என்னடா ஏன் ஒருமாதிரியா இருக்கே....

முனி: நம்ம அப்பா அம்மாவை நெனைச்சுக்கிட்டேன்... அவுங்க படுற கஷ்டத்தைப் பாக்கறப்போ ஏண்டா பிறந்தோம்ன்னு இருக்குடா மாதவன்...

மாத: ஏண்டா உங்கப்பா இப்பவும் வேலைக்குப் போறதில்லியா?

முனி: இல்லடா, அவருக்கு காலு சரியா குணமாகிற வரைக்கும் போகக்கூடாதின்னு டாக்டரு சொல்லியிருக்காரு...

மாத: காலு சுகமாகி எப்பதான் நடப்பாராம்?



முனி: இன்னும் ஒரு மாசமாவது போகணுமாம்... உசக்க இருந்து வுளுந்ததில எலும்பு முறிஞ்சு போயிடிச்சாம்... சுகமாகி எழுந்து நடக்க ஆரம்பிச்சப்புறம் கூட பால் வெட்டுக்குப் போகமுடியாதாம்.

மாத: பால் வெட்டில்லேன்னா அப்புறம் கூலிவேலை ஏதாச்சும் தான் பாக்கவேண்டி வரும் இல்லியா.

முனி: ஆமா ஏதோ அம்மா கொளுந்து பறிக்கப்போறதால ரெண்டு வேளைன்னாலும் கஞ்சி குடிக்கிறம்.

மாத: அதுவுமில்லேன்னா அரோகராதான்.

முனி: இதுக்குள்ள கடன்காரப்பய வந்து கழுத்தை வேறை அறுக் கிறான்...

மாத: ஏண்டா முனியாண்டி உங்கப்பா யாருகிட்ட கடன் வாங்கி னாங்க...

முனி: வேறை யாருகிட்ட கந்தையாபிள்ளை முதலாளிகிட்டதான்... காத்தால அவன் வீட்ட வந்து பேசின பேச்சின்னா, காதாலே கேட்டுக்க முடியாதுடா மாதவன்...

மாத: அதுதான் எங்கப்பா சோத்துக்கு கஷ்டமின்னாலும் யாரு கிட்டவும் கடன்படப் போகமாட்டாரு...

முனி: அவன் பேசினதைக் கேட்டப்போ ஏதாவது செஞ்சு அவன் கடன்காசை மூஞ்சில விட்டெறியணும் போல எனக்கு ஆத் திரம் வந்திச்சு.

மாத: எவ்வளவு கடன்?

முனி: நூறு ரூவா...

மாத: அம்பிட்டுக் காசுக்கு என்ன பண்றது முனியாண்டி...

முனி: எப்பிடியாவது சேத்துக்கணும்... அதுதான் என்ன செய்ய லாம்னு யோசிக்கிறேன்...

மாத: உஸ்... மிஸ் வாறாடா...

(திடீரென்று ஓசைகள் அடங்குகின்றன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்: வணக்கம் ரீச்சர்...

ஆசி: வணக்கம் பிள்ளைகளே... உட்காருங்க... மாதவன் நேற்று ஒரு குறள் சொன்னேனே... ஞாபகமிருக்கா...

மாத: (தடுமாறி) வந்து... மிஸ்... மகன்... தந்தை... காற்று...

ஆசி: முனியாண்டி...

முனி: மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என்நோற்றான் கொல் எனுஞ் சொல்.

ஆசி: ம்... அதாவது இவனை மகனாகப் பெறுவதற்கு அவனோட அப்பா என்ன தவம் செய்தாரோ என்று மத்தவங்க புகழ்ந்து சொல்ற மாதிரி நடந்து காட்டுறது தான்... ஒரு மகன் தகப் பனுக்குச் செய்யக்கூடிய பெரிய நன்றி... இல்லையா... சரி இனி அடுத்த அதிகாரத்தைப் பார்ப்போம்.

(இடையிசை)

(சந்தை இரைச்சல்களுக்கிடையில் வள்ளியம்மாவும் ராமக்காவும் உரையாடுகின்றனர்)

வள்: என்ன ராமக்கா, உங்கூட்டுக்காரரு பழையபடி பீடி பிடிக்க ஆரம்பிச்சிட்டாரா?

ராம: இல்லியே... ஏன் கேட்டே வள்ளி...

வள்: இல்லை... உம் மவன் முனியாண்டி தான் கடைல ஒரு கட்டு பீடி வாங்கிகிட்டு நின்னான் அதுதான் கேட்டேன்...

ராம: பீடி வாங்கினானா? இருக்காதே...

வள்: அப்ப நான் பொய் சொல்றேங்கிறியா... நான் என் கண்ணால கண்டதத்தானே சொல்றேன். அன்னைக்குக்கூட தியேட்டரு வாசல்ல நின்னுகிட்டிருந்தான்... என்னைக் கண்டதும் ஒளிஞ் சுக்கிட்டான்.

ராம: அவன் போக்கே இப்ப கொஞ்ச நாளா ஒரு மாதிரியாத்தான் இருக்குது வள்ளி.



வள்: ஏன் அவனை நீ கண்டிக்கிறதே இல்லியா?

ராம: கண்டிச்சாப்போல அடங்கிப்போயிடுவானா... இந்தக் காலப்புள்ளைங்களை நாம சொல்லித் திருத்த முடியுமா?

வள்: அதுன்னா நெசம்தான்... இந்தா அவனோட ரீச்சரே வந்துட் டாங்க... பேசிக்கினு இரு மீனை வாங்கிட்டு வந்திடுறேன்...

ராம: கும்புடுறேன் டீச்சரம்மா...

ஆசி: ஆ... யாரு ராமக்காவா... என்ன ராமக்கா உன் பிள்ளைக்கு உடம்புக்கு ஏதும் சுகமில்லையா?

ராம: இல்லியே நல்லாத்தானே இருக்கான்... ஏம்மா கேக்கிறீங்க?

ஆசி: அப்ப ஊட்டில உனக்குதவிக்குன்னு அவனை நிப்பாட்டி பிட்டியா...

ராம: ஊட்டிலயா... இல்லீங்களே டீச்சர்...

ஆசி: அப்படீன்னா, ஏன் அவன் ஸ்கூலுக்கு வர்றதில்ல...

ராம: ஸ்கூலுக்கு வர்றதில்லையா... என்ன டீச்சரம்மா சொல்றீங்க...?

ஆசி: உனக்கே தெரியாம நின்னுட்டானா... யாரும் கெட்ட பசங்க கூட சேர்ந்துக்கிட்டு ஊரைச் சுத்திறான் போல...

ராம: எம்மட்டு நாளா அம்மா அவன் ஸ்கூலுக்கு வரேல்ல...

ஆசி: இப்ப ஒரு மாசமா நான் அவனை காணேல்ல...

ராம: ஒரு மாசங்களா?

ஆசி: ம்... இங்க பாரு ராமக்கா இந்த வயசில அவுங்களை அடிச்சுத் திருத்தாம விட்டுட்டா அப்புறம் அவங்க ஒண்ணுக் கும் ஒதவாதவங்களாப் போயிடுவாங்க... முனியாண்டி நல்ல கெட்டிக்காரப் பையன்... அவன் திறமைய வீணாக்கிப்புடாத... அதைத்தான் நான் சொல்லுவேன்...

ராம: நல்லது... டீச்சரம்மா நான் அவனை கண்டிக்கிறன்.

ஆசி: எனக்கு நேரமாயிடிச்சி. நான் வர்றேன்.

(இடையிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம: (தனக்குள்) வரட்டுக்கும் ராஸ்கல்... காலை முறிச்சு அடுப்பில போட்டிர்றன்...

வேலு: ஏன் ராமக்கா என்ன விஷயம்... ஏன் இப்பிடி துள்ளுறே...

ராம: இத்துனூண்டா இருக்கப்பவே ஸ்கூலுக்குப் போவாம ஊரைச்சுத்த ஆரம்பிச்சிட்டான்.

வேலு: யாரைச் சொல்றே...

ராம: வேறை யாரை... உங்க பிள்ளையத்தான்...

வேலு: முனியாண்டியா...

ராம: ஆமா... தறுதலை எனக்கு மவனா வந்து பொறந்திருக்கான்... வரட்டும் இன்னைக்கு...

வேலு: யாரோ உனக்குத் தப்பாச் சொல்லியிருக்காஙக... அவன் ராத்திரீல கூட லாம்பை ஏத்தி வைச்சி படிச்சுக்கிட்டிருக்கான்... நான் பாத்திருக்கேன்.

ராம: ஏதும் கதைப்பொஸ்தகத்தை வாசிச்சுகிட்டிருந்திருப்பான்... அவன் டீச்சரே சொல்றாங்க... ஸ்கூலு பக்கம் அவன் வர்றதே இல்லையாம்ன்னு...

முனி: (வந்து) அம்மோய்... பசிக்குதும்மா... சாப்பாட்டைப் போடு.

ராம: ஆ... துரை வந்துட்டாரே... உனக்கு தர்றன் சாப்பாடின்னைக்கு... வாடா இங்கிட்டு.... இம்மட்டு நாளா ஸ்கூலுக்கு போவாம எங்கேடா சுத்தினே...? உண்மையைச் சொல்லு இல்ல தோலை உரிச்சுப் போடுவன்...

முனி: வந்தும்மா... (அடிவிழும் ஒலி) ஐயையோ... அடிக்காதேம்மா... அடிக்காதம்மா.

ராம: நான் வயித்தைக்கட்டி வாயைக்கட்டி சம்பாரிச்சு சோறு போட்டு பள்ளிக்கனுப்புறன் நீ என்னடான்னா பயஸ்கோப் பாக்கப் போறியா... (அடித்தல்)

முனி: இல்லேம்மா... நான் படம்பார்க்கப் போகல்லேம்மா... வந்து...

ராம: பீடி வாங்கிட்டுப்போனியாமே... ஊரெல்லாம் சிரிப்பா சிரிக்குது...



உனக்கேண்டா புத்தி இப்பிடியெல்லாம் போவுது... (அழுகை) இம்மட்டு நாளா உன் ஒடம்பில ஒரு அடிகூட விழாம நோவு வராம பாத்தவடா நான்...இன்னைக்கு என் கையாலயே அடிக்க வச்சுபிட்டியேடா... ஏண்டா இப்பிடி செய்றே... சொல்லுடா...

முனி: (அழுகை) அம்மா... அம்மா...

பாஸ்: (வந்து) வேலு... வேலு...

ராம: (திரும்பி) பாஸையாவா? வாங்க வாங்க...

பாஸ்: இந்தாங்க உங்கூட்டு தாலி இதைக்குடுத்திட்டுப் போகலாம்ன்னு தான் வந்தேன்... கசவாரப்பய கந்தையா இதைத் தர்றதுக்குள்ள எத்தினை கதை கதைச்சிட்டான்...

ராம: இது நம்ம கடனுக்குன்னு அடவு வச்ச நகையாச்சே... எப்பிடித் திருப்பித் தந்தாரு.

பாஸ்: காசைக் குடுத்தா திருப்பித் தரத்தானுங்களே வேணும்.

ராம: காசா... யார் குடுத்தது?

பாஸ்: என்ன இப்பிடிக் கேக்கிறீங்க... உங்களுக்கு விஷயமே தெரியாதா... என்ன தம்பி நீங்ககூட ஒண்ணும் சொல்லேல்லியா...

ராம: என்ன பாஸ்... எனக்கின்னா ஒன்னுமே புரிய மாட்டேங்குது...

பாஸ்: அம்மா... தம்பி இப்ப ஒரு மாசமா நம்ம கூடத்தானே வேலைக்கு நின்னிச்சு.

ராம: வேலைக்கா...

பாஸ்: ஆமா... இப்பிடி இப்பிடி வீட்டில கஷ்டம்னு தம்பி சொல்லிச்சு... சரி நமக்கு ஒதவிக்கு நிக்கட்டுமேன்னு வச்சுகிட்டேன்... குத்தம் சொல்லக்கூடாது சீமேந்து குழைக்கிறதுன்னாலும் சரி கல்லடுக்கிறதுன்னாலும் சரி, தம்பியோட வேலைல மிஸ்டேக்கே சொல்லமுடியாது... சமயத்தில நமக்கு பீடி வெத்திலை எல்லாம் வாங்கிட்டு வருவாரு... தியேட்டரு மதில் கட்டிற வேலைல நமக்கு வலது கைமாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்னது தம்பிதானே... அந்தச் சம்பளத்தை குடுத்துத்தான் தம்பி இதை மீட்டிருக்காரு...

ராம: (அழுகை) ஐயோ மவனே... தெரியாம உன்னை அடிச்சுப் பிட்டேன்டா... எங்க குடும்ப மானத்தைக் காக்க இந்த வயசிலயே நீ வேலைக்குப் புறப்பட்டிட்டியாடா... வேணாண்டா ராசா வேணாம்... நீ படிச்சு பெரிய ஆளா வரணும்... அதுதாண்டா எனக்கு வேணும்...

முனி: அம்மா... நிச்சயமா சத்தியமா நான் படிப்பேம்மா.....

(முடிவிசை)



# யாருக்கு வெற்றி?

***கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்.*** *(குறள்: 796)*

பாத்திரங்கள்: தயாளன்
பெரியண்ணன்
ராஜ்குமார்
வேலு
தயாளனின் தாய்

பெரிய: என்னடா தயாளன்... இந்த வாட்டி ராஜ்குமார் பெஸ்ட் அடிப்பான் போல இருக்குடா...

தயா: ஆமாடா... பெரியண்ணன் அதுதாண்டா நானும் பாக்கிறேன்... அவனை எப்படியாச்சும் ஓடாம பண்ணிட்டா...

பெரிய: நீ தான் பெஸ்ற் அடிப்பே... போன வரிசம் அடிச்சேதானே...

தயா: இந்த வரிசம் இவன் வந்து ஸ்கூல்ல சேந்ததில நான் தோத்திடுவன் போல இருக்குடா...

பெரிய: நீ தோக்க நான் உட்டிடுவனா?

தயா: என்ன செய்யலாம்கிறே...?

பெரிய: கால்மாட் போட்டு ஆளை உழுத் தாட்டி விட்டா எப்பிடி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயா: டேய் டேய்... அம்பிட்டா சேரிட்ட தப்பேலாதுடா...

பெரிய: ஸ்கூல் முடிஞ்சாப்புறம் றோட்ல வச்சடிப்பமா...

தயா: போடா... அது பிறகு பெரிய கரச்சல்ல தான் வரும்...

பெரிய: ஆ... இப்பிடி செய்யலாம்டா...

தயா: எப்பிடி...?

பெரிய: ஐ ஜம்ப் பாய வருவான்தானே... அப்ப கவுத்தைப் புடிச்சு கொஞ்சம் உசக்க இழுத்துவிட்டிட்டா?

தயா: டொப் ஐடியா... அதுதாண்டா சரி...

பெரிய: நீ இதபத்தி ஆரிட்டயும் வாய விட்டிடாத...

தயா: நான் ஏண்டா சொல்லப்போறன்... அந்தா கட்டையன் வர்றான்... அவன்தாண்டா நம்ம மனோகரன் வாறான். கதைய மாத்து...

பெரிய: இன்னைக்கு என்னைத்தாண்டா பிஸ்கட் போட சொல்லி சேர் சொல்லியிருக்கார்...

தயா: எனக்கும் ஒண்டு கூட கொண்டு வா. என்ன?

மனோ: (வந்தபடி) என்னடா அப்ப பெரிசா வாயடிச்சே... ராஜ்குமார் உன்னை அடிச்சிட்டான் தானே...

தயா: போடா... போடா... நேத்து ஆறு மைலு நடந்து கால் சுளுக்கிடிச்சு... இல்லாக்காட்டி நான்தான் பெஸ்றா அடிச்சிருப்பேன்...

மனோ: போடா உனக்கு வாய்தான்...ம்...

தயா: நீ வேணும்னா இருந்து பாரேன்டா, மனோகர்... ஸ்போட் மீட்டன்னிக்கு யாரு அடிக்கிறாங்கன்னு....

பெரிய: இவனோட பேசாத மச்சான்... இவன் அவனூட்டு ஆளு...

மனோ: நல்லவங்க கூடத்தான் யாரும் சேருவாங்க... உங்கூடச் சேர்ந்தா எருமையோட சேந்த மாதிரித்தான்...

பெரிய: டேய் மனோ. என்கூட சும்மா சும்மா வாயடிக்காத...



மனோ: உன்னோட நான் பேச வரேல்லியே... நான் தயாளன் கூடத்தானே பேசினேன்...

தயா: சரி சரி விடு மச்சான் அவனை...

பெரிய: பயந்த பீச்சிடா... ஓடிட்டான் பாத்தியா...

(இடையிசை)

பெரிய: எப்பிடி மச்சான், ஸ்போட் மீட்ல என்ட வேலை எப்பிடி...

தயா: பிறெண்டின்னா நீதான்ரா பிறெண்ட்...

பெரிய: கடைசீல உன்னை பெஸ்ற் அடிக்க வச்சிட்டன் தானே...

தயா: பாவம் குமாரு... கை எலும்பு பிசகிடிச்சாம்...

பெரிய: அவனுக்கு வேணும்...

தயா: சேரு கூட கவனிக்காத மாதிரி நீ கவுத்தை ஒசத்தி யிட்டேடா...

பெரிய: (சிரித்தபடி) ஆள் விளுந்தான் பாக்கணும்... சும்மா கறணம் அடிச்சுக்கிட்டில்ல விளுந்தான்...

தயா: உளுந்தப்புறம் எந்திரிக்கவே இல்லையா... நான் பயந்தே போய்ட்டன்...

பெரிய: சரி அந்தக் கதைய விடு.... நா உங்ககிட்ட ஒரு சங்கதி சொல்லணும்... நீ சரி சொல்லுவியோ தெரியாது....

தயா: நீ என்ட பெஸ்ற் பிறெண்டுதானே மச்சான்... உனக்குச் சரி சொல்லாம.... சங்கதியைச் சொல்லு...

பெரிய: எங்கூட்டுக்கு பக்கத்து தோட்டத்தில பிலாக்கா நல்லா முத்திப்போய் இருக்குடா... இன்னைக்கு ராத்திரிக்கு அது எல்லாத்தையும் ஒவ்வொண்ணா சத்தமில்லாம புடுங்கி... அடே! உங்க அம்மா வர்றாங்க, வேற என்ன சரி கதைப் போண்டா...

தயா: அடே உங்கூட்டில பீரோ ஒண்ணு வாங்கி இருக்கீங்க தானே... அது என்ன வெலைடா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய: அது எவ்வளவுன்னு எனக்குத் தெரியாதுடா...

தயா: எங்கூட்டுக்கும் அது போல ஒண்ணு வாங்கணும்டா... எனக்குச் சரியான ஆசை...

அம்மா: (வநது) நீ நல்லாப் படிச்சு ஒழைச்சீன்னா வாங்கிப் போடலாம் தானே... (உள்ளே திரும்பி) சாந்தி, இந்த அண்ணங்க ரெண்டு பேத்துக்கும் கோப்பி ஊத்திட்டு வாம்மா...

தயா: தங்கச்சி... ராகினி ஊட்டுக்கு இப்பதானே வெளையாடப் போச்சும்மா...

அம்மா: (உள்ளே சென்றபடி) ஒரு நிமிசம் இவ வீட்டில தங்கிறாளா...

பெரிய: (ரகசியமாக) அப்பாடா தப்பினம்... நாங்க என்னா செய்ய ணும் தெரியுமா, பிலாக்காவ புடிங்கிகிட்டு சத்தமில்லாம அதை எங்கயாச்சும் கொண்டு போய் வித்துப்பிட்டுக் காசை எடுத்துப் படம் பாக்கலாம்டா...

தயா: ராவுக்கின்னா ஊட்டைஉட்டுப் போறப்போ ஏன்னு கேப்பாங் களேடா...

பெரிய: எங்கூட்டுக்குப் போவ நான் கூப்பிடுறேன்னு சொல்லி இப்பவே அம்மாகிட்ட சொல்லிபிட்டு வாவேண்டா...

தயா: சரிடா... உனக்கா வர்றேன்...

அம்மா: இந்தாங்க தம்பி கோப்பிய குடிங்க...

பெரிய: உங்கீட்டுக் கோப்பி நல்ல ருசியாத்தாண்டா இருக்கு...

தயா: (திரும்பி சத்தமாக) அம்மா என்னைய பெரியண்ணன் ஊட்டுக்கு வரவாம்... நான் போய்ட்டு நாளைக்கு வரவா அம்மா...

அம்மா: (வந்து) அப்புறம் அப்பா கேட்டார்ன்னா என்னடா சொல்றது....

தயா: என்ட நல்ல அம்மா தானே... அப்பாகிட்ட, மாமா ஊட்டுக்கு எங்கயாச்சும் அனுப்பினேன்னு சொல்லிடுங்க அம்மா... என்ட செல்ல அம்மா தானே...



அம்மா: சரிடா... சரி... போய்ட்டு கவனமா திரும்பி வா... ஆ, நீ இன்னும் சாப்பிடல்லியே...

பெரிய: எங்கூட்டில சாப்பிட்டுக்கலாம்... மாமி...

அம்மா: அப்ப சரி போங்க...

இருவர்: போய்ட்டு வர்றம்...

(இடையிசை)

(இரவு நேர ஒலிகள் தொடர்தல்)

பெரிய: டேய் சத்தம் காட்டாம மேல ஏறு... யாரும் வர்றாங்களான்னு நான் பாத்துக்கிறேன்...

தயா: டேய்... வழுக்குதுடா...

பெரிய: கெட்டியாய்ப் புடிச்சிக்க...

தயா: டேய்... பந்தம் கொழுத்திகிட்டு யாரோ வர்றாப்போல தெரியுதடா...

வேலு: (தூரத்தில் இருந்து) யார்றா அவன்...?

பெரிய: (ஓடியபடி) ஐயையோ காவக்காறண்டா... குதிடா... குதி...

வேலு: யார்றா அங்க ஓடுறவன்... டேய்...டேய்... நில்லுடா...

தயா: (மேலிருந்தபடி) டேய் பெரியண்ணன்... ஓடதடா... நில்லுடா நானும் வந்துடறேன்...(மரத்தின் மேலிருந்து கிழே விழும் ஒலி) ஐயோ... அம்மா... ஆ...என்...காலு. என் காலு...

வேலு: யார்றா அது... மரத்து மேல ஏறி உளுந்தவன்... கள்ளப் படுவா... பெலாக்கா புடுங்க வந்தியா... எந்திரிடா...

தயா: (முனகி) ஐயா... உங்களை கும்பிடுறேன்... என்னை ஒண் ணும் செஞ்சுபுடாதீங்க... அவன்தான் களவாண்டக் கூப்பிட் டான்... ஐயோ என் காலு... உசிரு போகுதே (அழுதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலு: அவன் கூப்பிட்டான்னு நீ வந்தியா... இப்பபாத்தியாடா... அவன் உன்னை மாட்டிவிட்டு ஓடிட்டான்... நீ அவஸ் தைப்படுறே... படு படு... உனக்கு வேணும்...

குமார்: (தூரத்தில் இருந்தபடி) அப்போய்... அப்போய்...

வேலு: (திரும்பி உரத்தபடி) இங்கு இருக்கேண்டா குமாரு... இப்பிடி சுத்தி வா...

தயா: ஐயா.... என்னால எந்திருக்க முடியாதுங்க... கொஞ்சம் கையப் புடிச்சி தூக்கிவிடுறீங்களா.

வேலு: ஆமா. தொறைக்கு எந்திரிக்க ஏலாது... இப்ப நான் கையப் புடிக்கணும்... அப்புறம் மெத்தைல படுக்க வச்சு காலப்புடிச்சு விடுறேன்... பாவம்னு சொல்லி நாலு சாத்தாம இருக்கேன் பாரு... அதுதான்... உன்னை இப்பிடி பேச வைக்குது...

குமார்: (வந்து) என்னப்பா... உங்களை எங்கெயெல்லாந் தேடுறது... (திடீரென) யாருப்பா இது...

வேலு: யாரோ களவாணிப்பய... பெலாக்கா புடுங்க வந்திருக்கான்... அண்ணைக்கும் நாலு காயி களவு போயிடிச்சி... இன் னைக்கு வசமா மாட்டிக்கிட்டான்...

குமார்: அந்தப் பந்தத்தை இஞ்சிட்டு மூஞ்சிகிட்டக் கொஞ்சம் புடியுங்கப்பா... பாப்பம் (அதிர்ச்சியுடன்) ஆ.... தயாளன்... நீ... நீயாடா...?

வேலு: இவனை ஒனக்கு முன்னாடியே தெரியுமா மவனே?

குமார்: என் கூடத்தான்ம்பா ஸ்கூல்ல படிக்கிறான்... டைவரா இருக்காரே மாரிமுத்து அவரூட்டுமவன்.

வேலு: (அதிர்ச்சியுடன்) ஆ... அவரு மவனா... அவரு தங்கமான ஆளாச்சே... ஏண்டா தம்பி உனக்கிப்பிடிப் புத்தி போச்சு... உங்கப்பாரு அறிஞ்சா கொண்ணு போடுவாரே உன்னை...

தயா: ஆமாங்க... எல்லாம் பெரியண்ணனால வந்தது தான்...

வேலு: கூட்டாளிக சரியில்லாட்டி இப்பிடிதான் தம்பி...



தயா: குமாரு உன் மொகத்துப் பாக்கவே எனக்கு வெக்கமா இருக்குடா... எங்கப்பாகிட்ட இதெல்லாம் சொல்லிப்பிடாத...

குமார்: நான் ஏண்டா சொல்றேன்... நீ எந்திரி...

தயா: கால் முட்டில சரியான அடி பட்டிருச்சுடா... எந்திரிக்க முடியுதில்ல...

குமார்: அப்ப நான் உன்னைத் தூக்கிட்டு போவட்டா...

வேலு: டேய் நேத்தைக்குத்தான் கை கொஞ்சம் குணமாகி கட்ட அவுத்தே... இன்னைக்கு என்னடான்னா... உடு... நானே தூக்கிகிட்டு வர்றேன்...

குமார்: ரேஸ் ஓடினதில இவன்தாம்பா பெஸ்ற் அடிச்சானாம்... இல்லியா தயாளன்...

வேலு: நம்ம தம்பிக்கு கை ஏலாமப் படுத்திட்டான்... இல்ல உனக்கு மேலால ஓடிக்காட்டியிருப்பான்... என்னடா குமாரு...

குமார்: சும்மா போங்கப்பா... உங்க பிள்ளைன்னா உங்களுக்கு உசத்திதான்... என்னமோ வெத்தி வெத்திதான்.

தயா: நான் தோத்திட்டண்டா குமார்... நீ தான் வெண்ணிட்டே....

குமார்: என்னடா சொல்றே..?

தயா: ஆமாடா... நான் தான் ஏதோ பெரிசா வெண்ணிட்டதா நெனைச்சுகிட்டிருந்தேன்... ஆனா நீ ஓடாமலே உன் அன்பால எல்லாத்தையும் வெண்ணிட்டே... உனக்கு நான் செஞ்சதுக்கு நீ செஞ்சிருக்கிறத நெனைச்சா எனக்குத்தான் தோல்வியா அவமானமா இருக்கு... உன்னை யாராலையும் வெல்ல முடியாதுடா குமார்...

குமார்: விழுந்ததில நல்ல அடிபட்டிருச்சுப்போல... சும்மா பெனாத்தாம இருடா...

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்.** *(குறள்: 314)*

# பகையும் நட்பும்

பாத்திரங்கள்: பூபாலன்
வசந்தன்
வீரமுத்து
முருகேசன்
கண்டக்டர்

பூபா: டேய் வசந்தன், அங்க பாத்தியா?

வச: ஆமா... சேறோட பழைய குடை....

பூபா: அதில்லடா... குடைக்குப் பக்கத்தில பாரு...

வச: குடைக்குப் பக்கத்தில குப்பைக் கூடை....

பூபா: கூடைக்கு அங்கிட்டுப் பாரு வசந்தன்...

வச: என்ன பூபாலன்... எதைச் சொல்றே...? எனக்கொண்ணும் வித்தியாசமாத் தெரியமாட்டேங்குதே...

பூபா: உனக்கென்ன கண் பொட்டையா? அங்க பாரு, ஒல்லியா உசரமா ஒருத்தன் உக்காந்திருக்கான்.

வச: ஆமாடா, இப்பதான் கவனிச்சேன்... யாரு அவன்...?



பூபா: அவன்தாண்டா புதுக்க நம்ம ஸ்கூல்ல வந்து சேர்ந்திருக்கிறவன்...

வச: இன்னைக்கா...

பூபா: ஆமா, அவனை ஏதாவது செய்யணும்டா... வேடிக்கை பண்ணணும்...

வச: என்ன செய்யலாம்...?

பூபா: அழவைச்சுப் பாக்கணும்போல இருக்குடா...

வச: உன்னால முடியுமா?

பூபா: பாரேன் செஞ்சு காட்டுறேன்... வா என்கூட... (வீரமுத்துவிடம்) டேய் ஒன் பேரென்ன?

வீர: (பயத்துடன்) வீரமுத்து...

பூபா: (சிரித்து) ஹோ... ஹோ...ஹோ... பேரைப் பாரேன் பேரை... வீரமுத்தாமில்ல...

வச: ஒல்லிமுத்துன்னு வைச்சிருக்கலாம்... (இருவரும் சிரித்தல்)

பூபா: உங்கப்பா பேரென்ன?

வீர: மாடசாமி...

பூபா: மாடசாமியா, மாட்டுசாமியா...

வீர: (கோபமாக) மாட்டுசாமி இல்ல மாடசாமிதான்... உனக்கென்ன காது செவிடா.....

பூபா: டேய் வாயடிக்கிறான்... வாயடிக்கிறான்... டேய் இந்த ஸ்கூல்ல என்கிட்ட ஒரு பயல் வாயடிக்க மாட்டான் தெரியுமா?

வீர: எல்லாம் பயந்தாங்கொள்ளிங்க போல...

பூபா: சும்மா சும்மா வாய் போடாதை, அப்புறம் நான் பொல்லாதவனாயிடுவேன்.... (வீரமுத்து மௌனமாக இருக்க வசந்தனிடம் மெதுவாக) வசந்தா பாத்தியா, பயல் பயந்திட்டான், கப்சிப்புன்னு ஆயிட்டான்...

வச: ஆமா... ஆமா... ஆனா அழமாட்டான் போலதானிருக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபா: இரு இரு... பாடத்தில கேள்வி கேட்போம்...

வச: பாடத்திலயா, நமக்கும் அதுக்கும் ரொம்ப தூரமாச்சே...

பூபா: அதுவும் சரிதான், அப்ப படத்தைப்பத்திக் கேட்போம்...

வச: அது நல்ல ஐடியா... கேளு பூபால், கேட்டு மடக்கு இவனை...

பூபா: ஏய், நீ சினிமாவில எந்த நடிகர் கட்சி?

வீர: நான் யார் பக்கமுமில்ல...

பூபா: பொய் சொல்லாத, நீ யார் கட்சி?

வீர: இதைப்பத்தியெல்லாம் எனக்கெதுக்கு... சும்மா நடிகங்களை யெல்லாம் யோசிச்சுக்கிட்டிருந்தாப் படிப்பு வருமா?

வச: பெரிய படிப்பாளிடா...

பூபா: உங்கப்பா என்ன பி.ஏயா எம்.ஏயா...

வீர: எங்கப்பா... சீ.ஏ...

பூபா: (வசந்தனிடம் மெதுவாக) அதென்னடாது சீ.ஏ எங்கிறான்...

வச: நமக்குத் தெரியாத விசயம் விட்டுத் தள்ளு...

பூபா: உனக்குக் கராட்டே தெரியுமா? கராட்டே...

வீர: என்ன டே...?

வச: உன்னைப் பார்த்து டேய் எங்கிறான்டா...

பூபா: கராட்டே ஷொட்டொண்ணு குடுத்தா தெரியும்...

வீர: நீங்க மிச்சம் காலமா இங்க படிக்கிறீங்களா?

பூபா: ஏன் கேட்கறே...?

வீர: இல்லை, ரொம்ப வயசானவங்களாத் தெரியுதே... அதுதான்... ஒவ்வொரு வகுப்பிலையும் மூணு வரிசம் இருந்து எழும்பி இருப்பீங்க போல...

வச: என்னடா நம்பளையே நக்கலடிக்கிறான்...

பூபா: டேய், பாவம் பாத்தா நீ பெரிய ஆள்மாதிரி நக்கலடிக்கிறே இல்ல...



வச: வேணாம்டா... அவனுக்கு உடம்பில எலும்புதான் மிச்சமிருக்கு, அப்புறம் நீ கைவச்சா...

பூபா: இருக்கிறதும் நொறுங்கிப் போயிடுமேன்னுதான் பாக்கிறேன்...

(மணியடிக்கிறது)

வச: வாடா அப்புறமா இவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்கலாம்...

(இடையிசை)

வச: டேய் பூபாலா... அந்தப் பயல் சேறையும் நல்லாப் பந்தம் புடிச்சிட்டாண்டா...

பூபா: ஆமாடா... முந்தின ஸ்கூல்ல அவன்தான் பெஸ்டாம்...

வச: தேவாரம்லாம் என்ன மாதிரிப் பாடமாக்கி வச்சிருக்கான்...

பூபா: படிப்பை விடுடா... என்னோட அடிச்சிக்க வந்தான்னாத் தெரியும்...

வச: அப்புறம் சேறு உன்னைத்தான் உதைப்பாரு...

பூபா: அதுதாண்டா நானும் யோசிக்கிறேன்... இல்லேன்னா...

வச: நீ தேவாரம் சொல்லத் தெரியாம நின்னப்போ... அவன் ஒரு மாதிரி சிரிச்சாண்டா, கவனிச்சியா?

பூபா: நானும் கவனிச்சேன்... அதுக்குத்தான் அவனுக்கு என்னவும் செய்யணும்னு எண்ட கை துடிக்குது.

வச: முருகேசும் இண்ணைக்கு சேறுகிட்ட ஏச்சு வாங்கினான் பாத்தியா பூபால்...

பூபா: முருகேசுக்கும் அவனில கோவம் இருக்கும்னு நெனைக் கிறேன்...

வச: ஏன்?

பூபா: இவ்வளவு நாளும் அவன்தானே நம்ம வகுப்பில ஃபெஸ்டா வர்றவன்...

வச: ஆமா... ஆமா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபா: அவனோட இவன மாட்டி வைச்சா எப்பிடி?

வச: நல்ல ஐடியா... ரெண்டுபேரும் அடிச்சுகிட்டாலும் நாம மாட் டிக்க மாட்டோம்...

பூபா: எப்பிடி என் மூளை...

வச: அருமை... அருமையிலும் அருமை, ஒண்ட மூளையை மியூசியத்திலைதான் கொண்டிட்டுப்போய் வைக்கணும்...

பூபா: டேய் அந்தா முருகேசு வர்றான்...

வச: மெதுவா கதையக் குடு...

பூபா: முருகேசு, உனக்கு விஷயம் ஒண்ணு தெரியுமா?

முரு: (வந்தபடி) என்னது?

பூபா: ஏண்டா வசந்தன், சொல்லுவமா?

வச: வேண்டாம்டா, பாவம் முருகேசு...

முரு: என்ன விஷயம், சொல்லடா பூபால்...

பூபா: ஒண்ணுமில்ல, இப்ப புதுசா சேர்ந்திருக்கானே ஒரு தேவாங்கன்

முரு: யாரு... வீரமுத்துவா?

பூபா: ஆமா... அவன் சொல்றான், படிப்பில தன்னை அடிக்க யாராலயும் ஏலாதாம்...

முரு: சொன்னா சொல்லிட்டுப் போறான்...

பூபா: உன்னைப் பத்தியும் என்னமோ சொன்னான்டா... இல்லையா வசந்தன்...

வச: ஆமா, சொன்னான் சொன்னான்...

முரு: என்ன சொன்னான்?

பூபா: நீ ஒரு பயந்தாங்கொள்ளியாம்...தன்னோட சண்டைபோட வந்தாத் தூக்கித் தூக்கி அடிப்பானாம்...

முரு: அப்பிடிச் சொன்னானா?



பூபா: ஆமா... வேணும்னாவசந்தனைக் கேளேன்... நான் சொல்றது பொய்யான்னு...

வச: உனக்கு ஒரு கண்ணு வாக்காம்... கொஞ்ச நாளேல பொட்டை யாப் போயிடுமாம்னும் சொன்னான்...

முரு: ஆ... என்ன துணிச்சல் அவனுக்கு, அவனுக்குத் தெரியேல்லை என்னைப்பத்தி...

பூபா: நீ யாருகூடவும் சண்டை போட்டுக்கிறதில்லைத்தானே, அவன் நினைச்சிட்டான் நீ அவனுக்கும் பயமுன்னு...

முரு: ஒண்ணு குடுத்தேன்னாத் தாங்கமாட்டாண்டா அவன்...

வச: நாங்க அப்பிடித்தான் சொன்னோம்... அவன் சொல்றான், உன் பல்லைக் கழட்டிக் கையில தருவானாம்...

முரு: பெரிய ஆள்னு நினைச்சிட்டானா... வரட்டும், பாக்கிறேன்...

பூபா: நல்ல செமத்தியாக் குடுக்கவேணும்... அப்பதான் வாயை மூடிக்கிட்டிருப்பான்...

வச: நீ பயப்பிடாத முருகேசு, நாங்க இருக்கோம் சப்போட்டுக்கு'...

பூபா: (மெதுவான குரலில்) அந்தா ஆள் வர்றான்...

முரு: டேய் வீரமுத்து, நீ என்னைப்பத்தி என்னமோ சொன்னியாமே...

வீர: உன்னைப்பத்தியா... நான் யாரைப்பத்தியும் ஒண்ணும் சொல லல்ல...

பூபா: பொய் சொல்றாண்டா... பொய் சொல்றான்... எடுத்த உடனே பொய் சொல்றான்....

முரு: கவனமா இருந்துக்க... என்னோட கொழுவினா எலும்பெல்லாம் எண்ணிப்போடுவேன்...

வீர: நான் என்ன கம்பியா உன்கூட வந்து கொழுவிறதுக்கு...

வச: பாத்தியா, உங்கூடயே வாயடிக்கிறான்...

முரு: வாடா, எங்கூட அடிச்சுக்கலாம் பாப்பம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீர: கொழுப்புமெத்தினா போய் எருமைமாடுகூட முட்டிக்க, ஏன் என்னோட வர்றே...

முரு: என்னடா சொன்னே...

வச: உன்னை எருமை மாடாம்... என்ன துணிச்சல் இவனுக்கு...

முரு: இந்தா, எருமை மாட்டோடை இடியைப்பாரு... (குத்துதல்)

வீர: ஆ... அம்மா...

பூபா: ஆ... அப்பிடித்தான் வேணும்... போடுடா முருகேசு...

வச: காலால எத்திறான், விடாதை...

முரு: பல்லைக் கழட்டித் தர்றேன்னியா... இந்தா வாங்கிக்க... (குத்துதல்)

வீர: ஐயோ..... (தொடர்ந்து முனகுதல்)

வச: போதும்டா, விட்டிடு... வாயில வேற ரத்தமும் வருது...

முரு: இனிமேப்பட்டு ஏதாவது கதைச்சீன்னாத் தெரியும்... இதுக்கு ரெண்டு மடங்காத் தருவேன்...

பூபா: (மெதுவாக) டேய் வசந்தன்... வாடா நாம போயிடுவம்...

வச: ஆமா, அப்புறம் சேறு யாரும் கண்டா நாமதான் மாட்டிக்குவம்...

முரு: டேய், டேய்... நில்லுங்கடா, நானும் வர்றேன்...

வீர: ஆ.... ஐயோ... அம்மா... (முனகுதல்- ஒலி தணிதல்)

(இடையிசை)

(பஸ் வந்து நிற்கும் ஒலி)

பூபா: டேய், பஸ் வந்திடிச்சுடா...

வச: ஏறு ஏறு... எப்படியாவது இடிச்சுக்கிடிச்சு முன்னுக்கு போயிடுவம்...

கண்ட: ரைட்... (மணி அடிக்கிறது- பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது)



பூபா: வீரமுத்துவும் இந்த பஸ்ஸிலதான் ஏறினான்போல...

வச: ஆமா... பின்னுக்கு நிக்கிறான்... ஆளுக்கு நல்ல அடி...

பூபா: முருகேசு இப்பிடி சண்டை போடுவான்னு நான் நெனைக்கவே இல்லடா...

கண்ட: ரிக்கற்... ரிக்கற்...

பூபா: சீசன்...

வச: சீசன்...

கண்ட: (தூரத்தில்) தம்பி ரிக்கற்றெங்க...

முரு: சீசன்...

கண்: எங்கே எடு பாப்பம்...

முரு: இங்கதான் வச்சிருந்தேன்... காணேல்ல...

கண்ட: சும்மா பொய் சொல்ல வேணாம்... காசை எடு... இல்லை, பொலிஸிலைதான் புடிச்சுக் குடுப்போம்.

முரு: காசு... காசு... ஆ... அவன்கிட்ட வாங்கித் தர்றேன்... டேய் பூபாலன்...

பூபா: என்ன முருகேசு...

முரு: உன்கிட்ட ஒரு அம்பேசம் இருக்கா... நாளைக்குத் தர்றேன்...

பூபா: இல்லையேடா...

முரு: உன்கிட்ட இருக்கா வசந்தன்...

வச: என்கிட்டயும் இல்லையேடா...

கண்: தம்பி... என்ன முழிக்கிறே... காசில்லையா... கள்ளமா ஏறிக் கிறது... ரிக்கற் வாங்காமலே போறது, இதுதானே வழக்கம்....

முரு: இல்லையில்லை, இண்ணைக்குத்தான்...

கண்: தெரியும் தெரியும்... அம்பிட்டாத்தான்... பொலிஸ் ஸ்டேஷனுக்கு முந்திப்போயிருக்கிறியா...

முரு: (அழுதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்: அழுது வேலையில்லை... இண்டைக்குக் கட்டாயம் ஸ்டேஷனுக்கு கொண்டுபோறது... உங்களாலை எங்களுக்குத்தான் கரைச்சல்...

வீர: கொண்டக்டர்... இந்தாங்க ஐம்பது சதம்... அவனுக்காக நான் குடுக்கிறேன்...

கண்: நீ இவனோட கூட்டாளியா... நல்ல கூட்டாளி, இப்பிடி நேரத்திலதான் உதவி செய்வான்... சரி சரி... இந்தா ரிக்கற்... (பஸ் ஓடுகிறது)

முரு: (தயக்கத்துடன்) வீரமுத்து... உன்னைப்பத்திச் சரியாத் தெரியாம உன்னை அடிச்சிட்டேன்... வீரமுத்து, எனக்கு உன்கூட பேசவே ஒருமாதிரியா இருக்கு...

வீர: எனக்குத் தெரியும், உன்னை அவங்கதான் ஏத்தி விட்டிருப்பாங்கன்னு...

முரு: நீ மட்டும் அந்த நேரத்தில காசு குடுக்கலேன்னாப் பொலீசில தான் கொண்டிட்டுப்போய் என்னை அடைச்சிருப்பாங்க....

வீர: அப்பிடித்தான் கொண்டுடிட்டுப் போயிருந்தாலும் நான் எங்க மாமாகிட்டச் சொல்லி உன்னை விடுவிச்சிருப்பன்... எங்க மாமாவுக்குப் பொலிஸ் ஸ்டேஷனிலதான் வேலை...

முரு: இனிமே நான் ஒருக்காலும் உன்கூடச் சண்டை போடவே மாட்டேன்... நாம பெஸ்ட் ஃபிறெண்ட்ஸாவே இருப்போம்...

வீர: அப்பிடீன்னா நீ இண்ணைக்கு எங்கூட்டுக்கு வந்து காப்பிடணும்... வர்ரியா முருகேசு...

முரு: ரைட்டோ... நீ நாளைக்கு எங்கூட்டுக்கு வந்து சாப்பிடணும், வர்ரியா, என்ன சம்மதமா?

வீர: ஓக்கே... (இருவரும் மகிழ்வாகச் சிரிக்கின்றார்கள்)

(முடிவிசை)



**பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**
**பெருகலிற் குன்றல் இனிது.** *(குறள்: 811)*

# நெஞ்சுக்கு நீதி

பாத்திரங்கள்: சீலன்
சுகுமார்
மனோகர்
அப்பா கந்தசாமி

சீல: ஏண்டா சுகுமார், உன்னை நான் எங்கிட்டெல்லாம் தேடுறேன்... காங்கவே முடியல்லியே...

சுகு: ஏண்டா சீலன் என்னைத் தேடினே? என்ன விஷயம்...

சீல: ஏண்டா தெரியாதா நாளைக்கொரு புதுப்படம் ரிலீசாவுது... போலாமிண்ணிட்டுதான்...

சுகு: படத்துக்கா... இந்த நேரத்திலயா... எக்ஸாம் வருது... படிக்கணும்டா...

சீல: போடா, பெரிய எக்ஸாம்... நாம விழுந்து விழுந்து படிச்சாலும் சரி, நாம படிக்காத பகுதியில தான் பார்த்து கேள்வியே வரும்... இதுக்குப் போய் படிச்சு நேரத்தை வீணாக்குவாங்களா யாரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகு: நீ சொல்றதும் சரிதாண்டா... ஆனா படிக்காம எப்படீடா எக்ஸாமில பாஸ் பண்றது?

சீல: அதுக்கு வழி இருக்குடா...

சுகு: வழியா என்ன வழி...

சீல: குறுக்கு வழிடா...

சுகு: அது சரிடா... சோதனைல எப்படீடா குறுக்கு வழில பாஸ் பண்றது....

சீல: நீ என்னடா சுகுமார் ஒண்ணுமே தெரியாத பச்சைக் கொழந்தையா இருக்கே... இங்க கிட்ட வா சொல்றேன் (ரகசியமாக) சோதனைக்கு முத நா பேப்பர் நம்ம கைக்கு வந்துடும்...

சுகு: எப்படீடா?

சீல: அதுக்கு ஆள் இருக்குடா... இந்த பேப்பரெல்லாம் அச்சடிக்கிற இடம் இருக்கில்ல அங்க ஒரு ஆளை நான் பழக்கம் புடிச்சிக் கிட்டிருக்கேன்... அவன் கையில ஒரு அஞ்சு பத்தை வச்சா... உம்... அந்தக் கவலை உனக்கேன்டா...

சுகு: நீ பெரிய ஆள் தாண்டா... நீ சொல்றதை எல்லாம் கேட்கவே எனக்குப் பயமாயிருக்கு...

சீல: நீ வேணும்னா பயந்து நடுங்கு... ஆனா, அந்த நடுக்கத்திலே நான் சொன்ன விஷயத்தை வெளியில சொல்லிப் பிடாதை... ரகஸியமா வச்சுத்தொலைடா...

சுகு: அது சரிடா... கேள்வி தெரிஞ்சாலும் பதில் எழுதுறதுக்குப் படிக்கத்தானேடாவேணும்...

சீல: அட மடையா மடையா... கேள்வி தெரிஞ்சப்புறம் ஏண்டா படிக்கணும்... பதில் எல்லாம் எழுதி தயாரா வச்சுக்கணும்... அப்புறம் எக்ஸாம் ஹோல்ல வச்சு மெதுவா கொப்பி பண்ணிக் குடுத்திட வேண்டியது தானே...

சுகு: அப்பிட்டுக்கிட்டா...

சீல: ஏண்டா அம்பிட்டணும்... அது ஒரு மாதிரி பிடிபடாம அடிச்சிட லாம்டா... அதெல்லாம் நான் செட் பண்ணித் தர்றேன்... நீ



நாளைக்கு என் கூடப் படத்துக்கு வர்றியா...?

சுகு: படத்துக்கு வரலாம் தாண்டா... ஆனா சல்லி தான் இல்ல...

சீல: என்னடா நீ? உனக்கு எல்லாமே சொல்லித் தரணும் போல இருக்குடா... உங்கிட்ட சல்லி இல்லேன்னா உங்கப்பா சல்லிய எடுக்கிறது தானேடா...

சுகு: எங்கப்பா சல்லியையா... அவர்தான் குடுக்கமாட்டாரேடா...

சீல: குடுக்காட்டி நீயா எடுத்துக்கிறது...

சுகு: களவெடுக்க சொல்றியா...

சீல: போடா மடையா, உங்கப்பா சல்லிய நீ எடுத்தா அது களவாடா...

சுகு: களவில்லாம வேற என்னடா...

சீல: நான்னா எங்க அப்பா சாக்கில தாண்டா கைய விடுவேன்... எங்கம்மா கண்டாக் கூட ஒண்ணும் சொல்லாது.

சுகு: அப்பிடியா...ஏண்டா அப்பிடி...?

சீல ஏன்னா, அம்மா கூட அப்பாவுக்குத் தெரியாம அவர் சேப்பில இருந்து அடிக்கடி காசெடுக்கும்... இதை நான் ஒரு நாள் கண்டுகிட்டன்... அதுக்கப்புறம் தான் நானும் எடுக்க ஆரம் பிச்சேன்...

சுகு: எங்கம்மா அப்படி எடுக்கிறதில்லையேடா...

சீல: போடா... உனக்குத் தெரியாது. எல்லா அம்மாமாரும் அப்பிடித் தாண்டா... நீ காணாதப்போ எடுத்திருப்பா...

சுகு: அப்பிடித்தாண்டா நானும் நெனைக்கிறேன்...

சீல: அது சரி, நாளைக்கு நீ படத்துக்கு வர்ற தானே...

சுகு: சரிடா, எப்படி சரி வரப்பாக்கிறேன்... ஆனா இன்னொரு விஷயம் இருக்குடா...

சீல: இன்னுமா விஷயம்... என்னடா அது...?

சுகு: படத்துக்குன்னு சொன்னா வீட்டில அப்பா தோலை உரிப்பாரு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீல: நீ ஏண்டா படத்துக்குன்னு சொல்லப்போறே...

சுகு: அப்ப என்னடா சொல்றது...

சீல: பள்ளிக்கூடத்தில டிறாமா றிகேசல்னு சொல்லிட்டு வாயேண்டா...

சுகு: என்னடா நீ, இந்த எக்ஸாம் ரைமில, டிறாமா றிகேர்சல் இருக்குன்னு சொன்னால் நம்புவாராடா...

சீல: நம்பமாட்டாருதான்... ஆ... இப்படி சொல்லலாம்டா, ரெஸ்ருக்கு வா்றமாதிரி கேள்விங்க படிப்பிக்க சிவா சேர் வரச்சொன்னாா்னு சொன்னீன்னா சரி...

சுகு: ஆமாடா அது நல்ல ஐடியா தான்...

சீல: சரி, நாளைக்கு காலம்பற ஒம்பது மணிக்கெல்லாம் றெடியாயிரு... நான் வருவேன்...

சுகு: சரிடா...

(இடையிசை)

சுகு: (படித்தல்) மண்ணியல்பால் குண மாறுந் தண் புனல்
கண்ணிய பொருள் மணங்கலந்து வீசுங்கால்
புண்ணியராதலும் புல்லா் ஆதலும்
நண்ணினத்து இயல்பென நவிலல் உண்மையே.

இதன் கருத்தாவது, குளிர்ச்சி பொருந்திய தண்ணீர் தான் சேர்ந்த நிலத்தின் இயல்பினால், தன்மையில் மாறுதலடையும். காற்று, தான் பொருந்திய பொருளின் மணத்தைக் கலந்து வீசும். அவை போல் மக்கள் உயர்ந்தோர் ஆதலும் தாழ்ந்தோர் ஆதலும் அவரவர் சார்ந்த கூட்டத்தின் தன்மை எனக்கூறுவது உண்மையாகும். இதனையே ''பன்றியுடன் கூடிய கன்றும் பவ்வி அருந்தும்' என்ற பழமொழியும் உணர்த்துகிறது. (தனக்குள்) ம்... தமிழ்ப்பாடம் அவ்வளவு கஷ்டமா இருக்காது... அது செஞ்சிடலாம். அப்பா ஏன் இன்னும் தூங்க மாட்டேங்கிறாரு... நாளைக்கு எப்படியாச்சும் படம் பாத்துடணும். சல்லிய அப்பாவோட செப்பில இருந்து எப்படி எடுக்கிறது. பயமா



வேற இருக்கு... அம்பிட்டுக்கிட்டா... தோலை உரிச்சிடுவாரே... ம்... பாட்டைப் பாடமாக்குவம்... அப்பா படுத்தாப்புறம் பாத்துக்கலாம்... (பாடமாக்கல்) 'மண்ணியல்பால் குண மாறுந் தண் புனல்...' (சத்தம் தேய்ந்து அழிய குறட்டை ஒலி தொடர்கிறது)

(குறட்டை மங்கிவரும் பின்னணியில் சம்பாஷணை தொடங்குதல்)

சீல: எங்க நீ வரமாட்டியோன்று நெனைச்சேன்...

சுகு: வராம உடுவனா... எப்பிடியோ சல்லிய அடிச்சுக்கிட்டு வந்திட்டேன்... என்னடா மிச்சம் ஜனமாயிருக்கு...

சீல: புதுப்படம்... நல்ல படம்... அதுதான் ஜனம்...

சுகு: இந்தப் படத்திலே, எத்தினை ஃபைற்றுடா இருக்கு...

சீல: நாலு ஃபைற் இருக்குப்போல...

சுகு: சரி...சரி... வா உள்ள போவம்...

சீல: காசை என் கையில தா... உன்கிட்ட இருந்தா யாரும் அடிச்சுக்கிட்டுப் போயிடுவான்.

சுகு: சரி... இந்தா...

சீல: கொஞ்சம் நின்னுக்க ரெண்டு சிகரெட் வாங்கிட்டு வந்திடுறேன்...

சுகு: டேய்... அந்தா எங்கப்பாடா...

சீல: போடா பயந்தாங்கொள்ளி அவரு தியேட்டர் மனேச்சர்டா...

சுகு: நான் பயந்தே போயிட்டேண்டா....

சீல: இந்தாடா சிகரெட்... நீ ஒண்ணு புடி... நான் ஒண்ணு புடிக்கிறேன்...

சுகு: (பயந்து) இதென்னடா இது! நான் சிகரெட் குடிச்சில்லேடா...

சீல: சும்மா இண்ணைக்கு ஒரு நாளு குடிச்சுப்பாருடா...

சுகு: டேய்... அந்த மனேஜர் வா்றாா்டா... இங்கதான் வா்றாா்போல...

சீல: ஆமாடா... இருந்துக்க வா்றேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகு: டேய் சீலன்...சீலன்... எங்கேடா ஓடுறே... நில்லுடா நானும் வர்றேன்.

மனே: தம்பி, எங்க ஓடப்பாக்கிறே... கையில என்ன சிகரெட்டா...

சுகு: இது நான் குடிச்சதில்லீங்க... அவன்தான்...

மனே: கதை விடுறியா? உங்களைப் போல எத்தனை பேரைப் பாத்திருப்பேன். ம்... ம்... எடு காசை... தியேட்டருக்க சிகரெட் பிடிச்சா 50 ரூபா அபராதம்... தெரியாதா?

சுகு: அம்பது ரூபாயா... அபராதமா... ஐயையோ எனக்கொண்ணுமே தெரியாதுங்க... என்னை விட்டுடுங்க சார்...

மனே: ஏன் தம்பி, பாத்தா நல்ல இடத்துப் பையன் மாதிரி இருக்கே ஏன் தம்பி இந்த மாதிரிப் பழக்கமெல்லாம் பழகிகிட்டிருக்கே...

சுகு: சத்தியமா எனக்கு சிகரெட் பிடிக்கவே தெரியாதுங்க... அவன்தான் வாங்கித் தந்தான்...

மனே: அவன் யாரு? உன் பிரெண்டா... ஆபத்து நேரத்தில காலை வாரிட்டு ஓடிட்டான் பாத்தியா... இப்படியானவங்கள நம்பலாமா?

சுகு: இண்ணைக்குத் தாங்க அவனைப்பத்தி எனக்கு புரியுது...

மனே: ஆமா... உன்னை எங்கேயோ பாத்த மாதிரியிருக்கே... ஆ... நீ கந்தசாமியோட மகன் தானே?

சுகு: ஆமாங்க...

மனே: அந்த நல்ல மனுஷன் பேரையே கெடுத்துடுவே போல இருக்கே...

சுகு: எல்லாம் என் பிரெண்டால வந்தது தாங்க...

மனே: நீ கந்தசாமியோட மகன்கிறதால இப்ப விடுறேன்... எண்ணாலும் உங்கப்பா கிட்ட இதைப்பத்தி நான் ஒரு வார்த்தை சொல்லாம விடமாட்டேன்...

(இடையிசை)



கந்: போடா வெளியில... இனிமே இந்த வீட்டு வாசப்படியக்கூட நீ மிதிக்கக்கூடாது... ஆமா...

சுகு: நான் எங்கப்பா போவேன்? எனக்கு யாரைத் தெரியும்...?

கந்: எங்கேயோ போய்த்தொலை... என் கண்ணுமின்னாடி மட்டும் நிக்காதே... அப்புறம் நானே உன்னை அடிச்சுக் கொன்னுடிடுவேன் ராஸ்கல்...

சுகு: (அழுது) அப்பா....

கந்: சிகரெட்டில்ல பிடிக்க ஆரம்பிச்சிட்டாரு தொரை... கண்ட கண்ட கூட்டாளிங்க கூட சேர்றது... தேவையில்லாத எல்லாம் பழகிக்கிறது... சீ...சீ... உன்னை என் மகன்னு சொல்லிக்கவே எனக்கு வெக்கமாயிருக்குடா... நீ எனக்கு மகனா பொறக்கவே இல்லைன்னு நெனச்சுகிறேன்... போடா போய்த் தொலை எங்கயாச்சும்...

சுகு: என்னை மன்னிச்சிடுங்கப்பா... இந்த ஒரு வாட்டி மன்னிச்சுங்க...

கந்: காலை விடுறா... எட விடுறாங்கிறேன்...

சுகு: (கனவில் அழுதபடி) என்னை மன்னிச்சிடுங்கப்பா... என்னை மன்னிச்சிடுங்க...

கந்: (வந்து) டேய் சுகுமார், டேய்... என்னடா இது? ஏண்டா அழுவுறே... படிச்சுகிட்டே தூங்கிட்டியா... தூக்கத்தில ஏதும் கெட்ட கனவு கண்டியாக்கும்... ம்...ம்... எந்திரி எந்திரிச்சு கட்டில்ல போய்த்தூங்கு... படிச்சது போதும்... காலைல படிச்சுக்கலாம்...

சுகு: (தனக்குள்) அட எல்லாமே கனவு தானா... அப்பாடா இப்பதான் என் மனசுக்கு நிம்மதியாச்சு... சீலனோட பேச்சைக் கேட்டு என்ன காரியம் செய்ய இருந்தேன்... நல்ல வேளை கடவுளா என் கண்ணைத் தொறந்திட்டாரு... நாளைக்கு அந்தப் பயல் வரட்டுக்கும், போடா உன் வேலையைப் பாத்துக்கிட்டினு முஞ்சிக்கு நேர சொல்லிடுறேன்...

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்***
***வாய்மையின் நல்ல பிற.*** *(குறள்: 300)*

# சத்தியசோதனை

பாத்திரங்கள்:
அம்மா
அப்பா
மகள் ஜெயந்தி
தோழி சுமதி
மகன் குமார்
நண்பன் ரவி

சுமதி: ஏண்டி ஜெயந்தி உங்கூட்டில படம் பார்க்கவே போக மாட்டாங்களா?

ஜெய: ஏன் போக மாட்டாங்க... நல்ல படம்னா எல்லாருமா போவம்டி... சுமதி...

சுமதி: நான் ஒரு நாள் சரி உங்க வீட்டுக் காரங்களை கண்டதேயில்லை...

ஜெய: நீங்க எல்லாம் ஆறு மணி ஷோவுக்குத் தானே போவீங்க... எங்க வீட்டில அப்பிடி யில்ல... போறதுன்னா மெட்னிஷோ தான் போவோம்...

சுமதி: இப்ப ஒரு நல்ல படம் வந்திருக்குடி... ஜெயந்தி...

ஜெய: எதை சொல்றே... சுமதி...

சுமதி: சத்தியசோதனைன்னு வந்திருக்குதே... அதைத்தான்...

ஜெய: அரிச்சந்திரன் கதை தானே...



சுமதி: ஆமாடி... அரிச்சந்திரனா நடிக்கிறவரு என்ன மாதிரி நடிக்கிறாரு தெரியுமா?

ஜெய: கலர்ப் படமாடி...

சுமதி: ஆமா... எங்கூட்டில எல்லாரும் ரெண்டு ரெண்டு தரம் பாத்தாச்சு... நான் அழுஅழென்று அழுதிட்டெண்டி...

ஜெய: மிச்சம் துக்கமாடி...

சுமதி: ஆமா... ஆனா நல்ல நல்ல சோங் எல்லாம் இருக்குடி...

ஜெய: வாடா என் கண்ணின் மணியேங்கிற பாட்டு அதில தானே...

சுமதி: ஆமாடி... இந்தப் படத்தை மட்டும் நீ மிஸ் பண்ணிடாதை... எப்படியாச்சும் பாத்திடு...

ஜெய: ஆமாடி... நீ சொல்ல சொல்ல எனக்கும் பாக்கணும் போல ஆசையாத்தாண்டி இருக்கு...

சுமதி: சரிடி... எங்கூடு வந்திட்டு... நான் வர்றண்டி... சேரியோ...

(இடையிசை)

ஜெய: அம்மா... அம்மா...எப்படியாச்சும் அப்பாவை சரி சொல்ல வச்சுடும்மா...

அம்: நீ என்னடி இதைப்பாத்தே தீரணும்னு ஒத்தைக்கால்ல நிக்க ஆரம்பிச்சுட்டே...

ஜெய: என்னம்மா... தீவாளிக்கு அப்புறமா நாம என்ன படம் பாத்தோம்... நீயே சொல்லேன். ஒண்ணும் இல்ல தீவாளி போயி இப்ப, கார்த்திகை, மார்கழி, தை மாசி நாலு மாசம் கழிஞ்சிடிச்சு... ஒரு படம் சரி பாக்கேல்ல...

அம்: சரிடி பொறேன்... உங்கப்பா வரட்டும் கேட்டுப் பாத்துடு வோம்...

அப்பா: (வந்தபடி) என்னது, அம்மாவும் மகளுமா எதுக்கு என்கிட்ட அடிபோடப் போறீங்க... என்ன கேட்கப் போறீங்க?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்: ஒண்ணுமில்லீங்க... புதுசா ஏதோ படம் வந்திருக்காம்...

அப்: படமும் பப்படமும்... இந்தக் காலத்தில எல்லாம் படமா எடுக்கிறாங்க... பிள்ளை குட்டியளோட போயிருந்து பாக்கிற மாதிரி எந்தப் படமாவது இருக்குதா... ம் ஹூம்... எல்லாம் கண்றாவிப்படங்க...

அம்: நீங்கள் என்னங்க... அவஅவா வீடுகள்ள கிழமைக்கொரு படம் பாக்கிறாங்க... நாம்ப என்ன மாசத்துக்கொரு படம் கூடப் பாக்கிறதில்ல...

அப்: இப்ப படம் பாக்குறதே ஒரு பாஷனா இல்ல போயிடிச்சு... அந்தக் காலத்திலன்னா அப்படியா... வருசத்துக்கு நாலே படம்தான் வரும்...

ஜெய: இப்ப காலம் மாறிகிட்டு வருதுப்பா...

அப்: நீ எனக்கு சொல்றியா... ஏன் சொல்ல மாட்டே... நீ இந்தக் காலத்துப் புள்ளயில்லயா... சொல்லத்தான் செய்வே... அந்தக் காலத்தில எங்கப்பா அம்மாவுக்கு முன்னாடி நாம தலை நிமிந்து பேசுவமா...

ஜெய: ஏம்பா... அப்ப உங்களுக்கு கழுத்தில சுளுக்கிகிட்டிருந்திச்சா...

அப்: ஆமா... பாத்தியா உன் மக பேசறதை... செல்லம் குடுத்துக் குடுத்தே அவளைக் கெடுத்துப்புட்டே...

அம்: யாருங்க அவளுக்கு செல்லங் குடுக்கிறது... நானா இல்ல நீங்களா...

ஜெய: அம்மா அம்மா... ப்ளீஸ்... அப்பா மூடை உடைச்சிடாதை... அப்புறம் படம் பாக்கிற பிளான் அரோகராதான்...

அப்: என்னடி நீ படம் படம்னுகிட்டு, அந்தக் காலத்து படம் மாதிரி கருத்துள்ளதா ஒரு படிப்பினை உள்ளதா இப்பஎந்தப் படம் வருது... ஒரு சிந்தாமணி ஒரு சிவகவி... ஒரு கண்ணகி... ஒரு அரிச்சந்திரா... இப்படி ஒரு படம் இப்ப வருமா...

ஜெய: வந்திடிச்சே அப்பா...

அப்: என்னடி சொல்றே...



ஜெய: ஆமாப்பா... அரிச்சந்திரா கதைதான் இப்ப சத்தியசோதனைங்கிற பேரில வந்திருக்கு...

அப்: அப்படியா...

ஜெய: ஆமாப்பா...

அப்: அரிச்சந்திரன் கதைன்னா நல்ல கதை தான்... ஆனா உனக்கு அழுகை வருமே...

ஜெய: அது பரவாயில்லப்பா... அழுகிறது உடம்புக்கு நல்லதாம்னு எங்க டீச்சர்கூட சொல்லியிருக்கா...

அப்: காசைக் குடுத்து அழப்போறேங்கறே... சரி... அப்ப புறப்படுங்க...

அம்: டேய் ராசகுமாரு... பக்கத்து ஊட்டில போயி அண்ணைக்கு குடுத்த சாவிய வாங்கிட்டு வாடா...

அப்: இப்ப எதுக்கு சாவி...

அம்: வீட்டப் பூட்ட வேணாமா... நாம்ப எல்லாரும் தானே போறோம்?

அப்: நீ ஒண்ணு.... ராசகுமாருக்கு சோதினை வருதில்ல... அவன் வீட்டில இருந்துக்கட்டும்...

ராச: நானும் வர்ரேம்பா...

அப்: இந்தா பாரு... சோதினையெல்லாம் முடிஞ்சதுக்கு அப்புறமா நீ போய்க்கலாம்... இப்ப போய்ப்படி...

அம்: ஜெயந்தி... தங்கச்சிக்கு மூஞ்சியக்கழுவி சட்டையைப் போட்டு உடு...

ஜெய: இந்தா ஒரு செக்கன்ல போட்டு உடுறேம்மா...

அப்: படம்னா போதும்... எப்பிடிக் கிடந்து துள்ளுறா...

அம்: பாவம் குமாரு... அவனுக்குத்தான் சோதனை காலமாய் போயிடிச்சு...

(இடையிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பஸ் வந்து நின்று புறப்படும் ஒலி)

அம்: தங்கச்சிய கவனமா புடிச்சுக்க ஜெயந்தி...

கண்: டிக்கட்... டிக்கட்...

அப்: ரெண்டு புல்... ஒரு ஹாஃபு...

கண்: இந்தப் பிள்ளைக்கு டிக்கட் எடுக்கலையா...

அப்: அதுக்கின்னும் மூணு வயசு ஆகலையே...

கண்: பாத்தா அஞ்சு வயசுப் பிள்ளை மாதிரி இருக்கு...

அப்: அது அவளோட உடம்பு வாசி...

(தியேட்டரில் கசமுச சத்தங்கள்)

அப்: இந்தா புனிதா இங்க... வாடி...

அம்: ஏங்க அவளைத் தூக்குறீங்க... அவ நடந்து தான் வரட்டுமே...

அப்: நீ ஒண்ணு விஷயம் புரியாம... அப்புறம் இவளுக்குமில்ல டிக்கட் வாங்க வேண்டி வந்திடும்...

ஜெய: ஏம்பா... மூணு வயசுக்கு மேல உள்ள பிள்ளைகளுக்கு டிக்கட் வாங்க வேணும்னு போட்டிருக்காங்களே...

அப்: நீ சும்மா வாயை மூடிக்கிட்டு வாடி... படம் ஸ்ராட் ஆகப் போவுது போல இருக்கு...

(இடையிசை)

அம்: அண்ணைக்கொரு படத்துக்குப் போனாலும் போனாள்... வாய் ஓயாம அதப்பத்தியேதான் பேசிக்கிட்டிருக்கா...

அப்: இந்தக்காலப் புள்ளைங்க, படத்தைப் பத்தியும் அதில நடிக்கிறவங்களப் பத்தியும் தான் கதை எல்லாம்... படிப்பைப் பத்தி அக்கறையே கிடையாது...

ரவி: (வெளியில் இருந்து) குமார்... குமார்...



அப்: யாரது?

ரவி: அதுநான் மாமா...

அப்: யாரு... ரவியா... என்ன உன் பிறெண்டைத் தேடிகிட்டு வந்தியா... ஏண்டி இவன் எங்க...

அம்: யார் ஊட்டுக்கோ படிக்கப்போறதா சொல்லிட்டுப் போனான்... ஒரு அஞ்சு மணி போல போயிருப்பான்...

அப்: அப்ப இம்மட்டு நேரமா காங்கலியே...

ரவி: நான் வர்றேன் மாமா... குமார் வந்தா சயன்ஸ் நோட்ஸ் காலைல கொண்டுவந்து தர சொல்லுங்க...

அப்: சரி தம்பி... இருட்டு வழி... பாத்துப்போ... (யோசித்து) ம்... இவனை என்ன இன்னும் காணல்ல... வேற எங்கயாச்சும் படத்துக்கு கூத்துக்கின்னு போயிருப்பானோ...

அம்: நீங்க ஒண்ணு... படிக்க நேரமில்லையேன்னிட்டு அவன் ராப்பகலா விழுந்து விழுந்து படிச்சிக்கிட்டிருக்கான்...

(மணி பத்தடிக்கிறது)

அப்: பத்து மணியாச்சு... இன்னும் காணல்லியே...

அம்: அந்தா... வர்றான் போல...

ஜெய: ஆமாம்மா... அண்ணாதான் வருது...

அப்: ஏண்டா... இவ்வளவு நேரமா எங்க போயிட்டு வர்றே...

குமா: படிக்கிறதுக்கு ஒரு பிறெண்ட் வீட்டுக்கு போயிருந்தேப்பா...

அப்: யாரு பிரெண்டு... பேரென்ன...

குமா: ரவிப்பா... நம்ம கேப்பீயோட மகன்பா...

அப்: ரவி ஊட்டுக்கா... இம்மட்டு நேரமும் அங்கதான் இருந்தியா...

குமா: ஆமாப்பா...

(திடீரென பெல்ட்டால் அடிக்கும் ஒலி)

குமா: ஆ... அப்பா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்: ராஸ்கல்... பொய் வேற சொல்ல பழகிட்டியா. உன்னை இந்த பெல்ட்டாலயே அடிச்சுக் கொன்னு போட்டிடுவேன்... சொல்லுடா உண்மையை...

அம்: (அழுது) ஐயோ... ஏங்க அவனைப்போட்டு அடிக்கிறீங்க...

அப்: நீ நகரு அங்கிட்டு.... (மீண்டும் அடித்தல்)

குமா: ஆ... அம்மா... அடிக்காதீங்கப்பா... அடிக்காதீங்கப்பா...

அப்: படத்துக்குத்தானேடா போய்ட்டு வர்றே...

குமா: (அழுது) ஆமாப்பா...

அம்: பாவம், அண்ணைக்கு நீங்க கூட்டிக்கிட்டு போகல்ல... அவனுக்கு நம்ப கதையளை கேட்க ஆசையா இருந் திருக்கு...

அப்: நீ பரிஞ்சுகிட்டு வராதை இப்ப... பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது... இவனை ஒரு நாள் முழுக்க பட்டினி போட்டாத்தான் இவன் திருந்துவான்... ஆமா... சொல்லிட் டேன்... நான் சொல்ற வரைக்கும் ஒரு சொட்டுத் தண்ணி கூட இவனுக்கு நீ குடுக்கக் கூடாது...

(இடையிசை)

அம்: என்னங்க நீங்க உங்க மனசு என்ன கல்லா இல்ல இரும்பா... பாவங்க அவன்... இந்த முறை மன்னிச்சிடுங்க...

அப்: பொய் சொன்னவனை இப்ப தண்டிக்காம உட்டுட்டா அப்புறம் அவனைத்திருத்தவே முடியாம போயிடும்டி...

ஜெய: (முணுமுணுத்தபடி) ஆமா ஆமா... அதுன்னா நெசம்தான்...

அப்: நீ என்னடி அங்க இருந்துட்டு மிணுமிணுக்கிறே...

அம்: அவன் சாப்பிடேல்லன்னு அவளும் பட்டினி இருக்கா...

அப்: எல்லாருமா சேந்து என் மனசை மாத்திடலாம்னு பாக்கிறீங் களா... அதுதான் நடக்காது... ஜெயந்தி பிடிவாதம் பிடிக்காம நீ போய் சாப்பிடு...



ஜெய: ஏம்பா ஒண்ணு கேட்கிறேன் கோவிக்காம பதில் சொல் றீங்களா...

அப்: என்ன...

ஜெய: பொய் சொன்னதுக்கு அண்ணாவுக்கு தண்டனை குடுத்தீங்க சரி... பொய் சொல்றவங்களுக்கு உடந்தையா இருந்தவங் களுக்கு மட்டும் தண்டனை இல்லியா...

அம்: என்னடி சொல்றே...

ஜெய: ஆமாம்மா... நாம்ப ரெண்டு பேரும் இண்ணைக்கு பட்டினி யிருக்கணும். ஏன்னா ஒரு பொய் சொல்றப்போ நானும் நீயும் உடந்தையா இருந்திருக்கோம்மா...

அப்: ஜெயந்தி, என்ன உளர்றே...

ஜெய: உளறல்லப்பா... அண்ணைக்குப் படம் பாக்கப் போனப்போ தங்கச்சிக்கு 3 வயசுன்னு எங்கப்பா கண்டக்டர் கிட்டவும் டிக்கட் செக்கர் கிட்டவும் சொன்னாரு... நாம்பளும் ஆமாங்கிற மாதிரி பேசாம இருந்துட்டம்... அது குத்தமில்லியா... சொல் லுங்களேன்பா...

அப்: (கத்தி) ஜெயந்தி...

ஜெய: (சாந்தமாக) என்னப்பா...

அப்: நீ... போ இங்க இருந்து... நீ போம்மா உள்ள...

அம்: (தாமதித்து) அவ சொன்னதில என்னங்க பிழை இருக்கு...

அப்: இல்லடி... அவ சொன்னதில எந்தப் பிழையுமே இல்ல... என்னில தாண்டி பிழையிருக்கு... அவ என் கண்ணைத் தொறந்திட்டா... அவ எனக்கு மகளாப் பொறக்கல்லடி... குருவா வந்திருக்கா. குத்தவாளிக்கு தண்டனை குடுக்கிற உரிமை இல்லேங்கிறத உணர்த்திட்டாடி...

குமா: அப்பா என்னை மன்னிச்சுங்கப்பா...

ஜெய: என்னையும் மன்னிச்சிடுங்கப்பா...

அப்: நீங்க எல்லாம் என்னை மன்னிச்சிடுங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்: என்ன பேச்சுங்க இது? பிள்ளைங்க முன்னால...

அப்: கொண்டிட்டுவா பெல்ட்ட எனக்கு நானே நாலடி போட்டுக் கிட்டாதான் என் மனசு ஆறும்...

(முடிவிசை)



# தாயுள்ளம்

***தீயவை தீய பயத்தலால் தீயவை***
***தீயினும் அஞ்சப் படும்.*** *(குறள்: 202)*

பாத்திரங்கள்: சாமி
நாதன்
ஆசிரியர் சுந்தரம்
பார்வதி ஆச்சி (ஆசிரியரின் தாய்)
சரசுவதி (ஆசிரியரின் தமக்கை)
அதிபர்

நாத: டேய் சாமி தமிழ்ல உனக்கு எவ்வ ளவுடா?

சாமி: எனக்கு இருபதுதாண்டா... நாதன் உனக்கு...

நாத: எனக்கும் இருபது தாண்டா...

சாமி: இங்க பாரு நான் எம்மட்டு எழுதியி ருக்கேன்... சைவர் இல்ல போட்டு வச்சிருக்காரு...

நாத: எனக்கும் அப்படித்தாண்டா கட்டு ரைக்கு மாக்ஸே போடல்ல...

ஆசி: நமநாதனும் சாமியும் எழும்புங்கோ... அங்க என்ன கதை? உங்களுக்கு ஏதும் பிரச்சனையோ...

நாத: வந்து சேர் எங்க ரெண்டு பேத்துக்கும் கட்டுரைக்கு மாக்ஸே போடல்ல சேர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி: ஆமா சேர்.

ஆசி: தெரிஞ்சு தான் போடாமல் விட்டிருக்கிறன்... நீங்கள் ரெண்டு பேரும் சொந்தமா கட்டுரை எழுதேல்லை... கொப்பி அடிச்சிருக்கிறியள்...

சாமி: நானாதான் சேர் எழுதினேன்...

ஆசி: என்னை நம்பச் சொல்றியோ... எங்கேயோ பாத்து எழுதிக் கொண்டு வந்து அதை அப்படியே கொப்பி அடிச்சுப்போட்டு எனக்குப் புருடா விடுறியளோ...

நாத: சேர்... நான் பாடமாக்கிக்கிட்டு வந்தேன் சேர்...

ஆசி: ஓகோ! அப்படியோ! பின்னை இப்ப எழுதிக்காட்டு பாப்பம். அதேபோல. பாடமாக்கிக்கொண்டு வந்தனி எண்டால் எழுதலாம் தானே? என்ன முழுசுறாய்... என்னடா நமநாதன் எனக்கு நீ வண்டில் விடுறியே? உன்னைப்போல எத்தினை பேரைக் கண்டவன் நான்!

சாமி: நான் கொப்பி அடிக்கல சேர்!

ஆசி: டேய் சாமி நீ பெரிய ஆசாமியாத்தாண்டா வரப்போறாய்... பரீட்சை நேரத்தில ஏதோ பிடிபடாமல் களவு செய்திட்டியள்... இப்ப என்னடாவெண்டால்... அதை மறைச்சுப் பொய்வேற சொல்லத் துவங்கீற்றியள்... ஏன்ரா உதெல்லாம்? ஒழுங்காய்ப் படிச்சு பாஸ் பண்ணுறதை விட்டுப்போட்டுக் குறுக்கு வழீலை போறமெண்டு நிக்கிறியள்... நாளைக்கு ரெண்டு பேரும் உங்கட அப்பாமாரை வரச் சொல்லிச் சொல்லுங்கோ... விளங்குதா? நான் அவையளை ஒருக்காச் சந்திக்கவேணும்...

(இடையிசை)

நாத: டேய் சாமி என்னடா! ஏன் ஒரு மாதிரியாஇருக்கே?

சாமி: பள்ளிக்கூடமே எனக்கு வேணாமுன்னு போச்சுடா... நாதன்...

நாத: ஏண்டா...



சாமி: எல்லாம் எங்க சுந்தரம் சேறால தாண்டா... வீட்ல என்னை நல்லா மாட்டி வச்சிட்டாரு...

நாத: வீட்ல நல்ல அடியா...

சாமி: அடியா அதை ஏன் கேட்குறே... எங்க நயினாக்கு கோவம் வந்திருச்சின்னா தெரியுந்தானே! மாட்டை அடிக்கிறாப்போல சும்மா வாங்கு வாங்குன்னு வாங்கிட்டாருடா... இங்க பாத்தியா...

நாத: (அதிர்ச்சியுடன்) சாமீ என்னடா இது... தோலெல்லாம் உரிஞ்சு கோப்பிப்பழம் கணக்கா செவந்திருக்கு...

சாமி: ஆமா... கோப்பிக்கம்பால வௌாசினா செவக்காம பச்சை யாவா இருக்கும்! (கறுவி) ம்... ம்... எல்லாம் அந்த கோள் மூட்டி சுந்தரம் சேறால தான்...

நாத: நல்லவேளையா எங்கூட்டில அப்பா இல்ல... அம்மாதானே... சேற காங்க வந்திச்சு... அதால ஒரு மாதிரி பொய்யவுட்டு தப்பிச்சுக்கிட்டேன்ட்டா...

சாமி: அந்தக் கோள்மூட்டி சேறுக்கு எதுசரி செய்யணும்டா...

நாத: றோட்ல வர்றப்போ கல்லால வுட்டு அடிப்பமா...

சாமி: போடா அப்பறம் மாட்டிக்கிட்டா அதுக்கு வேற வாங்கிக் கட்டணும். நம்ம ஒடம்பு அதுக்கு இனிமே தாங்காதுடா...

நாத: அவரு நம்மளை, ஊட்ல மாட்டிவிட்ட மாதிரி அவரூட்டில அவரை மாட்டிவைப்பமா?

சாமி: அது எப்படிடா? நம்மப்போல அவரு என்ன ஸ்கூல்ல படிக்க வர்ற பையனா? அவரு பெரிய ஆளு... நாம சின்னவங்க...

நாத: ஒண்ணு செய்வமா?

சாமி: என்னடா?

நாத: ஒரு தந்தி குடுப்பம்...

சாமி: யாருக்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத: சேரு ஊட்டுக்கு...

சாமி: சேறு ஊட்டுக்கா... யாழ்ப்பாணத்தில தானே அவர் ஊடு...

நாத: ஆமா... அவுங்கூட்டுக்காரங்களுக்கு ஒரு தந்தி குடுப்பம்...

சாமி: எப்படி?

நாத: சேறு ஆக்ஸிடெண்டில ஆப்பிட்டுக்கிட்டாரு... ஒடன... வாங்க அப்பிடீன்னு குடுப்பம்...

சாமி: ஐயய்யோ... அப்பிடி வேண்டான்டா... அக்சிடெண்டுன்னு வாண்டாம்... வேறு ஏதாச்சும்னு...

நாத: ஒனக்கு மாட்டுக்கு அடிச்ச மாதிரி அடி வுழுந்திருக்கல்ல... இது அந்த சேறாலதானடா வந்துது அதை மறந்துட்டியா...

சாமி: சரி, நீ சொல்றமாதிரியே தந்தி குடுப்பம்... குடுத்தாக்கா?

நாத: யாரு சரி தேடி வருவா... வந்து நல்லா ஏமாந்துடுவா...

சாமி: ஆமாடா! அது நல்ல ஐடியாதான்... அதுசரி சேறூட்டு விலாசம் உங்கிட்ட இருக்கா...

நாத: வீட்டுக்கு எதுசரி தபால் போடுறப்போ, பெட்டியில கொண்டிட்டுப் போய் போடசொல்லி தருவார்தானே! அப்ப பாத்து வச்சுக்குவம்...

சாமி: தந்திய இங்கிலீஷ்ல தானேடா குடுக்கணும்...

நாத: அது நான் யாருகிட்டசரி கேட்டு எழுதிக்கிட்டு வாறேண்டா...

சாமி: சரிடா... இப்பிடி செஞ்சாத்தான் அவரு இந்த ஸ்கூல விட்டு வேற எங்க சரி போய்த் தொலைவாரு...

நாத: ஆமாடா சாமி ஆமா...

(இடையிசை)

(சைக்கிள் மணி அடிக்கிறது)

பார்: சரசு! பிள்ளை சரசு!



சரசு: (வந்தபடி) என்னணை!

பார்: வாசல்ல மணியடிச்சுக் கேட்குது, பிள்ளை போய்ப்பார்... ஆரெண்டு (இளைத்து) என்னாலை எழும்பி நடக்கக் கிடக்க ஏலாதாம்...

சரசு: (வந்தபடி) தந்தி வந்திருக்கெணை... அம்மா...

பார்: தந்தியோ... (அதிர்ச்சியாக) ஆருக்கு என்னபாடோ! கதிரமலை யானே... கெதியில உடைச்சு வாசி பிள்ளை...

சரசு: (வாசித்தல்) சுந்தரம் மெற் வித் அக்சிடென்ற் கம் இம்டி யற்லி...

பார்: (பதறி) சுந்தரத்துக்கு என்னவாம்... பிள்ளை சொல்லன்ரி...

சரசு: (கலக்கத்துடன்) தம்பி ஏதோ அக்சிடெண்ட் பட்டுட்டுதாம்... உடனை வரட்டாம்...

பார்: (குழறி) ஐயோ! என்ர பிள்ளை, என்ர ராசா! உப்பிடி அக்சிடென்படவே உன்னை நான் அனுப்பி வச்சனான்... (இளைப்புடன்) ஐயோ! என்ர சதிரம் எல்லாம் பதறுதேடி...

சரசு: நீ சும்மா இரணை... தம்பிக்கு ஒண்டும் ஆகியிராது...

பார்: ஐயோ! நான் இப்பவே போகவேணும்... என்ர ராசாவுக்கு என்னபாடோ! எப்பிடிக்கிடந்து துடிக்கிறானோ... ஐயொ என்ர நெஞ்செல்லாம் என்னமோ செய்யுதெடி...

சரசு: (அழுதபடி) ஆச்சி நீ படணை... நாங்கள் போகலாம்... இண்டைக்கு ராக்கோச்சீல போகலாமெணை... அது வரைக்கும் கொஞ்சம் படுத்திரணை...

பார்: நான் மாட்டன் அவனைக் காண்றவரையும், எனக்குப் பாயும் வேண்டாம்... படுக்கையும் வேண்டாம்... (அழுது) ஓ...என்ர ராசா... என்ர ராசா...முருகா... இதென்ன சோதனை! ஏன் எங்களை இப்பபடியெல்லாம் சோதிக்கிறாய்... நாங்கள் ஆருக்கு என்ன பிழை செய்தனாங்கள்... அவனுக்கு வேலை கிடைக்காட்டிலும் பறவாயில்லை, நான் சொல்லச் சொல்லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேளாமல் கண்டறியாத ஒரு வாத்தி உத்தியோகம் எடுத்துக் குடுத்து கண்காணாத இடத்துக்கு அனுப்பிவச்சியளே... ஏன்ரி, என்ர பிள்ளையச் சாகக்குடுக்கவோ அனுப்பினியள்...

சர: நீ சும்மா ஒப்பாரி வையாமல் இரணை... அம்மா. எங்களுக்குத் தெரியுமே இப்படி ஏதும் நடக்குமெண்டு? எல்லாம் எங்கட கெட்டகாலம்... பிள்ளையாரே தம்பிக்கு ஒண்டும் ஆகாமல் நீர்தான் காப்பாத்த வேணும்... சுந்தரம் எண்டால் உம்முடைய தம்பிதானே...

(இடையிசை)

ஆசி: தந்தி வந்ததோ... என்னனை ஆச்சி சொல்லிறாய்?

பார்: அதை ஏன் தம்பி கேக்கிறாய்... நீ... ஆச்சிடெண்ட் பட்டிட் டியாம்... எண்டு தந்தி வந்ததில எனக்கு கையும் ஓடேல்லை... காலும் ஓடேல்லை... அஞ்சுங் கெட்டு அறிவுங்கெட்டுப் போனன்...

சர: தம்பி இஞ்ச வந்து சேர்ற வரையிலையும் அம்மா ஓரே ஒப்பாரிதான். வேண்டாத தெய்வங்களில்லை...

ஆசி: என்னக்கா உந்த ஏலாத வயசில அம்மாவையும் இழுத் துக்கொண்டு இவ்வளவு தூரம் வந்தனியளே...

சர: என்ன தம்பி செய்யிறது... நாங்கள் போய்ப்பாத்திட்டு வாற மெண்டால் அம்மா கேட்கிறாவே... தானும் வரவேணுமெண்டு விடாப்பிடியாக நிண்டு வெளிக்கிட்டிட்டா...

பார்: எட்டியாந்தோட்டை எண்டால் நாங்கள் முன்னபின்ன வந்து போனஇடமே ராசா... வழியும் தெரியாது துறையும் தெரி யாது... ஏதோ அவனைக் கேட்டு இவனைக்கேட்டு ஒரு மாதிரியா வந்து சேர்ந்திட்டம்... இப்ப உன்னைக் கண்டாப் பிறகுதான் என்ரை மனசுக்கு ஆறுதலாக்கிடக்கு... ஆரோ வேலைவெட்டியில்லாததுகள் செய்த கூத்தால நான் அறக்கப் பறக்க விழுந்தடிச்சு ஓடியரவேண்டியதாப்போச்சு...



ஆசி: (யோசித்து) ம்... உதாரோ... பொடியங்கட விளையாட்டாத் தான் இருக்க வேணும்... போஸ்ற் மாஸ்டரிட்ட விசாரிச்சால் அறியலாம்... பாப்பம்.

சர: பாவம் அம்மாவை உப்பிடி அந்தரப்பட வச்சுப்போட்டான்கள்... நல்லவேளை அந்தப் பிள்ளையாற்ற அருளாலை நீ ஒரு குறையுமில்லாமல் நல்லமாதிரி இருக்கிறாய்... பிள்ளை யாருக்கு அம்பது தேங்காய் உடைக்கிறதா வேண்டுதல் செய்தனான்... அதுக்குக் காசைத் தந்து போடு... ஓ...

(இடையிசை)

(பாடசாலை மணி, மாணவர் இரைச்சல்)

அதிபர்: இண்டைக்கு நான் இந்தக் கூட்டத்தை கூட்ட வேண்டி வந்ததற்கு காரணம் இரண்டு மாணவர்கள்... பத்தாம் வகுப்பில் படிக்கும் சாமியாலையும், நமநாதனாலையும் இந்த ஸ்கூலுக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டுவிட்டது. இவர்கள் இரண்டு பேரும் என்ன செய்தார்கள் என்று உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! ஓர் ஆசிரியருக்கு எதிராக அந்த ஆசிரியரின் வீட்டிற்கு அவர் அக்சிடென்ற் பட்டுவிட்டதாக ஒரு பொய்த்தந்தி கொடுத்திருக்கிறார்கள் இவர்கள். இதனால் அந்த ஆசிரியருக்கும் அவரின் வீட்டுக்காரருக்கும் ஏற்பட்டுவிட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமில்லை... இது ஒரு பாரதூரமான விஷயம். எழுத்தறிவிக்கின்ற இறைவனான ஆசிரியனுக்கு எதிராக இப்படியான ஒரு காரியம் செய்வது கடவுளுக்கு எதிராகச் செய்த மாதிரி... ஒரு நல்ல மாணவன் செய்கின்ற காரியம் அல்ல இது... மாணவர்கள் என்று இருக்கிறவர்கள் இப்படியான காரியத்தைக் கனவிலும் நினைத்துப் பார்க்கக்கூடாது... இப்படி ஒரு காரியம் எந்தப் பள்ளிக்கூடத்திலாவது நடந்ததாக நான் கேள்விப்பட்டதே இல்லை... ஆனால் இந்தப் பள்ளியில நடந்திருக்கிறது... மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கின்ற காலம் போய் இப்போ மிதிக்கின்ற காலமாக இருக்கின்றது. ஆசிரியர்கள் உங்களைத் தண்டிப்பது உங்கள் நன்மைக்காகவே என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் உணரவேண்டும்... இப்படியான ஒழுக்கங்கெட்ட பிள்ளைகளால் பள்ளிக்கூடத்தின் பேரும் கெட்டுப்போகிறது... அவர்களை எங்களுக்குத் தேவையில்லை... ஆனபடியால், இன்றோடு இவர்கள் இரண்டு பேரையும், நமநாதனையும், சாமியையும், இந்தப்பள்ளிக்கூடத்தை விட்டு விலக்குகிறேன்... சேர்ட்டிபிக்கேற்றுகளை எடுத்துக்கொண்டு அவர்கள் எங்கே யாவது போகலாம்...

(இடையிசை) (சோகம்)

பார்: அவங்கள் ரெண்டுபேரையும் பள்ளிக்கூடத்தை விட்டு விலக்கிப்போட்டேரே என்ன தம்பி, சொல்லிறாய்...

ஆசி: ஓம் அம்மா பிரின்சிப்பலுக்கு சரியான கோவம் வந்துட்டுது. அவங்களை அடிச்சு முறிக்காமல் விட்டது பெரிய காரியம்... (கதவு தட்டப்படுகிறது, திறக்கப்படுகிறது) ஆ... சேர்... நீங் களே... சொல்லிவிட்டிருந்தால் நானே வந்திருப்பனே... இவர் தானணை எங்கிட பிரின்சிபல்... இருங்க சேர்...

அதி: மிஸ்டர் சுந்தரம் உங்களுக்கு இந்த மாதிரி நடந்தது எனக்குப் பெரியதுக்கம்... என்ர பள்ளிக்கூட அனுபவத்திலை இப்படி ஒரு விஷயம் நடந்ததில்லை... பாவம் உங்கிட அம்மா இந்த வயசான காலத்தில இப்படி அந்தரப்பட்டு அலைய வேண்டியதாய்ப்போச்சு...

பார்: மாஸ்டர் உங்களோடை நான் ஒரு கதை கதைக்கவேண்டும்...

அதி: சொல்லுங்க ஆச்சி...

பார்: அந்தப் பெடியளை நீங்கள் பள்ளிக்கூடத்தாலை விலத்திப் போட்டியளாமே...

அதி: ஓம் ஆச்சி, பொலிசிலையும் ஒரு கொம்பிளைன்ற் குடுக்க வேணுமெண்டிருக்கிறன்... அந்தளவு ஆத்திரமாயிருக்கெ னக்கு...

பார்: பாவம் மாஸ்டர் அவங்கள்... அவங்களை மன்னிச்சு விட் டிடுங்கோ...



அதி: மன்னிக்கிறதோ...? இப்படியானவங்களுக்கு ஈவிரக்கமே காட்டக்கூடாது... ஆச்சி...

பார்: சோதினை எடுக்கிற பெடியளாம் எண்டு தம்பி சொன்னான்... அவங்கட படிப்பெல்லே வீணாப்போகப்போகுது... மாஸ்டர்...

அதி: அவங்கள் படிச்சென்ன படிக்காமல் விட்டென்ன...

பார்: மாஸ்டர் என்ன இருந்தாலும் அவங்கட பெற்றோரால உதைத்தாங்கேலுமே... இக்கணம் இதுதெரியவர மனம் இடிஞ்செல்லே போயிருங்கள்...

அதி: இப்படியான பிள்ளையளை அவையள் வளர்த்தென்ன, விட்டென்ன... இவங்களை வீட்டை விட்டுத் துரத்தினாலும் காணாது...

பார்: இப்பிடித் தறுதலைகளாய்ப் போகிற பிள்ளையளுக்குத்தான் கவனமாய்ப் படிப்பிக்கவேணும். அவங்களை வீட்டை விட்டுத் துரத்தினால் அதுகள் பிற்காலத்தில் ஊருக்கு உதவாதது களாயெல்லே போயிடுங்கள்...

அதி: இவங்களைப் பள்ளிக்கூடத்தில் வைத்திருந்தால் மற்ற பிள்ளையளையும் கெடுத்துப் போடுவாங்கள்...

பார்: உங்கிட பிள்ளையளின்ரை நிலமையில வைச்சு யோசிச்சுப் பாருங்கோ மாஸ்டர்...

அதி: நல்லவேளை எனக்குப் பிள்ளையளே இல்லை... என்ர பிள்ளையள் இப்படியாய் இருந்தால் நான் காலை முறிச்சுப் போட்டிருப்பன்...

பார்: பிள்ளையள் இல்லாததால தான் உங்களுக்கு விளங்கு தில்ல... மாஸ்டர்... அதுகளைப் பெத்ததுகள் இப்ப என்ன பாடு படுகுதுகளோ... சின்னப்பிள்ளைத்தனமா ஏதோ அவங் கள் செய்து போட்டான்கள்... அதுக்கு நாங்களும் பழி வாங்கிறதே? (தழுதழுத்த குரலில்) வேண்டாம் மாஸ்டர்... நானும் தாயெண்ட மட்டில உங்கிட காலைப்பிடிச்சுக் கேக்கிறன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி: ஆச்சி... என்னம்மா இது... நீங்கள் எனக்குத் தாயைப் போலை... நீங்கள் என்ர கால்லை விழுறதே... சொல்லுங்கோ... இப்ப நான் என்ன செய்ய வேணுமெண்றியள்...

பார்: திரும்பவும் அந்தப்பெடியளைப் பள்ளிக்கூடத்திலை சேர்க்க வேணும்... அவ்வளவுதான் மாஸ்டர் நான் கேக்கிறது...

அதி: சரியெணை ஆச்சி... என்ர முழு விருப்பத்தோடை நான் இதைச் செய்யமாட்டன்... ஆனால் உங்கிடை தாயுள்ளத்தை விளங்கிக்கொண்டதால, அதை வருத்தக்கூடாதெண்டதாலை, இதுக்கு நான் ஓம்படறன்... (கலங்கி) ஆச்சி, நீங்கள் சாதாரண ஆளில்லை... வள்ளுவர் சொன்னாரே இன்னா செய்தாரை ஒறுத்தல் எப்படிஎண்டு... அதை வாழ்க்கைல கடைப்பிடிக்கிற ஆள் நீங்கள் தான்... நீங்கள் நல்லாய் இருக்கவேணும்... சுகபெலமாய்க் கனகாலம் இருக்க வேணுமாச்சி... நான் வாறன்... நான் வாறன்... சுந்தரம்...

ஆசி: ஓமோம்...

பார்: சந்தோஷம் மாஸ்டர்.... போயிற்று வாருங்கோ...

(முடிவிசை)



***பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா***
***பிற்பகல் தாமே வரும்.*** *(குறள்: 319)*

# ஓர் அனுபவம் பாடமாகிறது

பாத்திரங்கள்: டீச்சர்
மகிழ்
தேவதாஸ்
டேவிட்
மீனாட்சி
(தேவதாசின் சின்னம்மா)

டீச்ச: பரீட்சைக்கு பணங்கட்டாதவங்க எல்லாம் இண்ணைக்கு கட்டிடனும். இண்ணைக்குத்தான் கடைசி நாளின்னு எப்பவோ சொல்லியாச்சுது... இண்ணைக்கும் கொண்டு வராதவங்களை சோதனைக்கு விட மாட்டோம்.

மகிழ்: (விம்மி) ம்... ம்... டீச்சர்...

டீச்ச: என்ன மகிழ், ஏன் அழுறே?

மகிழ்: நா... நான்... சோதனைக்கிண்ணு... ம்... ம்... கொண்டு வந்த காசை யாரோ க... களவாண்டிட்டாங்க டீச்சர்...

டீச்ச: எங்க வச்சிருந்தே?

மகிழ்: இந்தப் பெட்டில தான் டீச்சர்...

டீச்ச: இன்ரவெல் நேரம் எங்கயாச்சும் போனியா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்: தண்ணி குடிக்கப் போனேன் டீச்சர்...

டீச்ச: நீ காசு வச்சிருந்தது யாருக்கும் தெரியுமா?

மகிழ்: ஆமா டீச்சர்... பாலு, சுசீலா, மதி எல்லாருங் கண்டாங்க டீச்சர்.

டீச்ச: எவ்வளவு காசு?

மகிழ்: அஞ்சு ரூபா டீச்சர்... அது கரைல சிவப்பு மை பட்டிருந்திச்சு...

டீச்ச: சரி... வேறே யாரும் அஞ்சு ரூபா வச்சிருக்கீங்களா?

ஒரு: என்கிட்டயும் இருக்கு டீச்சர்...

மற்ற: என் கிட்டவும் இருக்கு டீச்சர்...

டீச்ச: அதை இங்க கொண்ணாங்க பார்ப்போம்... இதுகளில்லை... என்ன மகிழ் அப்பிடித்தானே...

மகிழ்: ஆமா டீச்சர்...

டீச்ச: சரி எல்லாரும் வெளில வாங்க... நான் சோதிச்சுப் பாக்கப் போறேன். யாருக்கிட்டயாவது அந்தக் காசு இருந்து பிடிபட்டா வீட்டுக்குத்தான் அனுப்புவேன்... அப்புறம் ஸ்கூலுக்கு வர முடியாது. சொல்லிட்டேன்... எடுத்தவங்க இப்பவே கொண் ணந்து தந்திட்டா மன்னிச்ச விட்டிடலாம்... இந்தா வா மகிழ், நீ போய் நல்லா தேடிப்பாரு... நீங்க ஒவ்வொருத்தரா இங்க வாங்க... நான் பாக்கிறேன். சேப்பில என்ன வச்சி ருக்கே? எடு வெளியில...

மகிழ்: (வந்தபடி) அங்க கிளாஸ் ரூமில காண இல்ல டீச்சர்... நல்லாவே தேடிப்பாத்துட்டேன்.

டீச்ச: அப்ப எங்க போயிருக்கும்? நீ தான் வழியில எங்கயாச்சும் தொலைச்சிருப்பே.

மகிழ்: இல்ல டீச்சர்... அப்ப கூட பெட்டிக்க இருந்திச்சு...

(இடையிசை)



தேவ: டேய் டேவிட்! வாடா ஹோட்டலுக்கு போவம்...

டேவி: ஹோட்டலுக்குப் போய் என்ன தண்ணி குடிக்கப் போறியா?

தேவ: போடா! ப்ரூட் சாலட் ஆளுக்கொன்று அடிக்கலாம் வா...

டேவி: காசு...

தேவ: என்கிட்ட இருக்குடா...

டேவி: அப்ப சரி வா...

(ஹோட்டல் இரைச்சல்கள்)

டேவி: ஆமா தேவதாஸ் எம்மட்டு காசு வச்சிருக்கே?

தேவ: அஞ்சு ரூவாடா...

டேவி: அஞ்சு ரூவாயா? யாரு தந்தா... தேவா?

தேவ: எங்க வீட்டில தாண்டா... அம்மா தந்திச்சுது...

டேவி: என்னடா இது இன்னைக்கு காத்தால தான் உங்கம்மா எங்கம்மாகிட்ட காசில்லேன்னு அரிசி கடன் வாங்கிட்டு போச்சு...

தேவ: டேய் டேய்! டீச்சர் வர்றாடா... வா வா போயிடலாம்...

டேவி: ஏண்டா பயப்படுறே? நாம ப்ரூட் சலாட் குடிச்சா டீச்சருக் கென்னடா?

தேவ: அதில்லேடா... வா... சொல்றேன்...

டேவி: ஓகோ... எனக்கு விளங்கிடிச்சி...

தேவ: என்னது?

டேவி: இது மகிழோட காசு... இதைக் காணேல்லைன்னு அழுது கிட்டிருந்திச்சே. அப்புறம் டீச்சரும் தேடிப் பாத்தாங்களே... அது தானே?

தேவ: மெதுவாப் பேசுடா... மெதுவாப் பேசு...

டேவி: இந்தா செவப்பு இங்க் வேற பட்டிருக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ: டேய் யாருகிட்டவும் சொல்லாத டேவிட். டீச்சர் அங்கிட்டு போனாப்புறம் ப்ரூட்சலாட் வடை எல்லாம் வாங்கி ரெண்டு பேத்துமா சாப்பிடலாம்...

டேவி: போடா போடா! திருட்டுக்காசில எனக்குப் பங்கா? நான் வரமாட்டேன்.

தேவ: அப்புறம் நான் உன் கூட கோவம் போட்டிடுவேன்...

டேவி: போட்டாப் போடேன்...

தேவ: டேய் டேய், போவாதடா. போவாதடா டேவிட்!

டேவி: நான் வரல்ல உன் கூட... களவெடுக்கிறவங்க கூட நான் கூட்டாளித்தனம் பண்ணிக்கமாட்டேன்.

தேவ: அப்ப டீச்சர்கிட்ட சொல்லப் போறியா...

டேவி: இந்த வாட்டிசொல்ல மாட்டேன்... இனி எடுத்தியிண்ணா தெரியும்.

(இடையிசை)

மீனா: டேய் தேவதாஸ், பள்ளிக்கூடம் விட்டு வர்றப்போ சந்தையில காய் கறிய வாங்கிட்டு நேரா வீட்டுக்கு வரணும் புரியதா?

தேவ: காசு?

மீனா: இந்தா பத்து ரூவா... கவனமா வச்சுக்க... களவாணிப்பயங்க எடுத்திடுவாங்க பத்திரம்...

தேவ: என்கிட்ட அதெல்லாம் நடக்காது சின்னம்மா...

மீனா: சரி சரி வாய்தான் உனக்கு. நேரமாச்சு புறப்படு...

தேவ: என்னெல்லாம் வாங்கணும் சின்னம்மா?

மீனா: மலிவா இருக்கிற காய் கறியளா பாத்து ஒரு நாலைஞ்சு வாங்கிட்டு வா. வேற, கிழங்கும் ஒரு றாத்தல் வாங்கிட்டு வா...

தேவ: சரி சின்னம்மா... போய்ட்டு வர்றேன்.

(இடையிசை)



தேவ: ம்... ம்... (அழுதல்)

மகிழ்: ஏன் தேவதாஸ் அழுதுகிட்டிருக்கே...

தேவ: என் பத்து ரூவாவக் காணேல்லை...

மகிழ்: என்ன பத்து ரூவாயா...

தேவ: ஆமா, மகிழ்... பத்து ரூவா...

மகிழ்: நம்மட கிளாசில களவாணிப்பய யாரோ இருக்கான். அண்ணைக்கும் என்னோட அஞ்சு ரூபா காணாமல் போச்சு தானே...

தேவ: வீட்டுக்குப் போனா சின்னம்மா கொன்னிடும்... என்ன பண்றது?

மகிழ்: எங்கூட்டில அன்னிக்கு அப்பாரு ஏசேசின்னு ஏசிப்புட்டாரு...

தேவ: காசில்லாம வீட்டுக்குப் போவ பயமாயிருக்கு... மகிழ்.

மகிழ்: டீச்சர்கிட்ட சொன்னியா?

தேவ: டீச்சர்கிட்ட சொல்லலாம்னு தான் போனேன். ஆனா... இண்ணைக்கென்னமோ டீச்சர் முன்னாடி போய்ட்டாங்க.

மகிழ்: இப்ப என்ன செய்யப் போறே?

தேவ: என்ன செய்யிறதின்னுதான் தெரியேல்லை. அது கூட சின்னம்மா எங்கேயோ கடன் வாங்கித் தான் வந்திச்சுது.

மகிழ்: என்கிட்ட ஒரு அஞ்சு ரூவா இருக்குது. எங்க கொழும்பு மாமா வந்தப்போ தந்தாரு. அதை வேணும்னா தர்றேன். அப்புறமா நீ கொஞ்சம் கொஞ்சமா சேத்து தர்றியா?

தேவ: வேணாம் மகிழ், உனக்கு நான் செஞ்ச அநியாயத்துக்கு தான் கடவுளா பாத்து எனக்கிப்பிடி செஞ்சிருக்காரு...

மகிழ்: நீ என்ன சொல்றே தேவதாஸ்?

தேவ: ஆமா மகிழ். அண்ணைக்கு உன்னோட அஞ்சு ரூவாவ நான் தான் களவாண்டேன்.

மகிழ்: என்ன? நீயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ: என்னை மன்னிச்சிடு. எப்பிடியாச்சும் நான் றபர் கொட்டை சேத்து வித்து, அதைத் தந்திடுறேன். யாருக்கும் இதைச் சொல்லிடாதே.

மகிழ்: சரி நான் யாருக்கும் சொல்லலை.

(இடையிசை)

மீனா: என்னடா, காய் கறியெல்லாம் வாங்கிட்டு வரச் சொல்லி காலைல படிச்சுப் படிச்சுச் சொன்னேன். இப்ப வெறுங்கைய வீசிகிட்டு வந்து நிக்கறே?

தேவ: கா... காசு... தொலைஞ்சு போயிடிச்சி சின்னம்மா...

மீனா: என்னடா சொல்றே?

தேவ: ஆமா சின்னம்மா... தொலைஞ்சிட்டுது... (சிணுங்கதல்)

மீனா: ராஸ்கல். தொலைச்சிட்டேன்னு பொய்யா சொல்றே உண் மையச் சொல்லுடா. எங்க காசு?

தேவ: சத்தியமாத் தான் சொல்றேன் சின்னம்மா...

மீனா: என்னை நம்பச் சொல்றியா? தொலைச்சிட்டேன்னு சொல் லிக்கிட்டு மரமாட்டம் வந்து நின்னா சும்மா விட்டுடுவேன்னு நெனைச்சியா... போடா வெளியில...

தேவ: சின்னம்மா... நான் எங்க சின்னம்மா போவேன்.

மீனா: எங்க போவியோ, என்ன செய்வியோ? இதில நின்னு அழுது மாய்மாலம் பண்ணாம எங்கயாச்சும் போய், எவனையாவது புடிச்சு பத்து ரூவாவோட வந்தா வா, இல்லை தொலைஞ்சு போ...

டேவி: (வெளியிலிருந்து) மாமி... மீனா மாமி...

மீனா: யாரது? டேவிட்டா... உள்ளே வாடா... பாத்தியாடா உன் கூட்டாளியோட வேலைய... பத்துரூவாயத் துலைச்சிட்டானாம். முழிச்சிக்கிட்டு வந்து நிக்கிறான்.

டேவி: அந்தக் காசு தொலைய இல்லை மாமி...



மீனா: அப்படீன்னா?

டேவி: இந்தா இருக்குது அந்தப் பத்து ரூவா?

மீனா: நீ தான் எடுத்து ஒளிச்சு வச்சிட்டு வெளையாட்டுக் காட்டி னியா... சரியான ஆள்தான் நீயும்.

டேவி: ஐயையோ அப்பிடி நினைச்சிடாதீங்க... மாமி... அந்தக் களவாணி வேலைக்கெல்லாம் நான் போக மாட்டேன்...

மீனா: அப்படீன்னா இது உனக்கு எப்படிக் கிடைச்சுது?

டேவி: டீச்சர் தந்தாங்க?

தேவ: என்னடா சொல்றே?

டேவி: ஆமாடா... நீ டீச்சர்கிட்ட கொப்பி திருத்தக் குடுத்தப்போ அதுக்குள்ளே இது இருந்திருக்குது. நீ கவனிக்கலை. டீச்சரும் கொப்பிகளை திருத்திறதுக்கு எடுத்து கிட்டுப் போனாவா, காசும் அது கூட போயிடிச்சு. நான் வர்றப்போ டீச்சர் வீட்டுக்கு போனேன். எனக்கு எவ்வளவு மார்க்ஸ் விழுந்திருக்குன்னு கேட்கலாம்னு. இதை உன்கிட்ட கொடுத் திட சொல்லி அப்பதான் அவங்க தந்து விட்டாங்க.

தேவ: இப்ப தாண்டா எனக்கு மனசு நிம்மதியாச்சு. கொஞ்ச நேரமா நான் எப்பிடித் தவிச்சுப்போய்ட்டேன் தெரியுமா?

டேவி: எல்லாம் தனக்குன்னு வந்தாத்தான் தெரியும்.

தேவ: இது எனக்கொரு நல்ல பாடண்டா... நான் திருந்திட்டேன்...

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான் கண்டானாம் தான்கண்ட வாறு.*** *(குறள்: 849)*

# வீட்டுக்கு விரு

பாத்திரங்கள்: வடிவேலு
மனைவி மயிலு
மகன் மணி
மகள் திலகா
மாமி அலுமேலு
மகன் முரளி
சண்முகம் (அங்கிள்)
மகள் மலர்விழி

மயி: ஏங்க உங்க அக்கா இண்ணைக்குத் தானே வர்றதா கடிதம் போட்டிருந் திச்சு...

வடி: ஆமா மயிலு... காத்தால இருந்து அதுதான் நானும் வழிய வழிய பாத்துகிட்டே இருக்கேன்...

மயி: ஒரு சமயம் பஸ்ஸில எடம் கெடைக் காமப் போயிடிச்சோ...

வடி: ஒரு பஸ்ஸ விட்டா இன்னொண்ணு... எதில சரி வந்திருக்கணுமே...

மயி: எதுக்கும் இன்னொரு வாட்டி பஸ் ஸ்ராண்டு வரைக்கும் போய்ப் பாத் துட்டு வந்திடுங்களேன்.



வடி: அதுக்காத்தானே சின்னவன் மணிய ஸ்ராண்டிலயே நின்னுக்க சொல்லி அனுப்பிச்சிட்டேன்... நான் வேற போவணுமா?

மயி: அவன் சின்னப்பய, அவனுக்கென்னங்க தெரியும்? எதை யாச்சும் வேடிக்கை பாத்துகிட்டு நின்னிடுவான்... மாமியோட மொகங்கூட அவனுக்கு மறந்து போயிருக்கும்...

வடி: பாத்துப் பாத்து கண்ணே பூத்துப் போயிடிச்சு... ம்... சேட்டை எடுத்தா... போய் பாத்துட்டு வந்துடுறேன்.

மயி: வர்றப்போ நல்ல கருவாடு இருந்தா கையோட வாங்கிட்டு வாங்க... இந்தாங்க பையி...

வடி: இதென்னது சேட்டில பொத்தல். அண்ணைக்கு தைக்க சொன்னேனே... தைச்சு வைக்கல்லியா?

மயி: வேற வேலைங்களில மறந்து போச்சுங்க... இருந்துக்குங்க வேற ஒண்ணு கொண்டாறேன்...

வடி: நீ எதைத்தான் ஒழுங்கா செய்யுறியோ?

தில: ஏம்மா, மாமி கொழும்பில இருந்துதானே வர்றாங்க...

மயி: ஆமாண்டி ஆமா...

தில: அவுங்க கூட வேற யாரெல்லாம் வருவாங்க?

மயி: மாமியே வரக்காணோம். மத்தவங்க பத்தி நான் என்ன கண்டேன்...

மணி: (ஓடி வந்து) மாமி வந்துருச்சு... அப்பா மாமி வந்தாச்சு...

வடி: எங்கேடா... காணமே...

மணி: அவ ஆடி ஆடி வந்துக்கிட்டிருக்கா... நான் ஓடி ஓடி முன்னாடி வந்துட்டேன் - சேதி சொல்ல...

தில: ஏண்ணா, அவ கூட வேற யாரெல்லாம் வந்திருக்கா?

மணி: முரளியும் வந்திருக்காண்டி...

தில: நெசமாவா... வாடா வாடா போய் கூட்டிக்கிட்டு வருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயி: (வந்து) ஏண்டி ரகளை பண்றே... மாமி வர்றப்போ வாசல்ல போய் அடைச்சுகிட்டு நிக்காம உள்ளே வாங்க...

அல: (பெருமூச்சுடன்) ஸ்... அப்பாடா...

மயி: ஆ... வாங்க மச்சாள்... வாங்க... வாங்க

வடி: பஸ்ஸில மிச்சம் ஜனமோ... நல்லா களைச்சுப் போனாப்பல இருக்கே...

மயி: டியே திலகா, உள்ள போயி மாமிக்கு மோரு கரைச்சுகிட்டு வாடி... அட இது நம்ம முரளியா இம்புட்டு வளர்ந்திட்டானே...

வடி: (சென்றபடி) அப்ப நான் போய் கறிபுளி சாமான்கள வாங்கிட்டு வர்றேன்...

தில: இந்தாங்க மாமி மோர் குடியுங்க...

மயி: முரளி, எடுத்துக்கப்பா...

முர: ம்ஹூம்... எனக்கு வேணாம்...

மயி: ஏன் தம்பி வேணாங்கிறே?

முர: எனக்கு இதெல்லாம் பிடிக்காது...

மயி: அப்ப கடையில போய் சோடா ஒண்ணு வாங்கிட்டு வா மணி...

முர: (கடுமையாக) வேணாம்...

அல: ஏண்டா?

முர: நோ மம்மி... வேணாம்னா வேணாம்...

அல: அவனுக்கு விருப்பமில்ல போல... விட்டுடுங்க.

மயி: மணி மாமி கையில இருக்கிற டம்ளர வாங்கிகிட்டுப் போய் உள்ள வை...

அல: மணி மாறவே இல்ல... அப்ப பாத்த மாதிரியேதான் இப்பவும் இருக்கான்... எந்த கிளாஸ்ல படிக்கிறான்.

மணி: ஆறாங் கிளாஸ்ல மாமி...



அல: இவனும் இப்ப ஆறுதான்...

மயி: ரெண்டு பேருக்கும் ஒரே வயசுதானே...

அல: மணி, ரெலிவிஷன்னா என்ன... சொல்லு பாப்பம்...

மணி: (வெட்கத்துடன்) தெரியல்ல மாமி...

முர: (சிரித்து) ப்பூ... இதுகூடத் தெரியல்லியா...

மயி: ஒழுங்கா படிச்சா தானே தெரியிறதுக்கு...

அல: சரி அதை விடு... ஈபெல் டவர் எங்க இருக்கு சொல்லு பாப்போம்...

மணி: ஈபலா? அப்படீன்னா?

மயி: உன் மர மண்டை... ஆடுதிருடினவனாட்டம் நல்லா முழிக்கத் தானே தெரியுது...

அல: முரளி, நீ சொல்லு பார்ப்போம்...

முர: பிரான்சில தானே மம்மி...

அல: குட்...

மயி: பாத்தியா உன் வயசுதானே அவனுக்கும்... அவனுக்கு தெரியுது... உனக்கு தெரியல்ல...

அல: இதுதான் ரெண்டாவதா...

மயி: ஆமா... இவபேரு திலகராணி... திலகான்னு கூப்பிடுவோம்...

அல: திலகா நீ எத்தினை படிக்கிறே...

தில: அஞ்சாங் கிளாஸ் மாமி...

அல: அஞ்சாங் கிளாசா... சரி நீ சொல்லு பாப்பம் ஆந்தைக்கு இங்கிலீஷ்ல எப்படி சொல்றது?

மணி: (ரகசியமாக) மாமிவூட்டுப் பேரை சொல்லுடி...

தில: அலமேலு...

அல: அலமேலில்லடி அவுலு... அலமேலு எங்கிறது என் பேரில்லையா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயி: இதுங்களுக்கு ஒண்ணுமே தெரியாது... சுத்த மக்குக. நீங்க எந்திரிச்சு உள்ள வந்து உடுப்பை மாத்துங்க... ஏண்டா பாத்துகிட்டு நிக்கறே மாமிவூட்டுப் பெட்டிய கொண்டு போய் உள்ள வை...

அல: பிள்ளைங்களோட படிப்பைப்பத்தி நீங்க கவனிக்கிறதே இல்லைப்போல...

மயி: என்ன மச்சாள் செய்யிறது... இதுகளுக்குப் படிச்சுக் குடுக்க அவருக்கு நேரம் ஒழியிறதில்ல... இதுகளும் தாங்களா நெனைச்சுப் படிக்கிறதுமில்ல. எப்ப பாத்தாலும் ஆட்டமும் ஓட்டமும்தான்...

அல: இந்த மாதிரி ஊரில இருந்தா அப்படித்தான். ஏன் மச்சாள், மணியக் கொழும்பில விட்டுப் படிக்க வைக்கிறது தானே...

மயி: அப்படித்தான் இப்ப எனக்கும் யோசனை போவுது... அவரும் வரட்டும்... கேட்டுப் பாத்திட்டு உங்ககூட அனுப்புவோம்...

(இடையிசை)

வடி: அப்ப நீ இப்ப என்னதான் சொல்றே?

மயி: இந்தப் பட்டிக்காட்டிலயிருந்து படிச்சாக்க அப்புறம் அவன் குட்டிச்சுவராத்தான் போயிடுவான்...

வடி: கொழும்பில விடுறதுன்னா மிச்சம் செலவாகும்ன்னு தான் பாக்குறேன்...

மயி: உங்க அக்கா ஊட்டில அவன் நின்னுக்கலாம் தானே? அப்புறம் என்ன?

வடி: சரி ஒன் இஷ்டம். இப்ப அக்கா எங்க?

மயி: கோயிலுக்குத் தான் போயிருக்கா...

வடி: சரி, அவ வரட்டுக்கும் பேசி முடிச்சிடுவோம்...

மயி: அங்க போறதுன்னா மணிக்கு சப்பாத்து சாமான்லாம் வாங்கணும்...



வடி: ஆமா, டவுனுக்கு படிக்கப் போறதின்னா சும்மாவா... நாலைஞ்சு காச்சட்டை சேட்டும் தச்சிக்கத்தான் வேணும்... இவன எங்க காங்கல்ல...

மயி: இங்கதானே நின்னான்... ஏண்டி அண்ணன் எங்கே?

தில: (சென்றபடி) அண்ணோய்... அண்ணோய் ஒன்னை அப்பா தேடுது...

மணி: (வந்து) என்னப்பா...

வடி: என்கூட சல்தியா பொறப்படுடா... டெயிலர் கடை மட்டும் போயிட்டு வரணும்...

மணி: எதுக்குப்பா டெயிலர் கடைக்கு?

வடி: வர சொன்னா வாயேன்... எதுக்கு அதுக்கின்னுகிட்டு...

(இடையிசை)

தில: அப்ப நீ நாளைக்கு கொழும்புக்கு போறியாண்ணா?

மணி: எனக்கின்னா போக விருப்பமே இல்லத் தங்கச்சி...

தில: அங்க போனாத்தானே நல்ல படிப்பு படிக்கலாம்னு மாமி சொன்னாங்க...

மணி: அங்க ஆறுங்கூட இல்லையாண்டி... முரளி சொன்னான்...

தில: அப்ப எங்க குளிப்பாங்களாம்... கிணத்திலயா?

மணி: ம்ஹூம்... பைப்பிலயாம்... ஒனக்கு ஒண்ணு தெரியுமா... முரளிக்கு நீஞ்சவே தெரியாதாம்டி...

தில: பொய்யி...

மணி: நீ வேணும்னா அவன்கிட்ட போய்க் கேட்டுப்பாரேன்... அவங்க வீட்டு மின்னாடி வெளையாடவும் எடமில்லையாம்.

தில: அப்ப ஊட்டுக்குள்ளயேதான் எப்பவும் அடஞ்சிருக்கணும்.

மணி: ஆமா, கிட்டிப்புள்ளு ஆடலாம்னு முரளியக் கேட்டேன்... அப்படீன்னா என்னங்கிறாண்டி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில: அவன் கால்ல போட்டிருக்கிற சப்பாத்தைப் பாத்தியா... பளபளான்னு நாய்க்குட்டி கண்ணு கணக்கா மினுங்குது...

மணி: காச்சட்டை எல்லாம் நல்ல ஸ்ரையிலா தச்சுகிட்டிருக்கான் இல்லியா...

திலை: நீயும் அங்க போனா அப்படித்தானே வருவே...

மணி: அது சரிடி, ஆனா வெளையாடத்தான் அங்க ஒரு பயலுக்கும் தெரியாது போல இருக்கு... கிளித்தட்டும் மறிக்க மாட்டாங் களாம்... சடுகுடுவும் தெரியாதாம்... எப்ப பாத்தாலும் படிப்புத் தானாம்.

(இடையிசை)

(கொழும்பு வீட்டு வானொலி ஆங்கிலத்தில் அலறிக்கொண்டிருக்க, வாசல் மணி கிணுகிணுக்கிறது)

அல: முரளி, வாசல்ல பெல் அடிக்குதில்ல... கேக்கலியா?

முர: டோண்ட் டிஸ்ரேர்ப் மீ மம்மி... நான் ரீ.வி பாத்துக்கொண் டிருக்கேன்...

அல: (தனக்குள் முணுமுணுத்தபடி) இந்தக் காலம் பிள்ளைங்க ஒரு சொல்பேச்சுக் கேட்க மாட்டாங்களே... (கதவைத் திறந்து) ஆ... வாங்க... வாங்க... எங்க உங்க மிஸிஸ் வரல்லையா?

சண்: ஸ்கூல்ல ஏதோ... பங்ஷனாம்னு அவ போய்ட்டா... எங்க மிஸ்டர் கண்ணன் இல்லியா?

அல: அவருக்கு ஆபீஸ்ல ஏதோ மீட்டிங்காம். வர லேட்டாகும்னு போன் பண்ணினாரு... இது மலர்விழி தானே? நம்ம முரளி யோட கிளாஸ்ல தானே நீயும் படிக்கிறே?

சண்: அந்த ஸ்கூல்ல படிப்பு ரொம்ப மோசம்னு இவளை பிரைவேட் ஸ்கூலுக்கிப்ப மாத்திட்டேன்...

அல: டேய் முரளி, அந்த ரீவீய கொஞ்சம் கொறைச்சு வைடா... பேசறது காதில விழுதில்ல...



சண்: இவ ஸ்கொலர்ஷிப்ல வேற எடுபட்டிருக்கா...

அல: அப்படியா, குட் குட்... முரளி, உள்ளே போய் ரெண்டு ட்ரிங் கரைச்சுட்டு வா...

முர: என்ன மம்மி, நான் ரீவி பாத்துகிட்டிருக்கேன் தெரியல்லியா?

அல: (சென்றபடி) கொஞ்சம் இருங்க... வர்றேன்...

சண்: முரளி, வாட் டு யூ நோ எபவுட் மார்க்கோணி... சொல்லு பார்ப்போம்...

முர: (யோசித்து) மக்குரோணியா... அது அது... சாப்பிட்டா நல்லா கொழுத்து வரலாம்... ஆனால் எனக்கது பிடிக்காது...

மல: மக்கு... மக்கு... ஒனக்கு சாப்பாடு பத்தித்தான் எப்பவும் நெனைப்பு... மக்குரோணியில்ல மார்க்கோணி... மார்க்கோணி இஸ் ஏ சயன்டிஸ்ற்... அவருதான் ரேடியோவ கண்டுபிடிச் சாரு... இல்லையா டடி...

சண்: யூ ஆர் ரைட்... என்ன முரளி, உனக்கு இதுகூடத் தெரி யல்ல...

முர: (வந்து) ரேடியோவைப்பத்தி அவனுக்கெங்க தெரியுது... அவன் இப்ப ரீவியோட இல்ல இருக்கான்...

சண்: சரி இதுக்காச்சும் சொல்லு பார்ப்போம்... சிகரெட்டில நிகொட் டின்கிற நஞ்சு இருக்கு. அதே மாதிரி தேயிலையில இருக்கிற நஞ்சுக்குப் பேரென்ன?

முர: தேயிலையில நஞ்சிருக்கிண்ணா அதை ஏன் இப்ப குடிக் கிறீங்க அங்கிள்?

சண்: யூ பெட்டர் ஆன்சர் மை கொஸ்யன் பெஸ்ற்... முதல்ல என் கேள்விக்கு பதிலைச் சொல்லேன்...

முர: எனக்குத் தெரியாது... தெரியாது... தெரியாது...

அல: அதுக்கேண்டா கத்தறே?

மல: 'ரனின்' தானே அப்பா?

சண்: நீ கெட்டிக்காரிதான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல: இவன் ஸ்கூல்ல படிப்பு ஒண்ணும் வேலயில்லப் போலதான் தெரியுது... இவனையும் இனி எங்க சரி மாத்தித் தான் போடணும்...

(இடையிசை)

மயி: என்னங்க இது... காலைலதான் புறப்பட்டீங்க போனதும் வந்ததுமா திரும்பிட்டீங்களே... ஏன் மணிய கொழும்பு ஸ்கூல்ல கேக்கல்லியா?

வடி: கொழும்பும் குப்பைத் தொட்டியும்... அதை ஏன் கேட்கிறே... அங்க போனாக்கா நம்ம மவன் நாசமாவே போயிடுவான்... இப்பன்னாலும் அவன் நாம சொல்ற பேச்சைக் கேட்டு நடந்துக்கிறான். அங்க போனான்னா அதுவும் போயிடும்...

மயி: ஏங்க அப்படி சொல்றீங்க?

வடி: முரளிப்பய அங்க எப்படி இருக்கான் தெரியுமா? காலுக்கு மேல கால போட்டுக்கிட்டு, படப்பெட்டியவே பாத்துகிட்டு பெரிய பவுசால்ல ஒக்காந்திருக்கான்...

மயி: நெசமாவா?

வடி: ஆ... பெரியவங்கன்னு ஒரு மருவாதை கெடையாது... இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சைம்பாங்க. போய்ப் பாத்தா இல்ல தெரியுது... வீட்டுக்கு வீடு வாசப்படிதாங்கிறது. அந்த ஊர்ப்பசங்களோட வச்சுப் பாத்தா முரளி மக்காயிருக்கான். இங்க வந்தா பெரிசா பீத்திக்கிறான். எல்லாமே ஒண்ணு தான்போ...

மயி: எனக்கும் மணிய விட்டிட்டு இருக்கிறப்போ என்னமோ மாதிரித்தாங்க இருந்திச்சு, ஏதோ பிள்ளை படிச்சு முன்னுக்கு வரணும்னு தான் வாய மூடிக்கிட்டிருந்தேன். இப்ப நல்லதாப் போச்சு...

தில: ஹேய்... அண்ணா வந்துடிச்சு... அண்ணா வந்திடிச்சு...

(முடிவிசை)



***அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்***
***புண்கணீர் பூசல் தரும்.*** *(குறள்: 71)*

# பனி விலகியது

பாத்திரங்கள்: ஆதவன்
தங்கை மஞ்சுளா
தாய் மங்களம்
நண்பன் மணி
மாமா மூர்த்தி
தந்தை முருகேசு

மஞ்: (வந்தபடி) அம்மா... அம்மா... இண்ணையோட எங்களுக்கு லீவு விட்டாச்சும்மா...

மங்: அப்படியா... சின்னண்ணா எங்கேடி? உங்கூட வரல்லியா?

மஞ்: வந்தானே... பயந்துகிட்டு வாசல்ல நின்னுகிட்டிருக்கானம்மா...

மங்: எதுக்காம்? டேய் ஆதவன்... இங்க வாடா... என்ன, றிப்போர்ட் தந்தாங்களா? கொண்டா பாப்போம்...

ஆத: வந்தும்மா...

மங்: கொண்டாடா... ஓகோ, மூணாம் புள்ளையா... அதுதான் நிண்ணு மசுகிறியா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத: அது வந்தும்மா இந்த ரவி இருக்கானே அவனும் அந்த மாலாவும் கணக்கில என்னைக்காட்டிலும் கூட மாக்ஸ் எடுத்திட்டாங்க... அதுதான்...

மங்: தெரியும்டா தெரியும்... சும்மா சாக்கு சொல்லாத படிச்சாத் தானே... எப்ப சரி விளையாட்டுத்தான் உனக்கு.

மஞ்: ஆமாம்மா ஸ்கூல்லயும் அந்த மனோகரண்ணா கூட சேர்ந்து கிட்டு எப்பவும் வெளையாட்டுதான்...

ஆத: நீ பெரிசா கண்டே.... சும்மா வாய மூடிக்கிட்டிருடி...

மங்: அவளை ஏன் இப்ப ஏசுறே? அவ உண்மையத்தானே சொல்றா... அப்பா வரட்டும் இண்ணைக்கு... அடியாத மாடு படியாதுடா...

மஞ்: ஏம்மா, பெரியண்ணா படிக்கிற ஸ்கூலு நம்மோடத விட பெரிசா...

மங்: அதை ஸ்கூலுன்னு சொல்றதில்லேடி காலேஜும்பாங்க... அது எம்மாம் பெரிசு தெரியுமா? உங்கூட்டு ஸ்கூல போல பத்து ஸ்கூலு சேர்ந்த கணக்கா இருக்கும்...

மஞ்: அண்ணா வந்தாக்க எனக்கு நல்ல நல்ல கதையெல்லாம் சொல்லும்... இல்லியாம்மா...

மங்: ஆமா ஆமா... டேய் ஆதவன் அண்ணா வரப்போறானில்லியா, அந்த காம்பறாவ நல்லா துப்பரவா கூட்டி தொடைச்சி வையி. என்னடா கல்லுளிமங்கனாட்டம் எங்கிட்டோ பாத்து கிட்டிருக்கே... நான் சொன்னது புரிஞ்சுதா?

ஆத: (எரிச்சலுடன்) புரிஞ்சுது... புரிஞ்சுது... புரிஞ்சுது... போதுமா?

மங்: அதுக்கேண்டா இப்படி கத்தறே...

மஞ்: இந்தண்ணா இப்படித்தாம்மா சும்மா சும்மா கத்தும்... (பாடுதல்) குட்டியண்ணா மட்டியண்ணா சட்டியிலே முட்டிக் கண்ணா... ஏ... ஏ... ஏ...

ஆத: நான் மட்டியண்ணாவா... இந்தா மொட்டுறன்பாரு எப்படி யிருக்கெண்ணு (குட்டுகிறான்)



மஞ்: (சிணுங்கியழுதபடி) ம்... ம்... பாரும்மா அண்ணாவை மொட்டுறான்...

மங்: ஏண்டா அவ தலலே மொட்டினே?

ஆத: அவ மட்டும் என்னை வழிப்பங் காட்டலாமா...

மங்: அவ பாவம் சின்னப்புள்ளடா...

ஆத: ஆமா. அவ சின்னப்புள்ளை (அழுதபடி) உங்களுக்கெல்லாம் எப்பவும் அவதான் உசத்தி... என்கிட்டதான் எப்பவும் கொறை பிடிப்பீங்க...

மங்: லீவு விட்டுட்டாங்கன்னா போதும். உங்க கூட பெரிய கரச்சல் தான். ஏண்டி அவன்தான் சண்டைக்காறன். நீயாச்சும் வாய மூடிகிட்டு சும்மா இரேண்டி. ஆதவன் நல்ல பிள்ளையாட்டம் நீ முதல்ல போயி கடையில அரிசி சாமான்க எல்லாம் வாங்கியந்து தந்துட்டு அப்புறமா அந்த காம்பறாவ கூட்டி வையி என்ன...

(இடையிசை)

மங்: ஏங்க, இந்த வீட்டில என்ன நடக்குது ஏது நடக்குதுன்னு ஏதாச்சும் உங்களுக்குத் தெரியுதா?

முரு: ஏன்... என்ன நடக்குதாம்?

மங்: ஒங்களுக்கென்ன... வீட்டுக்கு வந்தா நீங்க பேப்பரோட ஒக்காந்துடுறீங்க... நாள் பூரா இவங்க கூட நானில்ல கெடந்து மாரடிக்கிறேன்...

முரு: இப்ப என்ன சொல்ல வர்றே, அதைச் சொல்லு...

மங்: இப்ப கொஞ்ச நாளா இவன் சின்னவனோட பெரளி தாங்க முடியல்லீங்க. நீங்களாச்சும் கூப்பிட்டுக் கொஞ்சம் கண்டிச் சீங்கன்னாத்தான் வழிக்கு வருவான்...

முரு: அப்படியா? ஆதவன் டேய் ஆதவன் இங்கவா... ஆமா அப்படி என்னதான் பெரளி செய்யிறான் சொல்லேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்: எதை சொல்றது... அவன் பெரிய பய வந்த நாள்ளயிருந்து எப்பவும் அவன் கூட சண்டையிழுத்த படிதான்க. நேத்து பாருங்க அவன் தன்னோட சப்பாத்தை மினுக்கி வைடான்னு சொல்ல, இவன் 'நான் என்ன உங்கூட்டு வேலைக்கா ரனா'ன்னு ஙாங்கியா பதில் சொல்றான்...

முரு: அப்படியா, ஏண்டா அம்மா சொல்றதெல்லாம் நெசம் தானே? நீயே போய் ஒரு கோப்பி கம்பு ஒடிச்சுகிட்டு வா... போ...

மங்: அப்புறம் பாருங்க, அவனூட்டு புதுப்பேனாவ இவன் எடுத்து என்னமோ செஞ்சு அது இப்ப எழுதமாட்டுதாம்னு அவனிப்ப அழுவுறான்... தங்கச்சிக்காறியப் போட்டு சதா மொட்டுறான் கிள்ளுறான் அப்பப்பா... இவன்பாடே எனக்கு பெரும்பாடா இருக்குங்க...

முரு: இதுக்கு மருந்து வேறொண்ணும் இல்ல... அடிதான்.

மங்: ஏதோ உங்கபாடு அவன்பாடு... நான் போறேன் உள்ள.

ஆத: (அழுதபடி) இல்லப்பா... இனிமே அப்படியெல்லாம் செய்ய மாட்டேன்பா... அடிக்காதீங்கப்பா...

முரு: (கடுமையாக) பேசாம திரும்பி நில்லு... (பிரம்பு வீச்சொலி) ஒண்ணு... ரெண்டு... மூணு...

ஆத: (அழுது) அம்மா... என் அம்மா... ஐயோ வலிக்குதுப்பா... ரொம்ப வலிக்குதுப்பா...

(சோக இடையிசை)

ஆத: ஒண்ணு ரெண்டில்லடா பத்தடி... அதுவும் கோப்பிக் கம்பால... பாத்தியா, காயங்கூட இன்னும் ஆறல்ல...

மணி: உங்கப்பா ரொம்ப மோசம்டா...

ஆத: ஏன்னு தெரியல்லடா மணி, எங்கூட்டில என்னை யாருக்குமே பிடிக்கல்ல...

மணி: நீ நல்லாத்தானே படிக்கிறே... அப்புறம் ஏண்டா அப்படி?



ஆத: அதுதாண்டா எனக்கும் புரியமாட்டேங்குது... லீவு விட்டு அண்ணன் வீட்டை வந்தாக் காணும் அவனுக்குத் தான் எல்லாம். ஸ்பெஷலா பால் வாங்கிக் குடுப்பாங்க... தெனமும் முட்டை பொரிச்சுக் கொடுப்பாங்க... கொழும்பில போய் மெலிஞ்சு போய்ட்டானாம்னு சொல்லி சொல்லி அவனுக்குத் தான் எல்லாமே... அவன் என்னடான்னா குண்டோதரன் கணக்கா கொழுத்துப் போயிருக்கான்...

மணி: எளியவனாப் பொறந்தாலும் இளையவனாப் பொறக்கக் கூடாதுன்னு அதுதாண்டா சொல்லியிருக்காங்க...

ஆத: சில நேரங்களில வீட்டை விட்டே ஓடிப்போயிரலாம்னு கூட யோசனை வருதுடா...

மணி: ஓடிப்போனா அப்புறம் சாப்பாட்டுக்கு என்னடா செய்வே?

ஆத: ஏதாச்சும் கூலி வேலை சரி செஞ்சுக்குவேண்டா...

மணி: அதெல்லாம் பொய்க்கதை. நடக்கிற கதையாப் பேசுடா...

ஆத: அண்ணன் எப்ப கொழும்புக்குப் போய்த் தொலைவான்னு இருக்குடா...

மணி: உன் தங்கச்சிக்கும் ஒன்னில பிரியமில்லையாடா...

ஆத: ஆ... பெரிய தங்கச்சி... அது ஒரு கோள்மூட்டி...

மணி: சரி சரி... நான் வர்றேண்டா. வீட்டில அம்மா தேடும்...

ஆத: எங்கூட்டிலயும் தேடுவாங்கதான் - எது சரி வேலை சொல்ற துக்கு... (தனக்குள்) வேலை எல்லாம் செய்ய நானு... குஷாலா குந்திக்கிட்டிருந்து சாப்பிட அவனு... ம்...

(இடையிசை)

மங்: என்ன அண்ணாச்சி, அத்தி பூத்தாப்பல இந்தப்பக்கம் வந்தி ருக்கீங்க... இப்பவாச்சும் நம்ப வீட்டுக்கு வர வழி தெரிஞ் சுதே...

மூர்: அட நீயொண்ணு... எங்க தங்கச்சி நேரங் கெடைக்குது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்பற எந்திரிச்சா பொழுது சாயற மட்டும் ஓயாத வேலைதான்... இப்ப கூட நம்ப வேலை விஷயமாத்தான் இங்கிட்டு வந்தேன்... ஆமா எங்க மச்சானைக் காங்கல்ல...

மங்: அவுரு மாதவனை இட்டுகிட்டு ஆத்துக்குப் போயிருக்காரு...

மூர்: அப்படியா, ஆமா உன்னோட சின்னவன் எங்க? என்னைக் கண்டாக்க ஓடியே வருவான். இண்ணைக்கு கண்ணிலேயே படமாட்டேங்கிறானே...

மங்: அவன் போக்கே இப்ப அப்படித்தாண்ணை... யார் கூடவும் ஒட்ட மாட்டேங்கிறான்... தனியா ஒதுங்கிக்கிறான்... இல்லேன்னா அவனூட்டு தங்கச்சிகூடவும் அண்ணங்காரன் கூடவும் சும்மா சும்மா சண்டை வலிச்சிக்கிறான்...

மூர்: அதென்ன அப்படி சொல்லிட்டே.... நம்ம ஆதவன் நல்ல பயலாச்சே... கூப்பிடு அவனை நான் கேக்கிறேன்...

மங்: ஆதவன், டேய் ஆதவன்...

ஆத: (வந்து) ம்... ஆதவனுக்கென்ன இப்ப...

மங்: பாத்தியாண்ணே மொறைச்சுகிட்டு வர்றத...

மூர்: வாடா என் மருமகப் பயலே... என்னடா நீ இப்ப பெரிய ஆளாயிட்டியாமே... எல்லாத்தோடயும் சண்டை போட்டுக் கிறியாம்... நெசந்தானா?

ஆத: இல்லை மாமா... அம்மா சும்மா சொல்லுது.

மூர்: ஆம்பிளைப் பசங்கன்னா அப்படித் தாண்டா இருக்கணும். என்னைப்போல மீசைய முறுக்கிகிட்டு சிங்கக்குட்டிபோல, நாலுபேர் கூட சண்டையிழுத்துகிட்டா தாண்டா அவன் ஆம்பிளை...

மங்: ஆமா, நீங்க வேற சொல்லிக் குடுங்க... இப்பவே அவன் ஒதவாக்கரையா ஆயிகிட்டு வர்றான். இனி உருப்படாமலே போயிடுவான்...

மூர்: தங்கச்சி உனக்கு இதெல்லாம் புரியாது. ஆதவனை என்கூட கொழும்புக்கு அனுப்பி வையி. ஒரு நாலு நாளைக்கு அவன்



எங்கூட்டில வந்து நின்னான்னா நம்ப வீடும் கலகலப்பா இருக்கும்... அவனுக்கும் ஒரு 'சேஞ்சா' இருக்கும்... என்னடா மாமா கூட வர்றியா?

ஆத: (மகிழ்வோடு) வர்றேன் மாமா... இப்பவே வேணும்னாலும் கௌம்புறேன்... (முணுமுணுப்பாக) இந்த வீட்டில இருக் கிறதக் காட்டிலும் நரகத்துக்கு வேணும்னாலும் போகலாம்...

மூர்: என்னடாது என்னமோ வாய்க்க மிணுமிணுங்கிறே?

மங்: இப்படித்தான்... இப்படித்தான் எதை சொன்னாலும் வாய்க்குள்ளயே ஏதாச்சும் மிணுமிணுங்கிறான்...

மூர்: எதுக்கும் மச்சான் வரட்டும்... அவருகிட்டயும் கேட்டுப்பாத்து அவரும் ஒத்துகிட்டா கூட்டிக்கிட்டுப் போறேன்... சரியாடா?

ஆத: சரி மாமா... ஆ... அந்தா அப்பாவும் வர்றாரு...

முரு: (வந்தபடி) ஆ... யாரு? அட நம்ப மச்சான் மூர்த்தியா வாப்பா வா... எப்ப வந்தே?

மூர்: இப்ப கொஞ்சம் மின்னாடிதான் மச்சான்... எல்லாரையும் பாத்தாச்சு... இனி என்ன புறப்பட வேண்டியதுதான்...

முரு: என்ன வந்ததும் வராததுமா பறக்கிறே... இருந்து சாப்பிட்டு, அப்புறமா போகலாம்தானே...?

மூர்: அதுக்கெல்லாம் இப்ப நேரமில்ல மச்சான்... அவசர சோலி ஒண்ணு முடிச்சாகணும்... இன்னொண்ணு கேட்கணும்... என்கூடவே நம்ம மருமகப்பயலையும் கூட்டிகிட்டுப் போய் கொஞ்ச நாளைக்கு வச்சிருக்கலாம்னு பாக்கிறேன்...

முரு: ஆதவனையா (யோசித்து) ம்... சரி அதுக்கென்ன அவனும் பிரியப்பட்டா அழைச்சுக்கிட்டுப் போயேன்...

மூர்: பய துடிச்சிகிட்டிருக்கான்... அப்ப புறப்படுடா மருமவனே...

ஆத: (சென்றபடி) இந்தா ஒரு நிமிட்ல வந்துடுறேன் மாமா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்: பாத்தியா தங்கச்சி... பய எப்படி துள்ளிக்கிட்டு ஓடுறான்னு...

மங்: அண்ணாச்சிக்கு புள்ளைங்க இல்லாங்காட்டியும் நம்ப புள்ளைங்களில பாசம்தான்...

(இடையிசை)

மங்: என்னங்க ஆதவன் இல்லாதது வீடு என்னமோ மாதிரி இருக்குங்க...

முரு: அவன் போய் இப்ப ரெண்டு நாள்தானே ஆவுது...

மங்: எனக்கென்னவோ ரெண்டு மாசங் கணக்கா இருக்குதுங்க... அவன் இல்லாதது என் வலது கையே ஒடிஞ்ச மாதிரி போயிடிச்சுங்க...

முரு: அதுசரி, அவன் இருந்தா ஒரு அம்பது வேலை சொல்லுவே... அவனும் அலுத்துக்காம செய்வான்...

மங்: எதுவுமே பக்கத்தில இருக்கிறப்போ அதோட மதிப்பு தெரியிறதில்ல... இல்லீங்களா?

முரு: நெசந்தான், அவன் இப்ப இருந்தான்னா ஒங்கிட்ட ஆயிரம் திட்டு வாங்கியிருப்பான்...

மஞ்: (வந்து) ஏம்மா, சின்னண்ணா எப்ப வரும்?

மங்: அவனை ஏண்டி தேடுறே... அவன்னாத்தான் உனக்கு கண்ணில காட்டேலாதே...

மஞ்: போம்மா... உனக்கொண்ணும் தெரியாது. சின்னண்ணாதான் நல்லம். பெரியண்ணா என்கூட வெளையாடவே வரமாட்டுது...

முரு: பாத்தியா, பக்கத்தில இருக்கிறப்போ அடிச்சுக்கிட்டாலும் அவளுக்கு அவன் மேலதான் பிரியமிருக்கு. உனக்குத்தான் அவனைக்காட்டி பெரியவன் உசத்தியா தெரியறான்...

மங்: இதென்னங்க உங்க கதை. பொண்ணையும் பக்கத்தில வச்சுகிட்டு. எனக்கு மாதவன் வேற ஆதவன் வேறயா? ரெண்டு பேத்தும் என் பிள்ளைங்க தானே?



முரு: எனக்குத் தெரியாதா... நான் சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன்...

மங்: ஏங்க எனக்கு ஆதவனைப் பிரிஞ்சு இருக்கிறது என்னவோ மாதிரி இருக்குதுங்க...

முரு: அதுக்கிப்ப என்ன செய்யணுங்கறே?

மங்: வாங்க இண்ணைக்கே பத்து மணி பஸ்ஸப்புடிச்சு கொழும்பில அண்ணாச்சி வீட்டுக்கு போய் அவனைக் கூட்டிகிட்டு வந்துடலாங்க...

முரு: சரி, உன் இஷ்டம். அப்ப புறப்படு...

(இடையிசை)

மூர்: ஆ... தங்கச்சியா வா... வா... என்ன மச்சான் வெளீலய நின்னுகிட்டு... உள்ளார வாங்க...

மங்: ஆதவன் எங்கேண்ணா?

மூர்: உன் புள்ளைய கழுகொண்ணும் கொத்திக்கிட்டுப் போயிடல்ல... ஏன் பறக்கிறே?

முரு: அவனை உங்க கூட அனுப்பிச்சிட்டு ரெண்டு நாளா இவ துடிச்சிகிட்டிருக்கா...

மூர்: அவனும் அப்படித்தான். வந்ததில இருந்து சதா அம்மா அம்மான்னே ஒலம்பிக்கிட்டிருக்கான்...

மூர்: ஆனா தங்கச்சி, என்னமோ தெரியல்ல, உனக்கு அவனை விட மூத்த பய மேலதான் பிரியம்ங்கிற மாதிரி அவன் மனசில ஒரு கொறை இருக்குப்போல...

மங்: இதென்ன அண்ணாச்சி உங்க கதை, என் புள்ளைங்கள நான் பாரபட்சமா நடத்துவனா? பெரியவன் போடிங்ல இருக்கானா, லீவுக்கு மட்டும்தானே வர்றான். அதனால அவன் வந்து நிக்கிறப்போ அவனைக் கொஞ்சம் கூடக் கவனிச்சாப்பல இவனை ஒதுக்கிட்டேன்னு அர்த்தமா? ஆமா ஆதவன் எங்க காங்கலியே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்: உள்ளைதான்... படுத்துகிட்டிருக்கான் போல...

மங்: படுத்துகிட்டிருக்கானா? ஏன் உடம்புக்கேதாச்சும்...

மூர்: பதறாத... பதறாத... அவன் உடம்புக்கொண்ணுமில்ல... சும்மாதான் படுத்திருக்கான்...

ஆத: (வந்து) அம்மா... என் அம்மா... என் ஆசை அம்மா... என்னை மன்னிச்சுடும்மா... என்னை மன்னிச்சுடுங்க...

மங்: இதென்னடா இது... பெரிய பேச்செல்லாம் பேசறே?

ஆத: நீங்க மாமாகூடப் பேசிக்கிட்டிருந்ததெல்லாம் நான் உள்ள கேட்டுக்கிட்டுத்தாம்மா இருந்தேன்... இம்மட்டு நாளா உங்க ளுக்கெல்லாம் என்மேல பிரியமில்லேன்னு எவ்வளவு தப்பா நெனைச்சுகிட்டிருந்தேன்னு இப்பதாம்மா புரியுது...

மங்: சரி சரி புறப்படு. நீயில்லாம எனக்கங்க ஒரு வேலையும் ஓடுதில்ல...

ஆத: ஏம்மா தங்கச்சி வரல்லயா?

மங்: அதுவும் நீ எப்ப வருவே வருவேன்னு நாளுக்கு நூறுவாட்டி என்னைப் போட்டுத் தொளைச்சபடி. ராத்திரி கனாவில வேற வந்து, அதுகூட வெளையாட வரமாட்டேன்னிட்டியாம்னு சொல்லி காத்தால கண்ணை வேற கசக்கிகிட்டிருந்திச்சு...

ஆத: அண்ணன் என்னைத் தேடிச்சாம்மா...

மங்: தேடாம? எதுசரி வெளையாட நீயில்லியேன்னு சொல்லி வீட்டுக்குள்ளயே அடைஞ்சு கிடக்கான். நீயில்லாம தனியா ஆத்துக்கு மீன் பிடிக்க போகவும் பிடிக்கேல்லன்னு சொல்லி சலிச்சுகுவான்...

ஆத: நான் ஒரு முட்டாளும்மா...

மங்: யார்டா அப்படி சொன்னது? இந்தவாட்டி மூணாம் பிள்ளையா வந்துட்டேங்கிறதால நீ முட்டாளா? உன்னைப் போல எவண்டா வீட்டு வேலை எல்லாம் செஞ்சுகிட்டு பாடத்தையும் ஒழுங்காப் படிப்பான்...



மூர்: போதும் போதும். உன் மவனை நீயே புகழ்ந்துக்காத...

முரு: அப்ப புறப்படுவமா...

ஆத: (மகிழ்வுடன்) இப்பவே போறமா?

மூர்: அட, வீட்ட புறப்படுறதிண்ண உடன பயல்ட குஷியப் பாரேன்...

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்.** *(குறள்: 973)*

# ஒரு சிறுவன் ZOO பார்க்கப் போகிறான்

பாத்திரங்கள்: செல்வமணி- தந்தை
லலிதா- தாய்
முத்து- மகன்
ரங்கநாதன்- என்ஜீனியர்
கமுகாசலம்- டொக்டர்
பரிமேலழகர்- சட்டத்தரணி

முத்: அம்மோய்...

லலி: என்னடா...

முத்: நீ Zoo பாத்திருக்கியா...

லலி: Zooவா அப்பிடின்னா...

முத்: என்னம்மா இது... Zooன்னா தெரியாதா? இந்த மிருகங்க பறவைங்க எல்லாம் அடைச்சு வச்சிருக்காங்களாமே... கொழும்பில ஒரிடத்தில...

லலி: அட அதுவா...

முத்: ஆமாம்மா... நீ போயிருக்கியா?

லலி: எப்பவோ சின்னதில எங்க அச்சன் கூட்டிகிட்டு போச்சு...



முத்: நம்ப ஸ்கூல்ல எல்லாரும் Zoo பாக்கப் போவப் போறாங்களாம்மா...

லலி: அதுக்கென்ன இப்ப...

முத்: நானும் போறேம்மா...

லலி: (யோசித்து) ம்... அடுத்தவாட்டி போறப்போ போலாம்டா...

முத்: போம்மா... நீ எப்பவும் இப்பிடித்தான் சொல்லிகிட்டே வர்றே...

லலி: நான் என்னடா செய்யிறது. நீ கேட்ட சீருக்கு பிச்சுத் தர்றதுக்கு காசு மரத்திலயா காச்சுத் தொங்குது...

முத்: அப்ப மத்தப்பசங்க எல்லாம் போறாங்களே... அவுங்கூட்டில மட்டும் எப்படி காசு வருதாம்...

லலி: ஆமா... எவ்வளவு பணம்டா?

முத்: பத்து ரூவா தாம்மா...

லலி: (அதிர்ந்து) பத்து ரூவாயா... அடி அம்மாடி... அம்மட்டு பணம் இருந்தாத்தான் நான் பத்து நாளைக்கு அலையாம திரியாம உலை வச்சிடுவனே...

முத்: என்னம்மா நீ... எப்ப பாத்தாலும் காசில்ல காசில்லன்னுகிட்டு...

லலி: நான் என்னடா செய்வேன்... அன்னாடம் கஞ்சிக்கே ஆலாப் பறக்க வேண்டிக்கிடக்கு...

முத்: அப்ப நான் ஸ்கூலுக்கு இனிமே போப்போறல்ல...

லலி: ம்... நான் அப்பவே சொன்னேன். உங்கப்பா கேட்டாரா... பெரிய ஸ்கூல்ல தான் சேக்கணும்னு ஒரேயடியா நின்னாரு. இப்ப ஒவ்வொண்ணுக்கும் காசைக் கொண்டா கொண்டான்னா நான்தான் நின்னு முழிக்க வேண்டிக்கிடக்கு... வரட்டுக்கும் அவரு...

செல்: (வந்தபடி) எனக்கு ஆயுசு நூறு போல... ஆமா எதுக்கிப்ப நான் வந்தாகணும்...

லலி: இவன் என்ன பேசுறான்னு கேட்டீங்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்: ஏன், உனக்குப் புரியாத மாதிரி ஏதும் இங்கிலீஷ்ல பேசறானா...? அதுக்குத்தானேடி நான் அவனை பெரிய ஸ்கூல்ல சேத்துப் படிக்க விட்டிருக்கேன்...

லலி: ஆமா... பெரிய ஸ்கூலுதான்... அதால தான் இவன் ஸ்கூலுக்கே போவாம நின்னிடப் போறானாம்...

செல்: என்னது... ஸ்கூலுக்கு போவமாட்டேங்கிறானா? ஏண்டா நெசமாத்தானா? ஏன் போவ மாட்டேங்கிறே... டீச்சரம்மா ஏதாச்சும் ஏசிப்புட்டாங்களா...

லலி: அவுங்க ஏன் ஏசிறாங்க... அவுங்க தங்கமான ரீச்சரம்மா ஆச்சே...

செல்: அப்புறம்...?

லலி: இவன் ஏதோ சூப்பாக்கப் போறானாம்...

செல்: சூவா... ம்... அதுக்கென்ன பாத்திட்டாப் போச்சு...

லலி: ஆமா... நீங்க சொல்லுவீங்க... காசுக்கெங்க போறதாம்? கடன் தலைக்கு மேல நிக்குது...

செல்: அது நிக்கிற கடன். நின்னிட்டு போவுது. வுடு, இப்ப இவனுக்கு எவ்வளவு காசு வேணுமாம்...

லலி: பத்து றூவாயாம்...

செல்: (அதிர்ந்து) ம்... பத்தா...

லலி: என்ன முகட்டப் பாக்கிறீங்க... கூரையைப் பிச்சுகிட்டு யாரும் கொட்டுவாங்கன்னா...? மழைகாலம் தொடங்கிரிச்சு... இனி அதுவேற ஒழுகப் போவுது...

செல்: (தயக்கமாக) ஏன் லலிதா ஒன்கிட்ட ஏதாச்சும் சல்லி கில்லி இல்லியா...

லலி: ஆமா, என் முடிச்சில தான் முடிஞ்சு வச்சுகிட்டு ஒங்களுக்கு இல்லேங்கறேன் நான்... இண்ணைக்கு உலை வைக்க ஊட்டில மணி அரிசி கூட இல்ல... என்ன பண்றதுண்ணு நான் யோசிச்சுகிட்டிருக்கேன். நீங்க ஒண்ணு...



செல்: பக்கத்தில எங்கசரி கேட்டுப் பாரேன்...

லலி: ஆ... தருவாங்க. அவுங்க ஊட்டில மட்டும் தனலட்சுமி தனியா போய் குந்திகிட்டிருக்காளா என்ன. அங்கேயும் இதே கதை தான்...

செல்: சரி சரி... நம்ப கஷ்டம் நம்பளோட இருந்துட்டு போவுது... பிள்ளைங்க முன்னாடி இதையெல்லாம் சொல்லிக்காதைன்னு எத்தினை வாட்டி சொன்னாலும் காதில போட்டுக்க மாட்டேங் கற... ஏதோ நம்ம காலந்தான் இப்பிடியாச்சு... அதுக காலத்திலயாச்சும் அதுக நல்லாயிருக்கணும் பாரு...

லலி: நான் ஒரு படிக்காத முண்டம். நீங்க புதுசு புதுசா என்னென் னமோ சொல்லுவீங்க. எல்லாத்தையும் ஒரு காதால கேட்டு மறுகாதால விட்டுப்புடுறேன்...

செல்: சரி சரி சும்மா சலிச்சுக்காத... வுடு. நம்பிக்கைல தாண்டி ஒவ்வொருத்தன் வாழ்க்கையே ஓடிகிட்டிருக்கு... நல்ல வேளையா இண்ணைக்கு லீவு நாளாயிருக்கு. நான் துணி யடிக்கிற நாலு வீட்டில கேட்டுப் பாத்தேன்னா கெடைக் காமலா போவப் போவுது...

முத்: நானும் உன்கூட வர்றேன்பா...

செல்: சரிடா வெரசா புறப்படு...

(இடையிசை)

(பின்னணியில் வாகனங்களின் இரைச்சல்)

செல்: முத்து, கவனமா றோட்டோட ஒதுங்கி வாடா... காறுசைக்கிளு மோதிப்புடும்...

முத்: டவுணில எம்மாம் காறுப்பா... நம்மளுக்கும் ஒரு கார் இருந்தா இப்பிடி நடந்து போய்கிட்டிருக்க தேவல்ல... இல்லியாப்பா...

செல்: காரில போய் கடன் கேக்கலாம்கிறியா... (சிரித்து) நல்ல ஆளுடா நீ...

முத்: ஏம்பா... இப்ப நாம்ப எங்க போய்கிட்டிருக்கோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்: பெரிய்ய என்ஜீனியர் ஒருத்தர் ஊட்டுக்கு நான் துணி யடிச்சுகிட்டிருக்கேண்டா... அவரு ஊடு இதில கிட்டக்கதான் இருக்கு...

முத்: என்ஜீனியர்னா இந்தக் கட்டடங்க எல்லாம் கட்டுறவர் தானேப்பா...

செல்: ஆமாண்டா... நம்ப நாட்டில எத்தனையோ பாலங்கள அவரு கட்டியிருக்காருடா... நாம்ப வர்றப்போ தாண்டி வந்தமே ஒரு பாலத்தை அதுகூட அவரு கட்டினது தாண்டா...

முத்: இந்தப் பெரிய பெரிய வீடுங்கள்ளாம் அவரு கட்டுவாராப்பா...

செல்: ஆமாடா... ஒதுங்கி வா உள்ளாற...

முத்: நானும் பெரிசா வந்தாப்புறம் இன்ஜீனியராத்தாம்பா வருவேன்...

செல்: வந்து என்னடா பண்ணப் போறே...

முத்: எங்க ஊட்டை பெரிய்ய ஊடா கட்டப் போறேன்பா...

செல்: ஆ... இந்தா ஊடு வந்திடிச்சிடா...

முத்: நீ இம்மாம் பெரிய பங்களால கூட துணியடிக்கிறேன்னு ஏம்பா இம்மட்டு நாளா என்கிட்ட சொல்லல்ல...

செல்: சொல்லி என்னத்தைடா...

முத்: என் கூட்டாளிப் பசங்க கிட்டேல்லாம் நான் சொல்லியிருப்பனே... ஏம்பா இந்த போர்டில குரங்குநாதன்னு எழுதி வைச்சிருக்கு...

செல்: (கண்டிப்புத் தொனியில் இறங்கிய குரலில்) ஸ்... குரங்கு நாதன் இல்லடா... கூனா ரங்கநாதன்... அதுதாண்டா அவரு பேரு...

(Buzzer ஒலிக்கிறது)

முத்: ஏம்பா அந்த பொத்தானைப் போட்டு அமுக்குறே...

செல்: அது தாண்டா பெல்லு... அதை அமுக்கினா உள்ள மணி யடிக்கும்...



(நாய் குரைக்கும் ஒலி)

முத்: (பயத்துடன்) அப்பா... நாயுப்பா...

செல்: நீ பயப்படாதை... அதொண்ணும் செய்யாது... நம்மோட பழக்கமான நாய் தான்...

ரங்க: (வந்தபடி, வெறியில் குரல் குழற) யார்ரா அவன்... Who is the black sheep...

முத்: (மெதுவாக பயத்தொனியில்) அப்பா, அவரைப் பாத்தா குடிச்சிட்டிருக்காப்பல இருக்கு... வாங்கப்பா போயிரலாம்...

செல்: ஸ்... நீ சும்மாயிரு... (குழைவாக) வணக்கஞ்சாமி... நான் தாங்க செல்வமணி...

ரங்க: வட் மணி...? செல்வ... மணி... (பெரிதாகச் சிரித்து) ஹோ... ஹோ... ஹோ... வட் ஏ ஜோக் நோ செல்வம் நோ மணி. பட் யூ ஆர் செல்வமணி... ஆ... யாரிந்த சுட்டிப்பய... ஒன் பையனா?

செல்: ஆமாங்கையா...

ரங்: ஏய் பொடியா... உனக்கு டான்ஸ் ஆடத் தெரியுமா... டான்ஸ்... கம்... கமோன் லெட் அஸ் டான்ஸ்... (பாடியபடி) பொம் பொம் பொம்... பொம்ப மெறி ஹெய்...

முத்: அப்பா... வாங்கப்பா... எனக்கு பயமா இருக்குப்பா...

செல்: கொஞ்சம் பொறுடா... ஐயா, உங்ககிட்ட ஒரு சின்ன உதவி கேட்கலாம்னு வந்தேங்க...

ரங்: உதவியா... என்கிட்டயா... ஒன் குடிசைய ஒடைச்சு மாடி வீடா கட்டப் போறியா... (சிரித்தல்) ஹோ... ஹோ... ஹோ...

முத்: வாப்பா போய்ட்டு அப்புறமா வருவோம்...

ரங்: (திடீரென சீரியஸாக) ஏய், இதில இருந்த கிளாஸ் எங்க. உண்மைய சொல்லிடு... நீ எடுத்தியா? எங்க மறைச்சு வச்சிருக்கே... ரெல் த ட்றுத்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்: நான் ஏங்க கிளாசை எடுக்கிறன்... நீங்கதான் மறதியா எங்கயாச்சும்...

ரங்: நோ... ஐ கெப்ட் இற் ஹியர்... இங்கதான் வச்சேன்... திருட்டுப் பசங்க... வீட்டுக்கவே பூந்து களவெடுக்க வந்துட் டீங்களா... I am going to call the police... நான் இப்பவே பொலீசுக்கு போன் பண்ணப் போறேன்...

செல்: பொலீசுக்கா... என்னங்கையா இது... நான் இந்த ஊட்டில இருபது வருசமா துணியடிக்கிறவன்க... என்னைப்பத்தி உங்கப்பா கிட்ட வேணும்னாலும் கேட்டுப்பாருங்க...

முத்: ஏம்பா... அந்தா போத்தில் மேலக்கவே கவிட்டு வச்சிருக் கேப்பா கிளாசு...

ரங்: இருக்கா... ஐ... ஸீ... என் கண்ணுக்கு ஒண்ணுமே தெரிய மாட்டேங்குது... போத்திலும் ஒண்ணுதான் கிளாசும் ஒண்ணு தான்... ஆமா நீ என்னவோ கேட்டியில்ல... சம் பேவர்...

செல்: வேணாங்கையா... நாங்க வர்றோம்...

(கார் முதலான வாகனங்களின் ஒலி)

முத்: நான் பயந்தே போய்ட்டேம்பா... பொலீசு கிலீசுன்னு சொல்லி நல்லா மெரட்டி புட்டாரு...

செல்: நாம்ப காசு ஏதாச்சும் கடன் கேட்டு புட்டாலும்னு தான் அப்புடி அக்டு பண்ணினாரோ என்னமோ... ஆருக்குடா தெரி யுது இதெல்லாம்...

முத்: ஏம்பா ஏதோ பெரிய என்ஜீனியர்னீங்க... அவரு என்னடான்னா அங்குட்டும் இங்குட்டுமா தடுமாறிக்கிட்டு நிக்குறாரு அவரு கட்டுற கட்டிடங்க பாலங்க மட்டும் எப்படி ஆடாம நிக்கு துன்னுதான் தெரியுதில்ல...

செல்: அவரு கட்டிற கட்டிடம் பெரிசா இருக்கலாம்டா ஆனா மனிசனுக்கு மனசு ரொம்ப சின்னதாதான் இருக்கு.

முத்: கொஞ்ச நேரத்தில என்ன மாதிரி ஆட்டம் காமிச்சாரு...



குரங்கும் இப்படித்தானேப்பா அங்குட்டும் இங்குட்டும் பாயுமாம்...

(Buzzer ஒலிக்கிறது)

முத்: இது யாருடப்பா...

செல்: இதுதாண்டா டொக்டர் கழுகாசலத்தோட ஊடு... அவரு பேர சொன்னா ஊரில தெரியாதவங்களே கெடையாதுடா...

முத்: இவரு பல்லு டொக்டராப்பா...

செல்: இல்லடா இவுரு பெரிய பெரிய ஒப்பரேசன் எல்லாம் செய்யுற டாக்டரு, ஒன் வயித்தில பூச்சி இருந்திச்சின்னா வெட்டி அதை வெளிய எடுத்துப்புடுவாரு... (கதவு திறக்கும் ஒலி) வணக்கங்க ஐயா...

கழு: யாரு... ஓ... செல்வமணியா... என்ன நேத்தைக்கு தானே வந்திட்டுப் போனே...

செல்: (அசட்டுச் சிரிப்புடன்) ஹி... ஹி... நான் அதுக்கு வரல்லீங்க...

கழு: அப்ப வேற என்ன... உன் பையனுக்கேதாச்சும் டிரபிளா... என் கொன்சல்டிங் பீஸே பிப்டி றுபீஸ்... அம்பது ரூபா... அது தெரியுமா உனக்கு... உங்களைப் போல ஆக்களுக் குத்தான் கவுண்மென்ற் ஹொஸ்பிட்டல் இருக்கே...

செல்: அதில்லீங்க... வந்து...

கழு: இந்தா ரைம் இஸ் கோல்ட் (Gold)... நேரம் பொன்னானது. வந்த விஷயத்தை சட்டு புட்டுனு சொல்லித் தொலை... எனக்கு எத்தனையோ என்கேஜ்மென்ட்ஸ்... நான் போயா வணும்... அதுக்குள்ள நீ வேற வந்து கழுத்தை அறுத்து கிட்டு...

செல்: மன்னிச்சுக்குங்க ஐயா... நாங்க வர்றோம்...

(மீண்டும் தெருவோசைகள்)

முத்: பெரிய்ய டொக்டரு... பேச்சிலயே ஆக்களை குதறித் தள்ளிப் பிடுவாரு போல இருக்கே... பாவம் இவருகிட்ட வர்றவங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்: பேரு வச்சவனும் சரியாத்தான் வச்சிருக்கான்... கழுகாசலம்னு கழுகுன்னாலும் கழுகுதான்...

முத்: ஏம்பா நம்ப சூவில கழுகும் இருக்காப்பா...

செல்: அங்க கழுகு இருந்தாலும் இப்படி கொத்தாதுடா...

முத்: ஏம்பா, இனி யாரூட்டுக்கு போப்போறீங்க?

செல்: நம்ப புறொக்டரோட வீடும் அந்த முடக்கிலதாண்டா இருக்கு... அங்க போனா கட்டாயம் அம்பிடும்...

முத்: பத்து ரூபாய்க்கா பதினைஞ்சு வீட்டில ஏறி இறங்க வேண்டியிருக்கு...

செல்: காசின்னா சும்மாவாடா... அதுதானே இப்ப ஒலகத்த ஆளுது...

முத்: இதுதான் வீடாப்பா...

செல்: ஆமாடா...

முத்: (வாசித்தல்) பரிமேலழகர்- பிரசித்த வழக்கறிஞர். ஏம்பா பரியின்னு போட்டிருக்கே... பரியின்னா குதிரைதானே...

செல்: ஆமாடா... பெரிய பெரிய வழக்குகளுக்கெல்லாம் இவுங்க தான்டா பேசுவாங்க... ரொம்ப நல்ல பேரெடுத்தவரு...

முத்: இவரு ஊட்டுக்கு முன்னாடி ஏன்பா இம்மட்டு ஜனங்க நிக்கிறாங்க...

செல்: இவுங்கெல்லாம் வழக்குப் பேச வைக்கிறதுக்கு அவருகிட்ட வந்தவங்கடா...

பரி: (வந்தபடி) என்னப்பா நீ சாட்சியப் பக்கத்திலையே வச்சுக் கொண்டு கொலையச் செய்து போட்டு, இப்ப வந்து என்ர காலைப் பிடிச்சால் நான் என்ன செய்யிறது... போ... போ... போய் வேற ஆரையும் பிடி... நீ என்னப்பா ஆறுமுகம் போன தரமே என்ர பீசைச் சரியாத் தரேல்லை. இப்ப வந்து தலைய சொறிஞ்சு கொண்டு நிக்கிறாய்? உங்களாலை பெரிய கரைச்சல்...

செல்: கும்புடுறேங்க...



பரி: ஆர் செல்வமணியோ... உனக்கென்ன? ஆற்றயும் வீட்டில களவெடுத்துப் போட்டியே...? எல்லாரும் செய்யிறதைச் செய்து போட்டுக் கடைசீல என்னிட்ட ஓடியாங்கோ...

செல்: நான் வந்தது வேற விஷயமாங்க...

பரி: வேற விஷயங்கள் கதைக்க இப்ப எனக்கு நேரமில்லை. போயிற்று பிறகு வா... போ... போ... நிண்டு மினக்கெடாதை...

(மீண்டும் தெருவோர ஓசைகள்)

முத்: என்னப்பா புறக்டரையா குதிரை ஒதைக்குமாப் போல ஒரே யடியா எல்லாரையும் ஒதைச்சுதைச்சே தள்ளுறாரே... இவருகிட்ட வழக்குப் பேச வர்றவங்க இவரு குடுக்கிற உதையிலயே சுருண்டு விழுந்திடுவாங்க போல இருக்குப்பா...

செல்: இவரூட்டு கறுத்தக் கோட்டுகளெல்லாத்தையும் நாம்ப அடிச்சடிச்சு எத்தனை வாட்டி கழுவியிருப்போம்... இப்ப பாக்குறப்போ அதில இருந்த அழுக்கு எல்லாத்தக் காட்டியும் இவரு மனசில இருக்கிற அழுக்குத்தான் மிச்சம் போல தெரியுது...

முத்: எல்லா ஊடுகள்ளயும் போர்டுகள மட்டும் பெரிசா மாட்டி வச்சிருக்காங்க...

செல்: (சலித்தபடி) ம்... போர்டெல்லாம் பெரிசா இருந்ததுக்கென்ன உள்ளை இருக்கவங்களில மனிசங்களத் தான் காங்கவே முடியுதில்ல...

(இடையிசை)

லலி: என்னங்க ரொம்ப சலிச்சுகிட்டு வர்றீங்க? போன காரியம் சரிப்படல்லப் போல...

செல்: ப்ஸ்... சும்மா வவுத்தெரிச்சலைக் கௌப்பாம சாப்பாடிருந்தாப் போடு பிள்ளை... பசி வயித்தைக் கொடையுது...

லலி: ஏங்க வீணாக் கவலைப்படுறீங்க... இந்தாங்க பத்து ரூவா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்: அட ஏது பிள்ளை இது, பத்து ரூவா...

லலி: கடவுளாப் பாத்து நம்ப பிள்ளையும் சூ பாக்கணும்னு கொடுத்திருக்காரு...

செல்: என்ன நீ வேற புதிரு போட்டுகிட்டு. வெளக்கமாத் தான் சொல்லேன்...

லலி: நேத்தைக்கு கொண்ணாந்தீங்களே அழுக்கு மூட்டை. அதுக்குள்ள தான் ஒரு கமிஸ சேப்பில இருந்திச்சு...

செல்: அடடே அப்படியா? (யோசித்து) ம்... பாவம் வயசான மனிசன்... என்ன தேவைக்கு வச்சிருந்திச்சுதோ... கொண்ணிட்டுப் போய் குடுத்திடணும்...

லலி: என்னது? திருப்பிக் குடுக்கப் போறீங்களா... நல்ல ஆள் தான் நீங்க...

செல்: மனிசனுக்கு நாணயம் முக்கியம்டி...

லலி: அப்ப நம்ப பையன் சூப் பாக்கப் போவேணாமா?

முத்: வேணாம்மா... இம்மாம் சல்லி செலவழிச்சுப் போயி, அடைச்சு வச்சிருக்க மிருகங்களை எதுக்கும்மா பாக்கணும்... எனக்கு சூப் பாக்கணுங்கிற ஆசையே போயிடிச்சும்மா.

(முடிவிசை)



**துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.** *(குறள்: 926)*

# தப்புத் தாளங்கள்

பாத்திரங்கள்: முனியாண்டி
பெருமாள்
மருதாயி
மகள் மலர்கொடி

முனி: (மகிழ்ச்சியாக முணுமுணுத்தபடி வரல்) லாலலாலலா... லலலால லாலலா....

பெரு: என்ன முனியாண்டி பாட்டு பிச்சுகிட்டு போவுது போல...

முனி: பெருமாளா, உன்னைத்தான் தேடிகிட்டு வர்றேன்... இண்ணைக்கு சம்பளமில்லியா...

பெரு: எடுத்திட்டியா...

முனி: ஆமா, சம்பளம் எடுத்த கையோட நேரா உனக்கிட்டத்தான் வாறேன்...

பெரு: அப்ப நாட்டுப்பக்கம் நடைய கட்ட வேண்டியது தான் மிச்சம்...

முனி: பண்டாவோட கள்ளு சரியில்ல. இண்ணைக்கு மத்தவனிட்ட போவோம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு: நீ எது சொல்றியோ நான் அதுக்கு ஓட்டுதான்...

முனி: அப்ப புறப்படேன்...

பெரு: இரு ஊட்டில சொல்லீட்டு வந்துடுறேன்... (தூர இருந்து) மீனாட்சி, அம்மாகிட்ட சொல்லு... நான் முனியாண்டியண்ணன் கூட நாட்டுக்கு போறேன்னு... சரியா...

முனி: சரி சரி வெரசா நட... நேரம் போச்சின்னா அப்புறம் கள்ளு முடிஞ்சு போயிடும்... சம்பள நாளில்லியா...

பெரு: முடிஞ்சிரிச்சின்னா டவுணில வந்து சாராயம் அடிக்கிறது தான்...

முனி: இப்ப சாராயம் அவ்வளவு சரியில்ல... ஒரே தண்ணிதான்...

பெரு: இண்ணைக்கு சொல்லத் தேவேல்ல... கறுப்பை ஒழிச்சு வச்சிட்டு வெள்ளைதான் இருக்கும்பாங்க...

முனி: அதிலையும் தண்ணியக் கலந்து நல்ல அடி அடிச்சிடு வாங்க...

பெரு: எல்லாருமே தொழிலாளிங்க கிட்டத்தான் விளையாட்டு விடுறாங்க...

முனி: அது தெரிஞ்சும் கூட குடிக்கப் போறம்பாரு... எங்க புத்திய என்னாங்கிறது...

பெரு: பழகிபுட்டோம்... என்னா செய்யிறது... விடவும் முடியுதில்ல...

முனி: இந்தக்குடிய மட்டும் நாம்ப தொடாம இருந்திருந்தம்னா இம்மட்டுக்கு நாம்ப எல்லாம் கோடீசுவரங்க...

பெரு: அதைப்பேசி என்னத்தை... விட்டுத்தள்ளு...

(இடையிசை)

(குடிவெறியில் உரையாடியபடி வரல்)

முனி: பெருமாள்... மச்சான் எனக்கு நடக்க முடியாதாம்... நாம்ப இப்ப டவுணுக்கு போவணும்... காரொண்ணு பேசிகிட்டு வா... Go...



பெரு: காசு மிச்சம் வரும் முனியாண்டி அண்ணை...

முனி: காசு... பெரிய காசு... எவ்வளவு வேணும் சொல்லு தர்றேன்... நூறு போதுமா... இந்தா புடி...

(கார் வந்து நிறுத்தப்படும் ஒலி)

பெரு: இந்தா காறு வந்திடிச்சு... டிறைவருனே... அப்பி ரவுமட்ட யண்டோணை... கீயத இல்லண்ணே...

டிறை: றுபியல் பணஹக் தெண்டகோ...

முனி: பணஹய்... எச்சருய்த... ஏனங் ஹரி... மச்சான் நகிண்ட... ஏறு மச்சான்... எங்கடா வந்தவனை காங்கல்ல பெருமாளு... வெயராயூ...

பெரு: மச்சான் முனியாண்டி காறுக்கு கீழ என்ன மச்சான் பாக்கிறே... ஐ ஹியர்... நான் இங்க உக்காந்திருக்கேன்...

முனி: அதுதானே பாத்தேன்... எங்கடா காணாமப் போயிட்டி யோன்னு... ஹறி றைவருனே யூ கோ...

(கார் ஓடும் ஒலி)

(பாடுதல்) ஏறாத மலைதனிலே வெகு ஜோரான கௌதாரி ரெண்டு... (கைகளால் தாளம் போடுதல்) தாராளமாய் இங்கே வந்து தரிகிடதோம் தாளம் போடுதையா...

டிறை: சும்மா சத்தங் போட ஓணாங்... காரில வாறது சொன்னா ரெஸ்பெட்டா வாறது...

முனி: (இரகசியக் குரலில்) மச்சான் பெருமாள், பயந்துட்டியா... ஏன் வாய மூடிக்கிட்டிருக்கே... நான்னா யாருக்கும் பயமில்ல... யேஸ்... ஏண்டா இந்தக் காறு துள்ளித் துள்ளி ஓடுது... சொல்லேண்டா...

பெரு: (இரகசியமாக) நான் நெனைக்கறேன்... இந்த டிறைவரு முந்தி குதிரை ஓட்டிற ஜொக்கியா இருந்திருப்பாரு போல...

முனி: எனக்கு சத்தி வர்றமாதிரி இருக்குடா... உவாஹ்... (சத்தியெடுத்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கார் நிறுத்தப்படும் ஒலி)

டிறை: சிக்கே... இதுக்குதாங் உன்னை போல ஆளெல்லாங் காரில ஏத்த மாட்டங் சொல்றது... காறுக்குள்ள சத்தி போடுறதா... ம்ம்... எறங்கு எறங்கு... டவுண் வந்தாச்சு... பைண்ட பைண்ட...

பெரு: டிறைவருனே... சமாவெண்ட மென்ன சல்லி... ருபியல் பணஹய்...

முனி: மச்சான் பாவம் அவண்ட காறில சத்தி போட்டிட்டேன் இன்னும் பத்து றூபா சேத்து குடு...

பெரு: இனி எங்க மச்சான் முனியாண்டி நாம்ப போறது...

முனி: வீ கோ தியேட்டர்... என்ன படம் மச்சான் ஓடுது...

பெரு: பப்படம் மச்சான்...

முனி: நீ அது பாத்திட்டியா...

பெரு: இல்ல முனியாண்டி... சத்தியமா இல்லை... உன்னை விட்டுட்டு தனியா நான் போவனா...

முனி: அப்ப சரிடா வா போவோம்...

பெரு: கலறியும் பல்கனியும் மட்டும்தாண்டா இருக்காம்...

முனி: கலறிக்கு நாம்ப போனா நமக்கு றெஸ்பெட் இல்ல மச்சான்... பல்கனிக்கு போவோம் வா... இந்தா சல்லி டிக்கட்ட எடு...

பெரு: பல்கனி தெக்காய்...

(இடையிசை)

முனி: மலரு... ஏ புள்ளை மலர்க்கொடி...

மல: போப்பா... எங்கூட நீ பேச வேணாம்...

முனி: ஏம்மா, அப்பா என்ன குத்தம் செஞ்சேன்... சொல்லுவியாம்...

மல: ராத்திரி ஏன் அம்மாவை அடிச்சியாம்...



முனி: உங்கம்மாவை நான் அடிச்சேனா... என்ன பிள்ளை சொல்றே...

மரு: (வந்தபடி) குடிச்சுபிட்டு வந்தா உங்களுக்கு எதுசரி தெரியுதாமா... ராத்திரி நீங்க பண்ணின ரகளைல இந்த லயமே நம்ப வீட்டு முன்னால குழுமிடிச்சே...

முனி: எனக்குண்ணா ஒண்ணுமே ஞாபகத்தில இல்ல மருதாயி...

மல: ராத்திரி நீ அம்மாவுக்கு வெறவுக் கட்டையால அடிச்சு இங்க பாத்தியா அம்மா கையில காயம்...

முனி: ஏதோ குடிவெறியில தெரியாம செஞ்சுபிட்டேன் கண்ணு மன்னிச்சுக்கடா... வேணும்னா இந்தா அப்பா கன்னத்தில உன் கையால ரெண்டு அடி போடுவியாம்...

மல: ஏம்பா நீ குடிக்கிறே...

முனி: எல்லாம் ஒரு சந்தோஷத்துக்கு தான் மக...

மல: ஒழைக்கிற சல்லியெல்லாம் நீ குடிக்கிறதுக்கே செலவளிக் கிறியாமே....

முனி: யாரும்மா அப்பிடி சொன்னது...

மரு: ஏ மலர்... என்ன மிச்சம் பேசறே...

மல: அம்மா பாவம் தானே அப்பா அதூட்டு சல்லியையும் நீ பறிச்சுகிட்டா நாம்ப எப்படி சாப்பிடுறதாம்...

முனி: ஏன் மருதாயி, புள்ளைக்கு இதெல்லாம் யாரு சொல்லிக் குடுத்தா...

மரு: யாரும் அதுக்கு சொல்லிக்குடுக்கணும்மா... கண்ணால காங்கிறத காதால கேக்கிறத அது சொல்லுது...

முனி: சரி சரி இதுகூட பேசிகிட்டிருந்தா பேருபதிய ஏலாதிண்ணைக்கு நான் வர்றேன்...

மல: ஏம்மா... அப்பா இம்முட்டு நல்லவரா இருக்காரு... குடிச்சா மட்டும் உன்னை ஏன் போட்டு அடிக்கிறாரு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரு: (பெருமூச்சுடன்) ம்... எல்லாம் எங்க தலைவிதி...

மல: தலை விதின்னா என்னம்மா...

மரு: தலை விதின்னா எங்க தலைல கடவுள் எழுதின எழுத்து...

மல: ஏன் அவர் அப்பிடி எழுதினாரு? அவருகிட்ட கேட்டா அழிச்சுபிட்டு மாத்தி எழுத மாட்டாரா...

மரு: அடி போடி அங்குட்டு... நீ வேணும்னா போயி கடவுளிட்ட கேட்டுப்பாரு...

மல: ஏம்மா கடவுள் தானே எல்லாத்துக்கும் பெரியவரு... நம்ப தொரையக் காட்டிலும் பெரியவருதானே...

மரு: ஆமா அதுக்கென்ன?

மல: அவரு நெனைச்சாருன்னா அப்பாவை குடிக்காம செய்யலாம் தானே...

மரு: அவரு நெனைக்கணுமே... அவருக்கு எவ்வளவு வேலை... நம்பளப்பத்தி கவனிக்க எங்க நேரம்...

மல: நான் கேக்கப் போறேம்மா அவரு கிட்டபோயி...

மரு: சும்மா ஒலம்பிகிட்டிராம ஒன் பொஸ்தகத்த எடுத்து வைச்சுப் படிடி...

(இடையிசை)

மல: வள்ளி வள்ளி... கொஞ்சம் நில்லுவேன்...

வள்: என்ன மலர்க்கொடி, டக்குனு கேளு நான் போவணும் ஊட்டில தேடுவா...

மல: ஏன் வள்ளி, கடவுளு வானத்தில தானே இருக்காரு...

வள்: ஆமா...

மல: அவருகிட்ட எப்பிடிப் போறதாம்...

வள்: அவருகிட்ட நாம்ப போவமுடியாது...



மல: அப்பிடீன்னா?

வள்: செத்தவங்கதான் கடவுளு கிட்டப் போவலாம்...

மல: உனக்கு எப்படித் தெரியும்?

வள்: எங்க அத்தை செத்தப்போ எங்கம்மா சொல்லிச்சு, அத்தை கடவுளுகிட்டப் போயிடிச்சின்னு...

மல: நானும் கடவுளுகிட்டப் போவணும்டீ...

வள்: நீ செத்தாப்பொறவு தான் போவலாம்...

மல: உங்க அத்தை எப்பிடி செத்திச்சு...

வள்: அதுக்கு வருத்தம் வந்து செத்திச்சு...

மல: எனக்கு முந்தி வருத்தம் வந்தப்போ நான் சாவல்லியே...

வள்: நீ நல்ல மருந்து குடிச்சிருப்பே...

மல: ஆமா... ஆமா...

வள்: எங்க பெரியப்பா வோட மவன் ஒருத்தன் காரில அடிபட்டு செத்து போனானாம்...

மல: காரில அடிபட்டு சாவ எனக்கு பயம்டி...

வள்: சில ஆக்க மருந்து குடிச்சும் சாவாங்கடி...

மல: பொய்யி... வருத்தம் மாறணும்னு தானே மருந்து குடிப்பாங்க...

வள்: நெசமாடி எங்க பக்கத்தூட்டில கௌரி கௌரீன்னு ஒரு அக்கா இருந்திச்சு நல்ல செவப்பு நல்ல அழகு... அது மருந்து குடிச்சுத்தான் செத்துப் போச்சாம்... எங்க அம்மாவும் அப்பாவும் பேசிக்கிட்டப்போ நான் கேட்டேன்...

மல: மருந்தின்னா என்ன மருந்து...

வள்: மூட்டைப் பூச்சிசாவுறதுக்குன்னு போடுவாங்களே அந்த மருந்துடி...

மல: (அருவருத்து) ஆக்... அதூட்டு நாத்தம் எனக்கு பிடிக்காது...

வள்: சரி சரி நேரம் போச்சு நான் போறேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல: (தனக்குள்) மருந்து வாங்க காசு வேணுமே... என்ன செய்வம்... ஆ... என் சல்லி முட்டி இருக்குதானே...

(இடையிசை)

மல: (மலர்க்கொடி சத்தி எடுக்கும் ஓசை) உவாக்... உவாக்...

மரு: என்னடி... (திகைத்து) என்னடி இது... ஏங்க இங்க வந்து பாருங்களேன்... ஐயோ மவளே... என்னடி செஞ்சே...

முனி: என்னம்மா... என்ன செய்யிது... என்னடியிது மூட்டைப்பூச்சி மருந்து வாசம் வருது... ஐயையோ மவளே... என்னத்தடி சாப்பிட்டே...

மல: அப்பா... நான்... நான் சாவப் போறேம்பா...

முனி: ஐயையோ அப்பிடி சொல்லாதம்மா...

மல: ஏம்பா என் வாய மூடுறீங்க... என்னை பேச விடுங்கப்பா... நான் செத்தாப்பொறவு... கடவுளிகிட்டப் போயி... உங்களுக்கா கேக்கப் போறேன்பா... அப்புறம் நீங்க குடிக்க மாட்டீங்க... ஏம்பா அழுறீங்க...

முனி: ஐயோ... என் மகளே... என் மகளே நீ சாவக்கூடாதும்மா சாவக்கூடாது...

மல: நான் செ... செத்தாத்தான் கடவுளுகிட்டப் போவலாம்பா... அம்மாவோட தலையில எழுதியிருக்கிறதையும் மாத்தி எழுத வைக்கணுப்பா... நான்... நான்... நா... போறேம்...பா...

முனி:<br>மரு: } மலர்... மலர்...எங்களை விட்டிட்டு போய்ட்டியாம்மா...

முனி: கடவுளே, என் குடிய நிப்பாட்டுறதுக்கா நீ என் மகளோட உயிரையே விலையா எடுத்துகிட்டியா... அம்மா... மலர்க் கொடி... இனி நான் குடிக்க மாட்டேம்மா... சத்தியமா குடிக் கவே மாட்டேன்... கண்ணைத் தொறந்து இந்தப் பாவி அப்பாவைப் பாக்க மாட்டியாம்மா...

(முடிவிசை)



***கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேல் புண்ணென் றுணரப் படும்.*** *(குறள்: 575)*

# ஓர் உயிர் ஊசலாடுகிறது

பாத்திரங்கள்: சித்தார்த்தன்<br>தேவதத்தன்<br>விஜயன்<br>அரசர்<br>குருதேவர்

குரு: சித்தார்த்தா, அம்பை வைத்துக் கொண்டு என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? அதோ அந்தப் பழத்தை எய்து வீழ்த்து பார்ப்போம்.

சித்: குருவே, கேட்பதற்கு மன்னிக்க வேண்டும்... இந்த வில்வித்தையால் எனக்கு யாது பயன்?

குரு: என்ன சித்தார்த்தா அப்படிக் கேட்டு விட்டாய்... இராஜ வம்சத்தைச் சேர்ந் தவர்கள் சகல கலைகளையும் கற்றுக்கொள்வது நீ அறியாததா?

சித்: அறிவேன் குருவே, ஆனாலும் மறத்தின் பாற்பட்ட இவ்வித்தையில் ஏனோ என் நாட்டம் செல்லுவதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு: மறத்தைப் பற்றி இப்போது ஏன் சிந்தனை? வில்வித்தையில் தேர்ந்தவன் தான் போர்க்களத்தில் வெற்றி வாகை சூட முடியும்... அரசனாகப் போகும் உனக்கு இது தெரியும்தானே.

சித்: உயிர்களைக் கொல்வது பாவம் என்று அன்று கற்பித்தீர்களே?

குரு: ஆமாம்.

சித்: அப்படியானால் போர்க்களத்தில் மட்டும் உயிர்களைக் கொல்வது எப்படி நியாயமாகும்?

குரு: அது வீரம். உயிர் துறக்கத் துணிந்தவர்கள் தாம் போரில் பங்கு கொள்வர். அவர்களைக் கொல்வது பாவமில்லை...

சித்: புரியவில்லையே...

குரு: போகப் போகப் புரிந்து கொள்ளுவாய்...

சித்: இப்போ நான் போக விடை தாருங்கள் குருவே...

குரு: சரி... பாடத்தைப் பின்னொரு நாளில் வைத்துக் கொள்ளலாம். மனம் ஒன்று படாமல் பயிலும் வித்தை பயனற்றது... நீ போ...

சித்: நன்றி குருவே சென்று வருகிறேன்...

குரு: என்ன தேவதத்தா இவ்வளவு நேரமும் எங்கே சுற்றி விட்டு வருகிறாய்?

தேவ: மன்னிக்க வேண்டும் குருவே. தாங்கள் கற்றுத்தந்த கலையைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்று புறப்பட்டேன்...

குரு: அப்படியா...

தேவ: ஆமாம் குருவே... காடுமேடெல்லாம் சுற்றி அலைந்ததுதான் கண்டபலன்... ஒரு பறவைதானும் கண்ணிற் படவில்லை...

குரு: சரி பேசியது போதும்... எடு வில்லை... தொடு கணையை...

தேவ: இலக்கு...

குரு: அதோ தெரிகிறதே அந்த மாங்கனிதான். உனதிலக்கு...



தேவ: இதோ பாருங்கள் ஒரே முறையில் விழுத்திக் காட்டுகிறேன்.

(நாண் தொடுத்து விடுபடும் ஒலி)

குரு: ஆகா... அற்புதம்... உண்மையாகவே நீ கெட்டிக்காரன் தான்...

தேவ: நன்றி குருவே...

அர: (வந்தபடி) தளபதிக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான்...

குரு: ஆமாம் அரசே, மீன் குஞ்சுக்கு நீச்சல் பயிற்றி வருவதில் லையே... அது கற்காமல் கைவரும் திறமை அல்லவா...

அர: சரியாகச் சொன்னீர்கள்... ஆமாம் எங்கே என் மகன் சித்தார்த்தன்...

குரு: இப்போது தான் இந்தப் பக்கமாகச் சென்றார் இளவரசர்.

அர: இயற்கையை ரசிப்பதென்றால் அவனுக்கு அபாரப் பிரியம் தான்...

குரு: ஆனால்...

அர: என்ன குருதேவா, அந்த ஆபத்தான பதம் இப்போது எதற்கு? அறியச் சொல்லும், தயக்கம் வேண்டாம்...

குரு: அரசகுமாரருக்கு அழகை ரசிக்கும் மனம் இருக்கிறது. அறிவைத் தேடும் ஆவல் இருக்கிறது. ஆனால், வீரம் விளைக்கும் கலைகளில் மட்டும் ஏனோ நாட்டத்தைக் காணோம்.

அர: அப்படியா? அரச குலத்து வழித்தோன்றல் சாத்வீகத்தை தேடுவது சரியல்லவே... குருவே...

குரு: நானும் அதைத்தான் அரசே யோசித்தேன்...

அர: அன்னையால் ஊட்டி வளர்க்கப்பட்டதால் அந்தக் குணம் படிந்து விட்டது போலும்.

குரு: உண்மைதான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர: நானும் சிறுவனாக இருக்கும்போது அப்படித்தான் இருந்தேன்... காலப்போக்கில் அது மாறி விடும்.

குரு: மாறும். மாறவேண்டும். அதுதான் எல்லோருக்கும் நல்லது.

அர: சரி சரி நீங்கள் பாடத்தைத் தொடருங்கள்... நான் வரு கிறேன்...

குரு: நல்லது அரசே...

(பட்சிகளின் ஒலி)

சித்: விஜயா, அதோ பார்த்தாயா அந்த வானவில்லை. எத்தனை நிறங்கள் எத்தனை அழகு.

விஜ: ஆமாம் சித்தார்த்தா அதன் அழகினைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

சித்: இயற்கையின் கோலங்கள் எத்தனை அழகானவை! எத்தனை விசித்திரமானவை!

விஜ: இயற்கை எல்லாம் அனுபவிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

சித்: ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? இயற்கை எல்லோருக்கும் சொந்தமானது தானே...

விஜ: ஆனால் அதை நயக்கும் உள்ளம் எல்லோருக்கும் கிடை யாதே நண்பா...

சித்: அதோ, அங்கே பார்த்தாயா அந்தப் பறவைகள் அணி அணியாகப் பறக்கும் அழகை...

விஜ: மாலைக்காலமாகி விட்டதல்லவா... அவை தத்தம் இருப்பிடம் நோக்கி விரைகின்றன...

சித்: இந்த அந்தி வானத்தின் வனப்பும் கருங்குயில்களின் கீதமும் அசைந்தாடிச் செல்லும் ஆற்றின் எழிலும் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றன... தெரியுமா.! என் உள்ளமெல்லாம் களிப்பில் நிறைந்து வழிகிறது நண்பா...



விஜ: நேரமாகி விட்டது சித்தார்த்தா... அரண்மனையில் தேடுவார் கள் வா போகலாம்...

சித்: போகவே மனமில்லை... என்றாலும் போகத்தானே வேண்டும். சரி, வா புறப்படுவோம் நாளை மீண்டும் வரலாம்...

(இடையிசை)

(படபடவென சிறகுகளை அடித்தபடி புறா வருமொலி)

சித்: என்ன இது, ஏன் இந்தப் புறா இப்படித் தத்தித் தத்திப் பறக்கிறது.

விஜ: புறா உன் காலடியில் அல்லவா வந்து விழுந்து விட்டது...

சித்: ஐயையோ! என்ன கொடுமை இது... இரத்தம் ஒழுகி ஓடுகிறதே...

விஜ: அதன் உடலில் அம்பு பாய்ந்திருக்கிறது...

சித்: வெண்பட்டுப் போன்ற இதன் மேனியில் அம்பு எப்படி ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது பார்த்தாயா அப்பப்பா! எவ்வளவு இரத்தம்... இதை அம்பெய்து சித்திரவதை செய்ய எந்தச் சண்டாளனுக்கு மனம் துணிந்ததோ...

விஜ: ஆனால் நல்ல வேளை... புறா இன்னும் இறக்கவில்லை...

சித்: ஆமாம்... இதைச் சற்றுப் பிடித்துக்கொள்... நான் மெதுவாக அந்த அம்பை உருவி எடுத்து விடுகிறேன். (அம்பை எடுப்ப தாகப் பாவனை- ஒலி)

விஜ: அப்பாடா ஒரு மாதிரியாக எடுத்துவிட்டாய்... பொறு நான் பச்சிலை கொஞ்சம் எடுத்து வருகிறேன்...

சித்: சிவந்த கால்கள், சின்னஞ்சிறிய மூக்கு... பட்டுப்போன்ற உடல் இயற்கையின் அற்புதமான சிருஷ்டி... (புறாவிடம்) துடிக்காதே சின்னப்புறாவே... பொறு... பொறு... உனக்குப் பச்சிலை வைத்துக் கட்டிவிடுகிறேன்... பிறகு நீ உன் இஷ்டம் போலப் பறந்து திரியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜ: (வந்தபடி) இங்கே தா அதை... நான் பக்குவமாகப் பச்சிலையை வைத்துக் கட்டுகிறேன்.

சித்: இந்த அம்பின் அலகு எவ்வளவு கூர்மையாக இருக்கிறது பார். ஆ... மெதுவாக அழுத்தும் போதே என்ன வலி வலிக்கிறது... இந்தச் சிறிய பறவையின் மெல்லிய உடம்பில் பாய்ந்த போது எவ்வளவு வேதனையை உண்டாக்கியிருக்கும். நினைக்கும் போதே உடம்பெல்லாம் சிலிர்க்கிறதே...

விஜ: அங்கே பார்... யாரோ ஓடி வருவது தெரிகிறது...

சித்: ஆமாம் தேவதத்தன் தான் வருகிறான்...

விஜ: உன் தந்தையார் உன்னைத் தேடி வரும்படி அனுப்பியிருப்பார் போலும்.

தேவ: (இளைத்தபடி) அப்பாடா நல்ல வேளை... புறா உன்கையில் தான் கிடைத்திருக்கிறது. எங்கே தப்பிப் போய்விட்டதோ என்று பயந்தே போனேன்.

சித்: நீ தானா இந்தக் கொடிய காரியம் செய்தவன். என் உடலில் இந்த அம்பின் கூர்மையான நுனி லேசாக அழுந்திய போதே எவ்வளவு வலி வலித்தது தெரியுமா? பாவம்! இந்தச் சின்னஞ் சிறு பறவையின் மெல்லிய உடலில் இவ்வளவு பெரிய அம்பை எய்திருக்கிறாயே. அது வேதனையால் எப்படித் துடித்ததென்பதை நீ பார்த்திருக்கவேண்டும்.

தேவ: போதும் உன் புத்திமதி. பறவையின் மேல் அம்பை எய்தால் அது அடிபட்டுத் துடிதுடிக்கும் என்று எனக்கும் தெரியும். இதை நீ சொல்லித்தான் நான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை...

சித்: அப்படியானால் அதன் மீது ஏன் அம்பை எய்தாய்?

தேவ: பறக்கின்ற ஒரு பறவையை எய்து வீழ்த்துவது எவ்வளவு கஷ்டம் என்பது உனக்குத் தெரியுமா? ஏன் வீண் பேச்சு... புறாவை என்னிடம் தந்து விடு...

சித்: தேவதத்தா இந்தப் புறாவையா கேட்கிறாய்? நான் தர மாட்டேன்... ஒரு போதும் தரமாட்டேன்...



தேவ: நான் அடித்து வீழ்த்திய புறாவை வைத்துக்கொண்டு உன்னுடைய உடைமை போல் பேசுகிறாய்... இது முறையல்ல... தர்க்கம் செய்யாமல் தந்து விடு அதை என்னிடம்.

சித்: நீ என்னை என்ன செய்தாலும் இந்தப் புறாவை நான் உன்னிடம் தரப்போவதில்லை. அது உன் கையில் அகப்பட்டு மேலும் சித்திரவதைப் படுவதை என்னால் பொறுக்கமுடியாது.

தேவ: கொடுக்க முடியாதா? சரி பார்க்கலாம். உன்னிடம் வாதிடுவதிலும் அரச நீதிமன்றத்தில் போய் நான் முறையிட்டால் பலனுண்டு.

சித்: சரி பார்க்கலாம்... வா விஜயா போவோம்...

(இடையிசை- மக்களின் கசமுசப் பேச்சு)

தலை: சற்று அமைதியாக இருங்கள்... இது ஒரு விசித்திரமான வழக்குத்தான். ஆனாலும் இங்கு கூடியிருக்கும் அறிஞர்களின் தீர்ப்பு ஒரு மனத்ததாகவே உள்ளது. அம்பை எய்த தேவதத்தர் புறா தம்மைச் சேரவேண்டுமென்கிறார். ஆனால் புறாவைக் காப்பாற்றிய சித்தார்த்தரோ அதைத் தனதுடைமை என்கிறார். இதில் எமது முடிவு எதுவென நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறீர்கள். கூறுகிறேன்... உயிரைப் பறிக்க முயலும் ஒருவருக்கு அந்த உயிரின் மேல் உரிமை கிடையாது. உயிரை இழந்த உடலுக்கு அவர் உரிமை கொண்டாடலாம். அது நியாயம். ஆனால் இந்தப் புறா இறக்கவில்லை... உயிரைக் காப்பவரே என்றும் உயிருக்கு உடைமையானவர். எனவே இந்தப்புறா, அதைக் காப்பாற்றிய சித்தார்த்தருக்கே சொந்தமாகிறது...


(மக்களின் கரவொலி)

சித்: சமாதானத்தின் சின்னமான வெண்புறாவே, உனக்கு விடுதலை... பறந்து போ... அஞ்சாமல் சிறகடித்துப் பறந்து போ...

(முடிவிசை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1963 இல் கொழும்பு, சென் பெனடிக்ற் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் இவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது. கல்லூரித் தமிழ் மன்றத்தாரின் தமிழிலக்கிய விழாவில் முதன்முதலாக நாடகம் எழுதி நடித்து நெறியாள்கையும் செய்தார்.

1968 இல் 'மறை முதல்வன் நாடக மன்றத்தின்' சார்பில் இவரது 'முசுப்பாத்தி தான்' எனும் நாடகம் அரங்கேறியது. K. S. பாலச்சந்தரன் எனும் நடிகர் அதன் மூலம் கலையுலகுக்கு அறிமுகமானார்.

1970 இல் இவரது 'சதுரங்கம்' நாடகம் பல விமரிசகர்களின் விழிகளை உயர்த்த வைத்தது. காலஞ்சென்ற ஜனாப் சுஹைர் ஹமிட் (வாடகைக்கு அறை) திரு. தாஸீஸியஸ் (கோடை) காலஞ் சென்ற S. S. கணேசபிள்ளை காலஞ்சென்ற கி. சண்முகம் (இதுவும் ஒரு நாடகம்) போன்றவர்களின் நெறியாள்கையில் இவர் நடிப்பு பட்டைதீட்டப்பட்டது.

1969 இன் பிற்பகுதியில் இலங்கை வானொலியால் நடாத்தப்பட்ட முதலாவது நாடகப்போட்டியில் இவரது 'நீதியின் நிழலில்' எனும் நாடகம் முதற் பரிசீட்டியது.

சிறுகதை, கவிதை, திறனாய்வு, நாடகம் என நவீன தமிழிலக்கியத் துறை சார்ந்த சகல துறைகளிலும் கால் பதித்துப் பல பரிசுகளை இவர் சுவீகரித்துக் கொண்ட போதிலும் கூட நாடகமே இவரின் சுவீகரப் பிள்ளையானது.

பத்திரிகை, மேடை, வானொலி, தொலைக்காட்சி என சகல ஊடகங்களிலும் இவரது நாடகங்கள் நடைபயின்றுள்ளன.

வானொலி நாடகங்களில் சிறுவர் நாடகங்கள், சமூக யதார்த்த நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், துப்பறியும் நாடகங்கள், மர்ம நாடகங்கள், இலக்கிய, புராண, வரலாற்று நாடகங்கள் என்று அதன் பல்வேறு பரிமாணங்களையும் பரிசோதித்துப் பார்த்து பல்வேறு மொழிவழக்குகளையும் வாலாயப்படுத்தி வெற்றி கண்டுள்ளார்.

இவர் எழுதிய 25க்கும் மேற்பட்ட சிறுவர் நாடகங்களும், 50 க்கும் மேற்பட்ட நகைச்சுவை நாடகங்களும், 30க்கும் மேற்பட்ட ஏனைய நாடகங்களும் இதற்குச் சான்றாக இலங்குகின்றன.

ஓர் ஆசிரியனாக எழுத்தாளனாக, நடிகனாக, அறிவிப்பாளராக பல்வேறு முகங்களைக் கொண்டவர் மறைமுதல்வன்.

இவரது ஆளுமையின் ஒரு சிறுகூறைமட்டுமே புலப்படுத்துவன - இச் சிறுவர் (மலர்) நாடகங்கள். அதிலும் கூட இவரது தனித்துவம் மிளிர்வதை உணரக் கூடியதாக உள்ளது.

வாழ்த்துக்களுடன்
**சிதம்பரப்பிள்ளை சிவகுமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org